# உதயன்

சுடர் 27
கதிர் 95

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 17 புதன்கிழமை (29/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணை; போராட்டம் நடத்த அரச ஊழியருக்கு நிர்ப்பந்தம்

### நீதிமன்றத்தை நாடுவோம் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, பெப்.29

ஜெனிவாவில் இலங்கை மீது கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவும் ஆசியும் வேண்டி வடக்கிலுள்ள அரச அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபடுமாறு அரசு பலவந்தப்படுத்தியுள்ளது என்று உதயனுக்கு தெரியவந்துள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கீழுள்ள அரச திணைக்களங்கள், மேற்படி பேரணியை முன்னெடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளமை தமக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதாக வடக்கிலுள்ள பல அரச அதிகாரிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

நேற்று மாலை மாவட்ட அரச அதிபர்களின் தொலைபேசி அழைப்புக்கள் ஊடாகப் பிரதேச செயலகங்கள் திணைக்களங்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. இன்றைய தினம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்

27

# அமெ., பிரிட்டன் ராஜதந்திரிகள் 20 பேர் ஜெனிவாக் களத்தில்

### இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றுவதில் மேற்குலகம் கங்கணம்

கொழும்பு, பெப்ரவரி 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையைத் தோற்கடிக்கக் கொழும்பு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுவரும் சூழ்நிலையில், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளைச் சேர்ந்த 20 பேர் கொண்ட உயர்மட்ட இராஜதந்திரக் குழுவொன்று நேற்று ஜெனிவாவில் களமிறக்கியுள்ளது.

இந்தக் குழுவில் அமெரிக்காவைச் சேர்ந்த 15 உயர் இராஜதந்திரிகளும், பிரிட்டனைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர் என்று ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குமேலாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மிக மூத்த அதிகாரியான மரியா ஒரேரோவையும் வோஷிங்ரன், ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. ஒரேரோ, இராஜாங்கத் திணைக்களத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான கீழ்நிலைச் செயலராகப் பணியாற்றி வருகிறார்.

ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்பாக அவரைக் கொழும்புக்கு அனுப்பிவைத்திருந்தது அமெரிக்கா. இலங்கை

27

## சர்வதேசத்துக்கு அடிபணியோம்

### கோத்தபாய



கொழும்பு, பெப்.29

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை தூக்கிப்பிடிக்கும் சர்வதேச சக்திகளுடன் இணைந்து தனி ஈழத்தைப் பெற்றுக் கொள்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் முயற்சிக்கின்றனர். இதற்கு நாம் ஒருபோதும் அடி பணிய மாட்டோம் - என்று கர்ஜித்தார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

28

## 3,000 பேர் வாக்களிக்க முடியுமா?

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலில், வாக்களிக்கத் தகுதியுள்ள 3000 இற்கும் அதிகமானோர் முறையான அடையாள அட்டை இல்லாததால் அவர்கள் வாக்களிக்க முடியாமல் போகலாம் எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இம்மக்கள் இடம்பெயர்ந்தோர் முகாமில் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பயன்படுத்தி வாக்களிக்க முடியுமா எனக் கேட்டு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு தான் கடிதம் எழுதியுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்தது.

## சிறைக் கைதிகளுக்கு விளக்கமறியல்

மகஸீன் சிறைச்சாலையில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட 46 சிறைக் கைதிகளை எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட 59 சிறைக் கைதிகளில் 46 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் 13 பேரை கைதுசெய்ய வேண்டியுள்ளதாகவும் வழக்கு விசாரணையின்போது மேலதிக நீதவான் பிரகார்ஷ ரணசிங்கவிடம், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறினர்.

## இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசு

வைத்தியசாலைகளில் லீப் வருடத்தில் 29ஆம் திகதியான இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு நாளை முதலாம் திகதி பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வரும் என்பதைக் கருத்தில் கொண்டு சிங்கர் நிறுவனம் இன்று பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசில்களை வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யானை தாக்கி ஒருவர் பலி

அநுராதபுரம் கல்னேவ பொலிஸ் பிரதேசத்தில் காட்டுயானை தாக்கி நபரொருவர் நேற்று பலியாகியுள்ளார். குறித்த நபர் தொழிலுக்காக அதிகாலை 5 மணிக்கு கல்னேவ பிரதேசத்தில் நடந்து சென்றபோதே இவ்வாறு யானைதாக்கி மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். குறித்த நபரது சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும், வைத்திய பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி




கொழும்பு, பெப். 29

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத அளவுக்கு நேற்று வீழ்ச்சி அடைந்தது. காலையில், ஒரு டொலரின் இலங்கைப் பெறுமதி 123.20 ரூபாவாக இருந்தது. எனினும் மத்திய வங்கி எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து மதியத்துக்கு மேல் டொலரின் விலை 121 ரூபாவுக்குக் குறைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 121.30 ரூபாவாக இருந்த அமெரிக்க

26

## இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரிக்கும்

கொழும்பு, பெப்.29

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை ஐரோப்பிய ஒன்றியம் ஆதரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக்கட்ட போரின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரப் பேரவை ஆதரவு வழங்கவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்குபற்றிய 'ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரப் பேரவை' கூட்டம் நேற்றுமுன்தினம் பிரசெல்ஸில்

26

## ஜெனிவாவில் மீண்டும் துரோகம் இழைக்காதீர்

### இந்தியப் பிரதமருக்கு வைகோ கடிதம்

கொழும்பு, பெப்.29

''ஜெனிவா மாநாட்டில் இந்த முறையும் நீங்கள் இலங்கையை ஆதரிப்பீர்களாயின் வரலாறு ஒருபோதும் இந்தியாவை மன்னிக்காது. ''மீண்டும் நீங்கள் துரோகமிழைக்கக்கூடாது. அவ்வாறு செய்வீர்களா

27

## மக்களை அச்சுறுத்தி சர்வதேசத்திடம் நாட்டைக் காட்டிக் கொடுத்தது அரசே

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு,பெப்.29

அரசின் மாற்றுக்கருத்துகள் காரணமாக எமக்கும், சர்வதேசத்திற்கும் அரசின் மீது இருந்த நம்பிக்கை இல்லாதுபோயுள்ளது. அரசு மக்களை அச்சுறுத்திப் பலாத்காரமான முறையில் சர்வ தேசத்திடம்

27

கிருபா லேணர்ஸ் சுன்னாகம் கிளை

கோலாகலமாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்



அவர்களால் 29.02.2012 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு

திறந்து வைக்கப்படவுள்ளது



F18395

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவின் உத்தரவாலேயே தமிழ் பொலிஸ் அதிகாரிகள் 'அவுட்'

**இந்த நால்வரையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாகப் பதவி உயர்த்தினால் அவர்களுக்கு தமிழ் மாவட்டங்களில் நியமனங்களை வழங்க வேண்டும்.**

கொழும்பு, பெப்.29

சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பதவி உயர்வில் தமிழ சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நால்வர் புறக்கணிக்கப்பட்டமை பாதுகாப்புச் செயலர் கோத்த பாய ராஜ பக்ஷவின் உத்தர விலேயே இடம்பெற்ற தாகபாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களையும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்த்தினால் அவர்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் நியமிக்க வேண்டி ஏற்படும். இவ்வாறு தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களையே உயர் பொறுப்புகளில் நிய மித்தால் அரசுக்கு சிக்கல் ஏற்படும். அதனாலேயே இந்த நால்வரின் பதவி யுயர்வுகளை இடைநிறுத்து மாறு பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டதாக அறிய வருகின்றது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கான நேர்முகத் தேர்வில் தற்போது பொலிஸ் திணைக்களத்தின் அதிகூடிய தகுதிகளைக்கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்ளான சிறிகோணேஸ்வரன், அரசரட்ணம், ரிஇந்திரன், எல்.நோயல் பிரன்ஸிஸ் ஆகிய நான்கு தமிழ் உயரதிகாரிகளும் தோற்றியிருந்தனர். அவர்களுக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம் வழங்கப் படக் கூடிய தகுதிகள் காணப் பட்டும் அரசினால் திட்ட மிட்ட முறையில் இந்த நால்வரும் புறக்கணிப்பட்டிருப் பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அரசு இதனை வேண்டும் என்றே மேற் கொண்டாதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதன் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலரே இருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரிய வந்திருக்கிறது.

இந்த நால்வரையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாகப் பதவி உயர்த்தினால் அவர்களுக்கு தமிழ் மாவட்டங்களில் நியமனங்களை வழங்க வேண்டும். அவ்வாறு நியமனங்களை வழங்கினால் அந்த மாவட்டங்களின் சட்டம், பாதுகாப்பு நடவடிக்கைகள் தமிழ் உயரதிகாரிகள் கைகளில் போய்விடும். இது சில வேளைகளில் அரசுக்கே சிக்கல் நிலையைத் தோற்றுவித்துவிடும். இந்த அச்சம் காரணமாகவே நான்கு தமிழர்களும் இவ்வாறு புறக் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்றாக தமிழ்ப் பொலிஸாரைத் தமிழ்ப் பகுதிகளில் நியமித்து அந்தப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைச் சரியாக நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையையும் கணக்கில் எடுக்காது அரசு செய்துள்ள இந்தத் திட்டமிட்ட புறக்கணிப்பு மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதும் கேள்விக்குறியாகி உள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (த)

## திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றினார் வைத்தியர்

### நஷ்ட ஈடு கோரி பெண் வழக்கு

யாழ்ப்பாணம், பெப். 29.

வைத்தியர் ஒருவர் திருமணம் செய்வதாகக் கூறி சீதனத்துடன் திருமணப் பதிவு செய்துவிட்டுப் பின்னர் ஏமாற்றினார் என்று கூறி வைத்தியருக்கு எதிராக 40 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரஸ்தாப வைத்தியர் சீதனமாக 50 லட்சம் ரூபா பெறுமதியான காணியைப் பெற்றுக்கொண்டுள்ளார். அது தவிர கொழும்பிலுள்ள ஆடம்பர விடுதி ஒன்றில் திருமணம் நடத்துவதற்கான முற்பணமும் பெண் வீட்டாரினால் செலுத்தப்பட்டு விட்டது.

இந்த நிலையில் குறித்த பெண்ணின் நடை, உடை, கலாசாரங்கள் பிடிக்கவில்லை என்று கூறி முரண்பட்டு பெண்ணைத் திருமணம் செய்ய மாட்டேன் என்று வைத்தியர் கூறியுள்ளதாக அந்தப் பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் பணிபுரியும் 32 வயதுடைய பிரஸ்தாப வைத்தியர் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். 28 வயதுடைய பிரஸ்தாப பெண் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர். இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் மேற்படிப்பை மேற்கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-04)

## கல்வி சாரா ஊழியர்கள் இன்றுமுதல் போராட்டத்தில்

யாழ்ப்பாணம், பெப். 29.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கம் சம்பள உயர்வு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி புறக்கணிப்புப் போராட்டத்தில் இன்று குதிக்கவுள்ளதாக பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இதற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கமும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் த.அன்பழகன் அறிவித்துள்ளார்.

சம்பள உயர்வு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர் இன்று புறக்கணிப்பு போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்பு ஓய்வூதியம் தொடர்பிலான கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று செவ்வாய்க்கிழமை உயர் கல்வி அமைச்சர் சந்திப்பு தோல்வியில் முடிவடைந்ததை அடுத்தே போராட் டம் முன்னெடுக்கப்பட உள்ளது என அந்தச் சங்கம் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் வைத்து அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களில் பிரதான கோரிக்கைகளான 25 சதவீத மேலதிக கொடுப்பனவு, ஓய்வூதியத் திட்டம், வீட்டுக் கடனுதவித் திட்டம் மற்றும் ஏனைய விடயங்களை உயர் கல்வி அமைச்சர் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் அச்சங்கம் நேற்று குற்றஞ் சாட்டியுள்ளது.

இதேவேளை இந்தப் போராட்டம் குறித்து நேற்றிரவு யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கத் தலைவர் த.அன்பழகனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

சம்பள உயர்வை வலியுறுத்தி விடுத்த கோரிக்கைக்கு உரிய பதிவு வழங்கப் படாததை அடுத்து இன்று புதன்கிழமை நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு எமது சங்கமும் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றார் அவர். (15)



ராவய பத்திரிகையின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது கூடியிருக்கும் தலைவர்கள்.

# படகுச் சேவையில் அசௌகரியம் அனலைதீவு பயணிகள் விசனம்

அனலைதீவு - ஊர்காவற்றுறைக்கு இடையில் பயணிகள் படகுச் சேவையில் ஈடுபடும் படகுகளில் பயணிகள் நலன் பேணப்படுவதில்லை என பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிப் படகுச் சேவையில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலதிகமாகப் பயணிகள் ஏற்றப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி மூடைகள், பொருள்களும் அளவுக்கதிகமாக ஏற்றப்படுகின்றன. பயணிகளுக்கு உயிர்காப்பு அங்கிகளும் வழங்கப்படுவதில்லை.

மேலும் மீன்களுடன் பயணிகள் ஏற்றப்படுவதால் வேலை நிமித்தம் செல்பவர்களின் உடைகள் அழுக்காகின்றன. அத்துடன் படகில் சுத்தமும் பேணப்படுவதில்லை. படகின் மேற்புறத்தில் அமர்ந்தும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதால் படகின் சமநிலையும் பாதிப்படைகின்றது. இத்தகை காரணங்களால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாகப் படகு உரிமையாளர்களிடம் தெரிவிக்கப்பட்ட போதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இதற்கெனப் படகுகள் உரிமையாளர் சங்கமொன்று இயங்கிவருகின்ற போதிலும் இந்தச் சங்கமும் உரிய நடவடிக்கை எடுக்க முயலவில்லை. இந்தக் குறைபாட்டை சுட்டிக் காட்டும் பயணிகள் மீது படகுச் சிப்பந்திகள் நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர்.

மேலும் அவர்கள் படகைச் செலுத்தும் வேளையில் மதுபோதையில் இருப்பதால் தாம் உயிரோடு மறு கரையை அடைவோமோ என்ற அச்ச உணர்வுடன் பயணிக்க வேண்டி உள்ளது எனவும் அனலைதீவுக்குச் செல்லும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பயணிகள் கொண்டுசெல்லும் பொதிகளுக்குச் சில படகுகளில் நியமிக்கப்பட்ட கட்டணத்துக்கு மேலதிகமாகக் கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து பயணிகளுடன் பொருள்களை ஏற்றுவதைத் தடுத்து தனியான ஒரு படகுச் சேவையை ஏற்படுத்தி உதவுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-251)

## நாடகமாடுகிறது கூட்டமைப்பு

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவது போல நடித்து காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டமைப்பு கையாளும் கபடத்தனமான நடவடிக்கைகளுள் ஒன்றே ஜெனிவா மாநாட் டுத் தவிர்ப்பு - என்று அதிரடியான குற்றச்சாட்டொன்றை 'உதயனு'க்குத் தெரிவித்துள்ளது தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம்.

கூட்டமைப்பின் அரசியல் தீர்மானங் களை அரசு அணு அணுவாக அலசிப் பார்த்தால் அவர்களின் உள் நோக்கம் என்னவென்று தெளிவாகப்புரிய வருமென்று அந்த அமைப்பு அரசுக்கு அவசர ஆலோசனையொன்றையும் வழங்கியுள்ளது.

சர்வதேசத்தின் பிடிக்குள் இலங்கையை சிக்கவைப்பதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அதிலிருந்து பின்வாங்குகின்றது என்றால், விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதையே எமக்கு மறைமுகமாக உணர்த்துகின்றன. இதனை அரசு புரிந்து கொள்ளவேண்டும் என்று தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நல்லெண்ணத்தைக் காண்பிக்கின்றோம் என்ற போர்வையில், 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான கூட்டமைப்பின் கபடத்தனமே ஜெனிவா மாநாட்டுத் தவிர்ப்பு, இதற்கு அரசு மசியக்கூடாது.

ஆயுதப் போராட்டத்தில் வெற்றிபெற்ற அரசை, அரசியல் யுத்தத்தில் மண்டியிட வைப்பதற்கான கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளப் போவதில்லை என்ற அறிவிப்பின் பின்னணி பாரதூரமானது. சந்தேகத்துக்கு இடமானதுள எனவும் அவர் தெரிவித்தார். (ங-சி)

## சுமைதாங்கி ஏன் இன்று விழுகின்றது?




## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்கள் இடைநிறுத்தம்

வவுனியா, பெப்.29

பகிடி வதையில் ஈடுபட்ட இரு வவுனியா தேசிய கல்வியில் கல்லூரி மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு அனுமதி பெற்ற முதலாம் வருட மாணவர்கள்மீதே பகிடி வதையில் ஈடுபட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளின் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (க-42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சோதனைகளைத் தணிக்க இனியாவது முயலக் கூடாதா?

இலங்கை அரசாங்கம், தான் நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே உலக நாடுகள் அதற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. அதற்கான கால வரையறையுடன் கூடிய வேலைத்திட்டம் அவசியம் என்பதையே வலியுறுத்துகின்றன.-

உண்மையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பொறுப்புக் கூறல் குறித்து எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை - கூறப்படவில்லை. மிகவும் அடக்கமான (Mild) சிபார்சுகளே தெரிவிக்கப்பட்டுள்ளன.-

அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒரு காலவரையறையை நிர்ணயித்து, சர்வதேசத்துக்கு பதில் சொல்வதற்கு அரசாங்கம் தயார் இல்லை. எமது நாட்டின் முன்னே உள்ள சிக்கல் அதுதான்.-

ஆகையால், அமெரிக்காவையும் ஏனைய நாடுகளையும் எதிர்த்துச் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்வதால் எந்தவித பயனும் இல்லை; எதுவும் சாதகமாகக் கைக்கு வரப்போவதில்லை.

இவ்வாறு வெகு தெட்டத் தெளிவாகவும், மிகத் துல்லியமாகவும் புட்டுக்காட்டியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். காத்திரமான அவரது கருத்தை இலங்கை அரசு பொருட்படுத்தும் என்று துளி அளவும் எதிர்பார்க்க முடியாது.

அரசு 'போடும் சன்னதத்தில்' மனோ கணேசனின் குரல் நிச்சயமாக அரசாங்கத் தரப்பின் காதின் செவிப்பறையைச் செயற்பட வைக்க மாட்டாது.

இத்தனைக்கும், இம் மாதம் (பெப்ரவரி) நடைபெற்ற சுதந்திர தின விழாவில், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை ஆறு வார காலத்தில் நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி விளாசி இருந்ததும் ஞாபகத்துக்கு வருகிறது.

மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருப்பது போன்றே, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகளை அரசாங்கம் காலம் தாழ்த்தாமல் நிறைவேற்றியிருந்தால், ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்க மாட்டா என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இத்தனைக்கும், இலங்கை அரசாங்கம் தண்டெடுத்துத் தடல்புடல் பண்ணும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இப்போதைய கூட்டத் தொடரில், குழுவின் அங்கத்துவ நாடுகள் பல ஒன்றிணைந்து (உத்தேசமாக மார்ச் இரண்டாம் திகதியன்று) கொண்டுவரவுள்ள பிரேரணை, இலங்கை அரசாங்கத்தைத் தண்டிக்கும் அல்லது ஓரங்கட்டும் வகையறாக்களில் அடங்கவில்லை.

அவற்றின் சாராம்சத்தைப் பின்வருமாறு வகுக்கலாம்:

* இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அந் நாட்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

* சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* நம்பகமான, சுயாதீனமான விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை அரசாங்கம் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

* ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் இருபதாவது அமர்வுக்கு (எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது) முன்னர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில், ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்ட அறிக்கை ஒன்றை இலங்கை அரசாங்கம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

* இது விடயம் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக அதிகாரிகள் மற்றும் அதன் விசேட பிரமுகர்களிடமிருந்து, ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அரசு பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கிடையில்-

தான் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் பின்னடிக்காமல், முன்வர வேண்டும் என்று பிரிட்டனின் வெளியுறவுத் துறை ராஜாங்க அமைச்சர் ஜெரிமி பிரவுன் ஜெனிவாவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த வேளை சொன்னார்.

இலங்கை அரசு அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் இது விவகாரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் மட்டுமே அங்கத்துவ நாடுகள், தத்தமது தேசங்களில் மனித உரிமைகளைப் பேணுவதனை நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும் - என்றும்-

மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் விடயத்தில், இலங்கை 'அக்கறைக்கு உரிய நாடுகளில் ஒன்றாக' வகுக்கப்பட்டுள்ளதாகவும் - பிரிட்டனின் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவகையில் நோக்கின் -

நல்லிணக்க ஆணைக்குழுவின் ராஜதந்திர அகராதியின் பிரகாரம், அடக்கமானவை எனக் கருதப்படும் சிபார்சுகளைத் தானும் நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசு பின்னடித்தால், அதன் விளைவு பாரதூரமாக மாறும் என்பது துலாம்பரமாகிறது.

இறுதிப் போரின் போது இலங்கை அரசு, அதன் படைகள் போர்க் குற்றம் புரிந்தன என்ற குற்றச் சாட்டுக்கள் - சர்வதேசப் போர் நியமங்கள் மீறப்பட்டன என்ற குற்றச் சாட்டுக்கள் - பொய்யானவை, சோடிக்கப்பட்டவை என்ற நிலையை எடுத்ததே அன்றி நியாயம் சார்ந்த நிறுவல்களை முன்வைக்கவில்லை. அது குறித்து ஆத்மார்த்தமான அக்கறை காட்டவும் இல்லை.

அதுமட்டுமன்றி, போர்க்குற்றங்கள் குறித்து அனைத்துலக ரீதியிலான, சுயாதீனமான விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்ற அனைத்து உலக நாடுகள் பலவற்றின் வற்புறுத்தல்களையும் தட்டிக் கழித்தது.

அந்தக் கோரிக்கைகளைத் தூக்கி வீசி, அவற்றுக்குத் 'தண்ணி காட்டும்' விதத்தில் தனது சொந்தத் திட்டங்களின் பிரகாரம் செயற்பட்டு வந்தது.

அனைத்துலக மட்டத்திலான இடித்துரைப்புகளையும், நெருக்குதல்களையும் தாங்காது, ஒரு வருட கால தாமதத்தின் பின்னர், அழுத்தம் தலைமேல் ஏறிவிடும் என்ற கட்டத்திலேயே, நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்து காட்சி (குடணிதீ) காட்டத் திட்டமிட்டது; தீர்மானித்தது.

இதோ வருகிறது, அதோ வருகிறது என்று ஈற்றில் ஒரு வடிவில் வெளிவந்த அந்த ஆணைக்குழுவின் - தனதே சொந்த ஆணைக்குழுவின் - சில்லறைச் சிபார்சுகளைத் தானும் நடைமுறைப்படுத்தப் பின்னடிக்கும் அரசு, ஒளித்துப் பிடித்து விளையாடும் தனது போக்கை மாற்றுவதற்கு இப்போதாவது முன்வருமா என்பதனைச் சர்வதேசம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அதனைப் பொருட்படுத்தாமல் தனது சொந்தப் பாதையில் நடக்க முனைந்தால் இலங்கை அரசுக்கு இனிச் சோதனைகளாகவே தொடரும். அரசு அவற்றைத் தணிக்க முயலக்கூடாதா?

# திருப்திகரமாகச் செயற்படும் அதிகாரிகளுக்குக் கௌரவிப்பு

## ஆளுநரின் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.29

வடமாகாணத்திலுள்ள அரச திணைக்களங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு திருப்திகரமாக செயற்படும் திணைக்கள அதிகாரிகள் கௌரவிக்கப்படவுள்ளனர் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்திலுள்ள திணைக்கள அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி தொடர்பான செயலமர்வு நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரைநிகழ்த்தும் போதே இ.இளங்கோவன் இவ்வாறு அறிவித்தார்.

திருப்திகரமாக இயங்கும் வட மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்கள் தெரிவு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களுக்குள் உள்ளடங்கும் திணைக்கள அதிகாரிகள் கௌரவிக்கப்படவுள்ளனர் என அவர் அங்கு தெரிவித்தார்.

60 வயது கடந்தவர்களுக்கு மீள் நியமனம் வழங்குவது கடந்த வருடம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தற்போதுள்ள அதிகாரிகள் இருமடங்காக தமது செயல் திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும் இளங்கோவன் மேலும் கூறினார். (த-03)

# பருத்தித்துறை அஞ்சல் நிலையத்தை சொந்தக் கட்டடத்துக்கு மாற்றுக

## மாவட்ட அத்தியட்சகருக்கு மகஜர்

வடமராட்சி, பெப். 29.

பருத்தித்துறை அஞ்சல் நிலையத்தினை அதன் சொந்தக் கட்டடத்துக்கு மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை அஞ்சலக அபிவிருத்தி ஆலோசனைக் குழு யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துரித அபிவிருத்தியடைந்துவரும் பருத்தித்துறை வர்த்தகர்களினதும், பொது மக்களினதும் தேவைக்கும், சேவைக்கும் ஏற்றதாக தற்போதைய வாடகைக் கட்டடமான அஞ்சல் நிலையக் கட்டடம் இல்லை என்பது வெளிப்படையான உண்மை .

இந்தக் கட்டடத்தில் அஞ்சல் நிலைய ஊழியர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே கடமையாற்றி வருகின்றனர். எனவே அஞ்சல் திணைக்களத்துக்குச் சொந்தமானதும், அஞ்சல் நிலையத்துக்கென வடிவமைக்கப்பட்டதுமான கட்டடத்துக்கு உடனடியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

பருத்தித்துறை அஞ்சல் நிலையத்துடன் தொடர்புடைய அனைத்து மக்களும் இதனைத் தங்கள் சொந்தப் பிரச்சினையாகக் கருதி அஞ்சல் நிலைய இடமாற்றத்தினை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

தற்போது தபால் விநியோகத்தில் நடைமுறையில் இருக்கும் மூன்று மாதத்திற்கொரு முறை ஊழியர்கள் விநியோகப் பகுதிக்கு மாற்றும் திட்டத்தினை ஆறு மாதத்திற்கு ஒரு முறை மாற்றுவது சாலச் சிறந்தது என நாம் கருதுகின்றோம். மூன்று மாதங்களுக்குள் பெரிய விநியோகப் பகுதி ஒன்றை பூரணமாக அறிந்து கொள்வதென்பது சாத்தியமற்றது.

அதுமட்டுமன்றி தபால் பொருள்கள் விநியோகத்தில் பிழையான விநியோகம், பொருள்கள் அபகரித்தல் போன்ற குளறுபடிகள் நடப்பதற்குக் குறைந்த காலப்பகுதி சாதகமாக அமையக் கூடும்.

ஆனால் பருத்தித்துறை அஞ்சல் நிலையத்தில் தபால் விநியோகம் ஒழுங்கமைப்புடனும் திறமையுடனும் நடைபெற்று மக்களின் பாராட்டுக்களையும் நன்மதிப்புக்களையும் பெற்றிருப்பது கண்கூடு. தபால் விநியோக முறையில் மக்களிடம் மேலும் உயரிய நம்பகத்தன்மையை உருவாக்குவதற்காகவும் ஊழியர்களின் விநியோகத் தன்மையை பூரணமாக அறிந்து கொள்வதற்காகவும் இந்த நடைமுறையைப் பின்பற்றுவது தொழில் வினைத் திறனைக் கூட்டுவதாக அமையும் என்று கருதுகின்றோம்.

குறிப்பிட்ட ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இச்சபை மகிழ்ச்சி அடையும் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-08)

# ஆசிரிய உதவியாளர்களுக்கு இரண்டு வருடப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 29.

ஆசிரிய உதவியாளர்கள் நிறுவன ரீதியான இரண்டு வருடப் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை மார்ச் மாதம் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் ஆசிரிய உதவியாளர்களுக்கு விரைவில் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவால் அனுப்பி வைக்கப்படும் என மத்திய கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேர்முகப் பரீட்சைத் திகதிக்கு முன்னதாக கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும், தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் பயிற்சிக்காக உள்வாங்கப்பட உள்ளனர். எனவே தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும், மேலதிக விவரங்களைத் தன்னுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (த-03)

# எச்சரிக்கையுடன் இளைஞர் விடுவிப்பு

வழக்கு ஒன்று தொடர்பாக நீதிமன்றக் கட்டளையைச் செயற்படுத்துமாறு உத்தரவிட்டபோது மன்றில் அதனை மீறும் வகையில் செயற்பட்டவரை கடுமையாக எச்சரித்து விடுவித்தார் நீதிவான்.

இரு தரப்பினருக்கிடையிலான தகராறு காரணமாக ஒரு தரப்பினர் மீது இன்னொரு தரப்பினர் பரஸ்பரம் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர் இருபகுதியினரும் சமாதானமாகச் செல்ல இணக்கம் ஏற்பட்டது. அதையடுத்து சமாதானமாகச் செல்லுமாறு கூறி நீதிவான் இரு தரப்பினரையும் வழக்கிலிருந்து விடுவித்தார்.

இந்த நிலையிலேயே ஒரு தரப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நீதிமன்றக் கட்டளையை மீறி நடந்து கொண்டார். அதை அடுத்து நீதிமன்றை அவமதித்த குற்றத்தின் கீழ் அவர் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (த-4)

## 2012 பேர் இணைந்து தேவ பாராயணம்

வாழும் கலை ஏற்பாட்டில் வடமராட்சியில் முதன்முறையாக 2012 பேர் இணைந்து வழங்கும் தேவார பாராயணம் எதிவரும் 3ஆம் திகதி மாலை 4 மணிமுதல் 4.30 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தேவார பாராயணத்துடன் ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் பிரதான சீடர் சுவாமி சத்யோகதாசனின் ஆன்மீகச் சொற்பொழிவும் ஆசிர்வாதம், தியானம் என்பவையும் இடம்பெறும். (த-8)

## வடமராட்சியில் சமுர்த்தி நிவாரணம்

வடமராட்சி, பெப்.29

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு, கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேச செயலகங்களில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரண உலர் உணவுப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் இரு பிரிவுகளிலுமுள்ள பருத்தித்துறை, புலோலி, உடுப்பிட்டி, நெல்லியடி, கட்டைவேலி ஆகிய நான்கு பலநோக்குக் கூட்டுறவுக் சங்கங்களின் கிளைகள் மூலமாக வழங்கப்பட்டுவரும் சமுர்த்தி நிவாரண உலர் உணவுப் பொருள்களை எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை வரை பெற்றுக்கொள்ளலாம். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷ்பிரயோகம் செய்த சிப்பாய் நடவடிக்கை எடுக்காத பொலிஸார்

## அதிகாரிகள் விசனம் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சியில் மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட படைச் சிப்பாய் மீது பொலிஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று துறைசார் அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சி நகரில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் 16 வயதான மாணவி ஒருவரை காதலிப்பாதாகக் கூறி அவரை மதவாச்சிக்கு அழைத்துச் சென்றுள்ளார். தமது மகளைக் காணாத பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். எனினும் அடுத்த நாள் காலை மதவாச்சியில் குறித்த மாணவியைக் கைவிட்டு தலைமறைவாகி விட்டார் சிப்பாய். பின்னர் பொலிஸார் குறித்த மாணவியை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத் தனர்.

**குறித்த படை வீரர் இந்த மாணவி தவிர்ந்த மேலும் மூன்று மாணவிகளை காதலித்து வந்தார். எனினும் இந்த காதல் மன்னனை பொலிஸார் ஏன் கண்டு கொள்ளவில்லை?**

எனினும் மாணவியைத் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கிய படை வீரர் மீது எந்த நடவடிக்கையும் பொலிஸார் எடுக்கவில்லை. 16 வயதுக் குட்பட்ட பெண்களை அவர்களது சம்மதத்துடன் திருமணம் செய்தாலும் கூட அவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது வழமை. எனினும் இந்த சிப்பாய் மீது பொலிஸார் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப்பது குறித்து துறைசார் அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த சிப்பாய் இந்த மாணவி தவிர்ந்த மேலும் மூன்று மாணவிகளை காதலித்து வந்தார் என்றும் கூறப்படுகிறது. (ங-5)

## சொந்த இடத்தில் குடியமர இவர்களுக்கு அனுமதியில்லை

முல்லைத்தீவு,பெப்.29

முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிகளை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் பிம்பிலி பகுதியில் மார்ச் மாத இறுதிக்குள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தத் தகவலை முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா மெனிக்பாம் முகாமில் அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ளனர். தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விடுங்கள் என்று இந்த மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக குறித்த பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குப் பதிலாக பிம்பிலி என்ற பகுதியில் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று முல்லைத்தீவு செயலகம் தற்போது அறிவித்துள்ளது.

பிம்பிலிப் பகுதியில் மக்களைக் குடியமர்த்துவதற்குரிய ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை நிறைவுற்றதும் மார்ச் மாத இறுதிக்குள் மக்கள் அந்தப் பகுதிகளில் குடியமர்த்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பட்டதாரிப் பயிலுநர்

கிளிநொச்சி,பெப்.29

பட்டதாரிப் பயிலுநருக்கான விண்ணப்பங்களைக் கிளிநொச்சி அரச அதிபர் கோரியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் பட்டதாரிகளைப் பட்டதாரிப் பயிலுநர்களாக ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களைச் சுயவிவரம் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கிளிநொச்சி செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (க-121)



கண்டாவளைக் கமக்கார அமைப்பினருக்கு நெல் அறுவடை இயந்திரத்தைக் கையளிக்கின்றார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன். (6)

## கிளிநொச்சிப் பகுதியில் அழிகின்றன காடுகள்

அக்கராயன்,பெப்.29

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பூநகரியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காடுகளை அழிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் பிற இடங்களுக்கு விறகுகளை எடுத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீளக் குடியமர்ந்த மக்கள் காடுகளை அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

**பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கொம்பன், நேரடம்பன், செக்காலை ஆகிய இடங்களில் காடுகளை அழிக்கும் வேலைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.**

குறிப்பாகப் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கொம்பன், நேரடம்பன், செக்காலை ஆகிய இடங்களில் காடுகளை அழிக்கும் வேலைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மேலும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம், முக்கொம்பன் ஆகிய இரு இடங்களில் அடர்ந்த காடுகள் உள்ளன. இவை அழிக்கப்படுவதால் மழை வீழ்ச்சி குறைவதோடு நிலங்களும் உவராகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மேலும் பூநகரியின் பல பிரதேசங்கள் உவராக மாறியுள்ள நிலையில் இத்தகைய காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளால் நிலைமை மேலும் மோசமடையுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-410)

## விழிப்புணர்வுச் செயற்பாடு

முல்லைத்தீவு,பெப்.29

முல்லைத்தீவில் பால் நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

இந்தச் செயற்பாடு முள்ளியவளை மத்தி பொது நோக்கு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாளைய தினம் வரை இது நடைபெறவுள்ளது.

சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய கலைப் பாடங்கள் ஊடாகத் துறை சார்ந்த விரிவுரையாளர்களால் இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யு.என். எயிட் நிறுவனமும், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டச் சம்மேளனமும் இணைந்து இந்த இளைஞர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஆசிரியர்கள் இல்லாததால் அலையும் மாணவர்கள்

அக்கராயன்,பெப்.29

துணுக்காய் மல்லாவி மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் வேறு இடங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

துணுக்காய் மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக உயர்தர வகுப்புக்களில் வர்த்தகம், வரலாறு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பணியில் இல்லாமையினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன், மாணவர்கள் நீண்ட தூரத்திற்குச் சென்று கற்க வேண்டிய அவலமும் உருவாகியுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள முதன்மைப் பாடசாலைகளில் மல்லாவி மத்திய கல்லூரியும் ஒன்றாகும். துணுக்காய்ப் பிரதேசத்தில் இந்தக் கல்லூரியினை நம்பி நூற்றுக்கணக்கில் மாணவர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் இந்தக் கல்லூரியில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமையினால் மாணவர்கள் யாழ்ப்பாணம் வரை சென்று கல்வி கற்று வருகின்றனர்.

50 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தக் கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரியர்களை உருவாக்கியுள்ளது. ஆனால் இன்று முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் திணறி வருகிறது.

இது தொடர்பாகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோர் வேண்டுகோள் விடுகின்றனர். (க-18)

## பௌர்ணமி வணிக விழா

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் ஏற்பாட்டில் பௌர்ணமி தினத்தன்று வணிகவிழா இடம்பெற்றுள்ளது.

கடந்த பௌணமி தினத்தன்று பாடசாலை அதிபர் சி.வரதன் தலைமையில் காலை 9 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில் இலங்கைப் பங்குச் சந்தை தொடர்பான கருத்தரங்கொன்றும் இடம்பெற்றது. கொழும்புப் பங்குச் சந்தையைச் சேர்ந்த எம். திலீபன் கருத்துரையை வழங்கினார்.

அத்துடன் கணக்கீடு, பொருளியல் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகளும் இடம்பெற்றன.

மற்றும் சதுரங்கப் பயிற்சி முகாம், சித்திரப் பயிற்சி முகாம், மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயற்பாடு தொடர்பான பயிற்சி முகாம் என்பனவும் இடம்பெற்றன.

இதில் வளவாளர்களாக கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த வர்த்தக பாடத்துக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன், கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் தர்மராசா, விசுவமடு மகாவித்தியாலய ஆசிரியர் தி.திவ்வியரூபன் மற்றும் ஆசிரியர்களான எஸ்.கணேசநாதன், ஜே.அற்புதமலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அயல் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-405)

## மின்சாரத்துக்கு வேண்டுகோள்

கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி திருவையாறு பகுதிக்கு மின்சாரத்தை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஏற்கனவே மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இறுதிப் போரின் பின்னர் இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த போதிலும் இதுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் இங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இரவு வேளைகளில் திருடர்களின் அட்டகாசம், சமூக விரோதிகளின் செயற்பாடுகள் ஆகியவற்றால் அச்சத்துடன் இருக்கும் [illegible] இல்லாததால் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். (க)

## பிரமந்தனாறு பாடசாலை மாணவி ஆங்கிலப் போட்டியில் சாதனை



கிளிநொச்சி,பெப்.29

கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய மாணவியொருவர் ஆங்கில மொழியில் இடம்பெற்ற போட்டியொன்றில் சிறப்பு விருதினைப் பெற்றுள்ளார்.

இந்தப் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் தேவராசா ஷாம்பவி என்ற மாணவியே ஹெல்பேஜ் நிறுவனத்தால் கடந்த ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஆங்கில மொழியிலான சிறுகதைப் போட்டியில் சிறப்பு விருதினைப் பெற்றவராவார்.

இவருக்கான பணப் பரிசிலும், சான்றிதழும் இந்த மாத முற்பகுதியில் கொழும்பில் இடம்பெற்ற வைபவமொன்றில் வைத்து வழங்கப்பட்டன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில்ஆங்கில ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் ஆங்கிலத்தைக் கற்பதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த இந்த மாணவி நிகழ்த்தியிருக்கும் இந்தச் சாதனையைக் கல்விச் சமூகத்தினரும் பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோர்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமானது கணக்கெடுப்பு

## மக்களை ஒத்துழைக்கக் கோரிக்கை

30 வருடங்களின் பின்னர் யாழ்.குடாநாட்டில் சனத்தொகை கணக்கெடுப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கணக்கெடுப்பில் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்ற சகல மக்களையும் கட்டாயம் தகவல்களை வழங்கிப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலக புள்ளி விவரவியல் கிளை கேட்டுக் கொண்டுள்ளது .

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த 27 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை சனத்தொகை கணக்

**27 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை சனத்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள ப்படுவதுடன் மார்ச் 20 ஆம் , 21 ஆம் திகதிகளில் அவை மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளன**

கெடுப்பு மேற்கொள்ள ப்படுவதுடன் மார்ச் 20 ஆம் , 21 ஆம் திகதிகளில் அவை மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன .

வீடுகளுக்கு வருகின்ற சனத்தொகை கணக்கெடுப்பாளரிடம் பொது மக்கள் தகவல்கள் அனைத்தையும் வழங்கி ஒத்துழைப்பதுடன் சகலரும் தம்மைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

வீட்டில் இருப்பவர்கள் வீட்டில் உள்ள அனைவரினதும் விவரங்களையும் வைத்திருக்க வேண்டும் . அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, பிறந்த மாவட்டம், தற்போது இருக்கும் மாவட்டத்தில் வசித்த காலம்,கல்வித்தகைமை,தொழில், கணினி பற்றிய அறிவு போன்ற விவரங்கள் இதன் போது திரட்டப்படவுள்ளன .

மேலும் இந்த மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களுக்குள் வெளியேறியவர்கள் 6 மாதங்களுக்குள் திரும்ப வரக்கூடியவர்கள் ஆகியோரின் விவரங்களையும் கணக்கெடுப்பின் போது பதிவு செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது . (த-5)

# உயிர்காப்பு அங்கிகளை கட்டாயமாக அணியுங்கள்

யாழ்ப்பாணம் .பெப் .29

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் படகுகளில் பயணம் செய்யும் மக்கள் கட்டாயம் உயிர் காக்கும் அங்கிகளை அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. குமுதினி , வடதாரகை போன்ற அரச படகுகளில் பயணம் செய்யும் மக்கள் தமது பயணத்தின் போது பாதுகாப்புக்காக உயிர் காப்பு அங்கிகளை அணிவது கட்டாயமாகும்.

கடந்த காலங்களில் இந்தப் படகுகளில் பயணம் செய்யும் மக்களுக்கு உயிர் காக்கும் அங்கிகள் இருக்கவில்லை.ஆயினும் தற்போது இந்த அங்கிகள் படகுகளில் போதியளவு உள்ளன. எனினும் பயணிகள் தமது பயணத்தின் போது அவற்றை அணியாமல் அசண்டையீனமாகப் பயணிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் விபத்துகள் ஏற்படும் போது உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுறது. இதனால் படகுகளில் பயணம் செய்யும் மக்கள் கட்டாயம் உயிர் காக்கும் அங்கிகளை அணிந்தவாறே பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-17)

# வீடுகளில் கழிவுகள் 14 பேருக்கு அபராதம்

வடமராட்சி, பெப்.29

டெங்குநோய் பரவக்கூடிய விதத்தில் குப்பைகளை வைத்திருந்த பருத்தித்துறை புலோலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 14 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பொலிஸார் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து பருத்தித்துறை, புலோலி பகுதிகளில் டெங்கு நோய் ஒழிப்பது தொடர்பாக வீடுகளில் உள்ள சுற்றுச் சூழல்களைப் பார்வையிட்டபோதுகுறிப்பிட்ட 14 பேரின் வீடுகளில் டெங்குநோய் பரவக் கூடிய விதத்தில் குப்பை கூளங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

டெங்குநோய் பரவக் கூடியதாக குப்பை கூளங்களை வைத்திருந்தார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து 14 பேரையும் தலா 7 பேர் வீதம் இரு பிரிவாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவர்கள் மீதான வழக்குகள் பருத்தித்துறை பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 14 பேரும் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டனர்.

ஒவ்வொருவருக்கும் 3ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்த பதில் நீதிவான் எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவக்கூடிய விதத்தில் குப்பைகூளங்களை வைத்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகையால் வீடுகளையும் வளவுகளையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள் என எச்சரிக்கை செய்தார்.

இந்த வழக்கில் புலோலியைச் சேர்ந்த 7 பேர் மீது ஒன்றாக தொடரப்பட்ட வழக்கில் மூன்றுபேர் பெண்கள் நான்குபேர் ஆண்களாவர். பருத்தித்துறையைச் சேர்ந்த 7 பேர் மீது ஒன்றாக தொடரப்பட்ட வழக்கில் நான்கு பேர் பெண்களாவர், மூன்று பேர் ஆண்களாவர். (த-8)



யாழ். சிறுவர் நீதிமன்றில் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்றது. யாழ். நீதிவான் மா.கணேசராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதிவானுடன் ஐ.நா அதிகாரிகள் அங்கு வரவேற்கப்படுகின்றனர்.(த-4)

# காரைநகர் பிரதேசத்துக்கு தனிப் பொலிஸ் நிலையம்

## பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.29

காரைநகர் பிரதேசத்துக்கு தனியான பொலிஸ் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று காரைநகர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற காரைநகர் பிரதேச சபையின் ஏழாவது மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தனியான பொலிஸ் நிலையம் ஒன்று இந்தப் பகுதியில் அமைக்கப்படவேண்டும் என உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

காரைநகர்ப் பிரதேச சபைக்கென தனியான பொலிஸ் நிலையம் ஒன்றை விரைவாகத் திறப்பதற்கு பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தப் பகுதியில் இடம் பெறும் குற்றச் செயல்களுக்கான முறைப்பாடுகளைப் பொலிஸாரிடம் மேற்கொள்வதற்கு மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இதற்காக அவர்கள் பல மைல் தூரத்தில் உள்ள ஊர்காவற்றுறைக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸாரும் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு பணியை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

இதனால் இந்தப் பிரதேசத்துக்கெனத் தனியான பொலிஸ் நிலையம் அவசியம் எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## தண்டனை பெற்றவருக்கு மீண்டும் சிறை

5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால சிறைத் தண்டனை வழங்கப்பட்ட நபர் மீண்டும் குற்றம் புரிந்ததனால் அவருக்கு ஒருவருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிவான் ஆர்.எஸ். எம். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆடு ஒன்றைத் திருடிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் முன்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபருக்கு 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மது விற்பனை நிலையம் ஒன்றில் 3 மது போத்தல்களைத் திருடியுள்ளார் அந்த நபர். அவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு முன்னைய தண்டனையையும் சேர்த்து ஒரு வருட சிறைத் தண்டனை விதித்து ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தார் நீதிவான். அபராதம் செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாத கால சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தார்.

## புதிய இன மிளகாய் குடாநாட்டில் அறிமுகம்

யாழ்ப்பாணம்.பெப்.29

குடாநாட்டில் புதிய இன மிளகாயை விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அனுராதபுரம் மகா இலுப்பல்லம விவசாய நிலையத்தில் இருந்து இந்தப் புதிய விதைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இந்தப் புதிய இன மிளகாய் விதைகளைக் குடாநாட்டில் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் குடாநாட்டில் மிளகாய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. இவ்வாறு உற்பத்தியாகும் மிளகாயைப் பச்சை மிளகாயாகவே பயன் படுத்த வேண்டும். செத்தல் மிளகாய்க்கு அதனைப் பயன் படுத்த முடியாது.

குடாநாட்டில் பச்சைமிளகாய்க்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இந்த புதிய இன பச்சை மிளகாய் உற்பத்தி செய்யப்படவுள்ளது. (த-17)

# பிரதேச செயலகங்கள் தோறும் ஓய்வூதியர் நலன்புரி சங்கங்கள்

## கூட்டுறவுத் திணைக்களம் நடவடிக்கை

**சங்கத்தில் இணைந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்கள் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளமுடியும்**

யாழ்ப்பாணம், பெப்.29

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஓய்வூதியர்களின் நலன் கருதி ஓய்வூதியர் நலன்புரிசங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களிலும் உள்ள ஓய்வூதியர்களைப் பதிவு செய்யும் , புனரமைப்புச் செய்யும் பணிகளும் கூட்டுறவு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ. கே . அருந்தவநாதன் தெரிவித்தார் வலி வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் வலி வடக்கு பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஓய்வுபெற்ற பணியாளர்கள் தமது ஓய்வூதியத்தில் வேறு ஒருவரிலோ அல்லது தமது குடும்பத்தின் வருமானத்திலோ தங்கிவாழும் நிலை ஏற்பட்டுகிறது. தமது சொந்தக்காலில் நம்பிக்கையோடு செயற்படுவதற்கு இந்த ஓய்வூதியத் திட்டம் வழிசமைத்துக் கொடுக்கிறது.

பணியாளர்களின் நலன் பேணும் ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கமானது நிலையான பாதுகாப்பு உத்தரவாதத்துடன் நிதிப்பலத்தை மேலும் பெருக்குவதற்கும் புதிய முயற்சியின் ஊடாக அங்கத்தவர்களுக்குச் சேவையை வழங்குவதையே இலக்காகக் கொண்டது.

அத்துடன் இந்த ஓய்வூதியர் நலன்புரி சங்கக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் ஓய்வூதியர்களுக்கு ஆகக் கூடிய கடன்தொகையாக 15 ஆயிரம் ரூபா வரை குறைந்த வட்டியில் வழங்கப்படும்- என்றார்.

சங்கத்தில் இணைந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்கள் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவுக் கடலில் மடி வலைக்குத் தடை

## இறால் விருத்தியைப் பாதுகாக்க

வலி.தென்மேற்கு, பெப்.29

கடற்றொழிலாளர்களின் பொருளாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடனும் வெளிநாட்டுச் செலவாணியை ஈட்டிக்கொடுக்கும் இறாலின் இன விருத்தியைப் பாதுகாக்கும் நோக்குடனும் காக்கைதீவு கடற்பரப்பில் மடிவலையைப் பயன்படுத்தி இறால் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**மீறி தடை செய்யப்பட்டுள்ள வலையைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

காக்கைதீவு கடல் ஏரியில் சாவற்கட்டு, காக்கைதீவு, நவாலி, நாவாந்துறை, உயரப்புலம் ஆகிய இடங்களில் வசிக்கும் மீனவர்கள் காலம் காலமாக இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். சில மீனவர்கள் தேச வழமைச் சட்டத்துக்கு மாறாகப் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் மடி வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் இறாலின் இனவிருத்தி அழிந்து போவதுடன் வளர்ந்து பருவமடைய வேண்டிய இறால் குஞ்சுகள் அழிந்து போகின்றன. இது மீனவர்களுக்கு மட்டுமல்ல பொருளாதார ரீதியில் நாட்டுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலை குறித்து நன்கு ஆராய்ந்த சாவற்கட்டு, காக்கைதீவு, நாவாந்துறை வடக்கு, கிழக்கு ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்து மேற்படி கடற்பரப்பில் மடி வலையைப் பாவித்து இறால் பிடிப்பதற்குத் தடை விதித்துள்ளது.

சங்கங்களின் சட்டதிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்துள்ள சங்கப் பிரதிநிதிகள் தடையையும் மீறி தடை செய்யப்பட்டுள்ள வலையைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வலைகளும் பறிமுதல் செய்யப்படும் என்று அறிவித்துள்ளார்கள். (த-115)

## இயற்றாலைக்கு மின் விநியோகம்

தென்மராட்சி, பெப்.29

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி இயற்றாலைப் பிரிவுக்கான மின்சாரம் அண்மையில் வழங்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மின் விநியோகத்தின் இணைப்பு வழங்கல் நிகழ்வு வரணி - இயற்றாலை பொது மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் வே.தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சில்வேஸ்திரி அலன்ரின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம், தென்மராட்சி பிரதேச மின் அத்தியட்சகர் அன்ரன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஆ.அலெக்ஸாண்டர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-9)

## பயணிகள் படகுகளில் பொருள்கள் ஏற்றத் தடை

யாழ்ப்பாணம், பெப்.29

நெடுந்தீவுக்கும் - குறிகாட்டுவனுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் குமுதினி, வடதாரகை ஆகிய அரச படகுகளில் பயணம் செய்யும் மக்கள் தம்முடன் பயணப் பொதியை மட்டுமே எடுத்துச் செல்லமுடியும் என்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்தப் படகுகளில் பயணம் செய்வோர் வியாபாரத் தேவைக்கான பொருள்களை படகுகளில் எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாக்குகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், பெட்டிகள் போன்ற பொருள்களையும் இந்தப் படகுகளில் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயணி ஒருவர் தனது பயணப்பொதியுடன் மட்டுமே படகில் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பொதிகள் கொண்டு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து வர்த்தகர்கள் மற்றும் வியாபார நோக்கத்துக்காக செல்வோர் தமது பொருள்களைத் தனியார் படகுகளில் கொண்டு செல்கின்றனர். (த-17)

## வந்தது வைக்கோலுக்கு ஆப்பு

வலி.தென்மேற்கு, பெப்.29

யாழ்.மாவட்டத்தில் இம்முறை நெல் உற்பத்தி அதிகரித்திருந்தபோதும் வைக்கோலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் அதன் விலை அதிகரித்துள்ளது. இயந்திர வளத்தைப் பயன்படுத்தி அறுவடை செய்ததே இந்த நிலைக்குக் காரணமாகும்.

கடந்த ஆண்டு பருவமழை சீராகப் பெய்து கொடுத்ததால் குடாநாட்டின் நெல் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்திருந்தது. இது விவசாயிகளின் மத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மனித வளத்துக்குப் பதிலாக இயந்திர வளத்தைப் பயன்படுத்தி அறுவடையில் ஈடுபட்டுள்ளதினால் வைக்கோல் கால்நடைகளுப்குப் பயன்படுத்த முடியாதவாறு சேதத்துக்குள்ளானது.

மனித வளத்தைப் பயன்படுத்தி கடந்த காலங்களில் நெல் அறுவடை செய்யப்பட்ட போது வைக்கோலுக்குச் சேதம் ஏற்படவில்லை. இந்த் முறை இடம்பெற்ற அறுவடையின் போது நேரத்தையும் பணத்தையும் மிச்சப் படுத்தும் நோக்கத்துடன் இயந்திரத்தைப் பயன்படுத்தியதால் வைக்கோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையால் கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (த-115)

## சாவற்காட்டில் கிணறு புனரமைப்பு

**கூழாவடி வீதியில் உள்ள மூடப்படும் கிணற்றைத் தோண்டி தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை**

நவாலி,பெப்.23

சாவற்கட்டுப் பகுதியில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் பாவனையின்றி மூடப்பட்ட நிலையில் இருந்த பொதுக் கிணறு ஒன்றை கூழாவடி இராணுவத்தினர் கடந்த சில வாரங்களாகப் புனரமைப்புச் செய்து வருகின்றனர்.

சாவற்கட்டு, அந்திக்குளி வைரவர் வீதியில் 15 குடும்பங்களுக்கு மேல் குடியமர்ந்துள்ளனர். இவர்கள் தமது அன்றாட தேவைகளுக்குப் போதிய தண்ணீர் வசதியின்றிப் பெரிதும் கஷ்டப்படும் நிலையில் உள்ளனர்.

இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் அந்தப் பிரிவு கிராமசேவையாளர் வை.சந்திரராசாவின் துரித முயற்சியினால் கூழாவடி இராணுவத்தினர் அந்த வீதியில் உள்ள மூடப்பட்டிருந்த கிணற்றைத் தோண்டி சுமார் 20 அடிவரை ஆழமாக்கியுள்ளனர். (ந-100)



சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பினால் புனரமைக்கப்பட்ட மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுநலவாய நாடாளுமன்றத் தலைவருமான அலன் ஹோர்சல் துறுஸ்ட் அண்மையில் பயணம் செய்தார் அவருடன் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், வித்தியாலய அதிபர் யோ.ஜெயகாந்தன் ஆகியோர் உள்ளனர். (த-9)

## பருத்தித்துறை நகர் பகுதியில் இருமுறை தபால் விநியோகம்

வடமராட்சி, பெப்.29

பருத்தித்துறை நகரில் தினமும் இரண்டு தடவைகள் தபால் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

தினமும் காலையில் யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்திலிருந்து எடுத்து வரப்படும் குடாநாட்டுக் கடிதங்களும் தென்பகுதி உள்ளிட்ட வெளிமாவட்டக் கடிதங்களும் கொண்ட பொதிகளில் வரும் கடிதங்கள் காலை 8மணிக்கு முதலாவது விநியோகமாக நடைபெற்று வருகிறது.

அன்றாடம் சேகரிக்கப்படும் குடாநாட்டுக் கடிதங்களையும் வெளிமாவட்டக் கடிதங்களையும் கொண்ட பொதிகளை எடுத்துச் செல்வதற்காகப் பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறைக்கு வரும் தபால் வான், வெளி மாவட்டங்கள், குடாநாட்டிலிருந்து பகல் வேளைகளில் சேகரிக்கப்படும் தபால்களைக் கொண்ட பொதிகளை யாழ். பிரதம தபால் நிலையத்திலிருந்து எடுத்து வருகின்றன.

அவ்வாறு வந்து சேரும் பொதிகளில் நகர வாசிகளுக்கென வந்துசேரும் கடிதங்கள் யாவும் பிற்பகல் 1.30 மணியளவில் இரண்டாவது விநியோகமாக விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

இந்தச் சேவையால் பொது மக்கள் உரிய பலன்களைப் பெற்றுவருவதோடு, இரண்டாவது தபால் விநியோக நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (த-8)

## லைகவிரல் அடையாளம் பெறுவது ஓகஸ்-டில்

யாழ்ப்பாணம்.பெப்.29

ஊழியர் சேமலாப நிதிக்கான கைவிரல் அடையாளங்களைப் பெறும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு பின்னரே இடம் பெறும் என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது.

கைவிரல் அடையாளம், புகைப்படம் எடுக்கும் பணிகள் ஓரளவு முடிவடைந்துள்ளன.

தொடர்ந்துஇந்தப்பணியை மேற்கொள்வதற்குப் போதிய இடவசதி இல்லாமை ஒரு பிரச்சினையாக உள்ளது. தற்போது தொழில் திணைக்களத்துக்கென யாழ். பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தின் ஒரு பகுதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் திறந்த வைக்கப்படும்.

இதன் பின்னர் இந்தக் கட்டடத்தில் கைவிரல் அடையாளம் எடுப்பதற்கான தனிப் பிரிவு ஒன்றை அங்கே இயங்க வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இந்தப் பணிகள் அனைத்தும் புதிய கட்டடம் திறந்த பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் -என்றார். (த-17)

## கூட்டமைப்புக்கு எதிராக குடாநாட்டில் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம், பெப்.29

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மக்கள் முன்னணி என்ற பெயரிலேயே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். நகரின் முக்கிய பகுதிகளான ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் மக்கள் வரும் இடத்திலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தின் முன்பாகவும் கிராமப் புறங்களிலும் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'இனப்பிரச்சினைகளை தூண்டும் ரி.என்.ஏ. ஒழிக' சாதிப் பிரச்சினையைத் தூண்டுகின்றதா? ரி.என்.ஏ. என்ற தலைப்பில் இந்தச் சுவரொட்டிகள் குடாநாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ளது.

இந்தப்பிரசுரங்கள் அனைத்திலும் மக்கள் முன்னணி என்ற அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## மின்சாரம் பெற அடுத்த தேர்தல் வரை நாங்கள் காத்திருக்க வேண்டுமா?

### கெற்பேலி மேற்கு கிராம மக்கள் கேள்வி

கெற்பேலி,பெப்.29

''மின்சார விநியோகத்துக்காகக் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலப்பகுதியில் மின்கம்பங்கள் நடப்பட்ட போதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. எமக்கு மின்சாரம் கிடைப்பதற்கு இனியும் அடுத்த தேர்தல்வரை காத்திருக்க வேண்டுமா? '' என்று கெற்பேலி மேற்கு கிராம மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தேர்தல் வேளையில் அனுராதபுரத்தில் இருந்து மின்கம்பங்கள் தருவிக்கப்பட்டபோதும் தேர்தல் முடிவடைந்து மாதங்கள் பல கடந்த பின்னரும் இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல்வாதிகளின் வாக்குறுதியை நம்பித் தமது பகுதிக்கு மின்சாரம் கிடைக்கும் என்று அவசர அவசரமாக வீடுகளுக்கு கம்பியிடல் வேலைகளை முடித்த கெற்பேலி மக்கள் ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர்.

இதேவேளை- இந்தக் கிராமத்துக்கு இரண்டுகிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாலாவி கிராமம் வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 'எமக்கு மின்சாரம் கிடைப்பதற்கு அடுத்த தேர்தல்வரை நாம் காத்திருக்க வேண்டுமா?' என்று அந்தப் பகுதி மக்கள் கவலையுடன் கேள்வி எழுப்புகின்றனர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு நகர திட்டமிடல் சட்டம்; ஏகமனதாக நிராகரிக்க வேண்டும்

## பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்

அம்பாறை,பெப்.29

''நாடு நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்தை கிழக்கு மாகாணசபை அங்கீகரிக்காது ஏகமனதாக நிராகரிக்க வேண்டும்''.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்றைக் கரைதீவு பிரதேசசபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் செல்லையா இராசையா தலைமையில், சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் தொடர்பான பிரேரணையைத் தவிசாளர் செல்லையா இராசையா முன்மொழிந்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

''மாகாண சபைகளின் கீழ்வரும் காணிகளை பௌத்த சாசன அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்காக நாடு நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்தை அரசு மாகாண சபைகளின் அங்கீகாரத்துக்காக விட்டுள்ளது.

**நாடு, நகர சட்ட விடயத்தில் கிழக்கு மாகாண சபை காத்திரமான முடிவை எடுக்கவேண்டும். நம் கண்ணை நாமே குத்திக் கெடுக்கும் நிலைமையை ஏற்படுத்திவிடக்கூடாது.**

மாகாண சபைகளுக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுத்துள்ள நிலையில், இந்த நாடு நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கான உரிமையைப் பாதிக்கும் செயலாகவும், தட்டிப் பறிக்க முனையும் செயலாகவும் அமைந்துள்ளது.

குறிப்பாக சிறுபான்மை மக்களுக்குப்பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தச் சட்டமூலம் அமைந்துள்ளது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், மாகாண சபைகளுக்கு உரித்தாக இருக்கின்ற காணிகளைப் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமானால் கூட, பௌத்த சாசன அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை ஏற்படும். அரசால் முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்பாக மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாண சபைகளினதும் அனுமதியைப் பெறும் பட்சத்திலேயே இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும், வாக்கெடுப்புக்கு விடவும் முடியும். எனவே இந்த விடயத்தில் கிழக்கு மாகாண சபை காத்திரமான முடிவை எடுக்கவேண்டும். நம் கண்ணை நாமே குத்திக் கெடுக்கும் நிலைமையை ஏற்படுத்திவிடக்கூடாது. கிழக்கு மாகாணசபை குறித்த நாடு, நகர திட்டமிடல் திருத்தச் சட்டமூலத்தைக் கருத்து வேறுபாடுகளின்றி ஏகமனதாக நிராகரிக்க வேண்டும்- என்றார்.இந்தப் பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-30)

# கிழக்கில் சுகாதார வளர்ச்சிக்கு சுபைரின் பங்களிப்பு அதிகம்

## தென்கிழக்கு பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவிப்பு

அம்பாறை,பெப்.29

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் இன்று முன்னேற்றம் கண்டு வருவதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரின் கடின உழைப்பும், அர்ப்பணிப்பான மக்கள் சேவையுமே முக்கிய காரணமாகும் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.நஸீர்அகமட் தெரிவித்தார்.

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை எக்ஸ்ரே பிரிவுக்கென, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட எக்ஸ்ரே கழுவும் தன்னியக்க இயந்திரத்தின் கையளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

இன, மத பேதங்களின்றி கிழக்கின் சுகாதார சேவையை மேம்படுத்தி, சகல மக்களும் பயனடையும் வண்ணம் சேவையாற்றிவரும் அவரது பெரும்பணி பாராட்டத்தக்கதாகும்.

அமைச்சர் சுபைர் தேவையுள்ள மக்களை நாடிச் சென்று, அவர் தனது சேவைகளை முன்னெடுத்து வருவதுடன் ஏனையோருக்கு முன்னுதாரணமாகவும் திகழ்ந்து வருகின்றார்.

குறிப்பாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள பல வைத்தியசாலைகளின் சேவைகள் சிறப்புற நடைபெறவும், அவற்றின் வளர்ச்சிக்காகவும் அமைச்சர் சுபைர் பெரும் பங்களிப்பை வழங்குகிறார்-என்றார். (ச)

# மட்டக்களப்பில் மீண்டும் மழை

மட்டக்களப்பு,பெப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்துள்ளது.

இந்த மாவட்டத்தில் நான்கு மணித்தியாலங்களில் 55 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 11.30 மணி முதல் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 3.30 மணி வரையே இந்த மழை பதிவாகியுள்ளதாக

மாவட்ட வானிலை அவதான நிலைய அதிகாரி ஏ.எம்.சாலிஹீன் தெரிவித்தார்.

கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இந்த மாவட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த துடன் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 6.20 மணியளவிலேயே மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டது. (ச-21)

# சட்டவிரோதக் குடியேற்றத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை

## தவிசாளர் நசீர் தெரிவிப்பு

அட்டாளைச்சேனை,பெப்.29

அட்டாளைச்சேனை, ஆற்றங்கரையோரத்தின் சில பகுதிகளில் சட்டவிரோதமாக அத்துமீறிக் குடியேறியமர்ந்தவர்களை அகற்றவுள்ளதாக அட்டாளைச் சேனைப் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.எம். நசீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 11ஆவது மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இடத்தில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு பிரதேச சபையின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அட்டாளைச்சேனை 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளின் ஆற்றங்கரையோரத்தில் அத்துமீறிக் குறியேறியுள்ளோரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களே இந்த இடங்களில் முன்பு குடியமர்ந்ததாகக் கூறப்பட்டது. அவ்வாறானவர்களுக்கு வேறொரு இடத்தில் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதற்காக கடந்த காலங்களில் அரசால் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த பணத்தைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலரே தற்போது ஆற்றங்கரையோரத்தில் மீண்டும் அத்துமீறிக் குறியமர்ந்துள்ளனர். - என்றார். (ச)

# ஹேனெகமவில் தீ விபத்து

வெலிவேரியா, ஹேனெகம பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தீ விபத்துக் காரணமாக காகித உபகரணங்கள் கடையொன்றும் அருகிலிருந்த வீடொன்றும் எரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்தைபொலிஸார், கம்பஹா நகர சபை , யின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# ரயில்வே அதிகாரி மீது தாக்குதல்

திருகோணமலை,பெப்.29

திருகோணமலை இரவு நேர தபால் ரயிலின் உப பாதுகாப்பு அதிகாரி மீது ராகமயில் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றிமுன்தினம் திங்கட்கிழமை கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற ரயிலின் பாதுகாப்பு அதிகாரியே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சுமார் ஒரு மணித்தியாலம் ரயில் ராகம ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)



மட்டக்களப்பு, முகத்துவாரத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. சிறுவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட படகுச் சேவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

# போலி ஆவணங்களைத் தயாரித்து காணி விற்பனை செய்த குழு கைது

மட்டக்களப்பு,பெப்.29

மட்டக்களப்பு, பாசிக்குடா பிரதேசத்தில் இருக்கும் வெளிநாட்டவர் ஒருவருக்கு சொந்தமான ஆயிரத்து 680 லட்சம் ரூபா பெறுமதியான காணியை போலி ஆவணங்களை தயார் செய்து விற்பனை செய்த குழுவொன்றை மட்டக்களப்பு மோசடி தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தக் குழுவில், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் இரண்டு ஊழியர்கள், கிராம சேவையாளர், நொத்தாரிசு உட்பட 5 பேர் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

4.2 ஏக்கர் காணியை போலி ஆவணங்களைத் தயாரித்து, கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு சந்தேகநபர்கள் விற்பனை செய்துள்ளனர். பாசிக்குடா சுற்றுலா வலய பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தக் காணியை 1979 ஆம் ஆண்டு வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் கொள்வனவு செய்திருந்தார். அப்போது இந்தக் காணியின் பெறுமதி ஒரு லட்சத்து 16 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காணியை வாங்கியவர் காணியை பராமரிக்கும் பொறுப்பை இலங்கையர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளார்.

போர் முடிவடைந்த பின்னர், தமது காணியைப் பார்வையிட சென்றிருந்தபோது, அந்த காணி போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருப்பதை வெளிநாட்டு நபர் அறிந்து கொண்டார். இதனையடுத்து பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குக!

நாவிந்தன்வெளி, பெப். 29

கிழக்கு மாகாண அரச பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் கிழக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்து தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று ஆங்கில ஆசிரியர் சங்கச் செயலாளர் கே.எம்.முகைதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண அரச பாடசாலைகளில் காணப்படும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2005ஆம் ஆண்டு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலம் தெரிவுசெய்யப்பட்டோம். ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டு ஏழு வருடங்கள் கடந்தும் நிரந்தர சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை.

சேவையிலிருந்த ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 2005, 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிரந்தர சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்தது. ஆனால்,மணித்தியாலத்துக்கு 125 ரூபா வீதம் ஒரு நாளைக்கு 2 மணித்தியாலக் கொடுப்பனவுடன் பாடசாலை நேரம் முழுவதும் கற்பித்து வருகின்றனர்.

7 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் நியமனம் செய்யப்படவில்லை. இதனைத் முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளோம்- என்றார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses

2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு

| Duration 3months,4months | |
|---|---|
| Batch I:- 29-02-2012<br>Batch II:- 02-03-2012<br>Batch III:-03-03-2012<br>Batch IV:-04-03-2012 | Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail . |
| (Time:-9am or 3pm) | புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள். |

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர்மீது தனிப்பட்ட கவனம், அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் தமிழ்மொழி விளக்கத்துடன் வகுப்புகள் நடாத்தப்படும்.

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

**Certificate in Multi IT**
Duration - 1Week, 1Month
Rs 3500 only Batch i -29-02-2012
077 4691673 Batch ii -03-03-2012


# வேலியால் போக்குவரத்து இடைஞ்சல்

நவாலி,பெப்.29

நவாலி சின்னப்பா வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் வீதி அகலிப்பு செய்யப்பட்டு தார் வீதி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதன்போது சிலர் தமது வேலியின் பழைய மரங்களை அகற்றாமல் உள்ளதால் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் பாடசாலைப் மாணவர்களை ஏற்றிவந்த வாகனமொன்று மறுபக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்தை விலத்த முடியாமல் மோதும் நிலைக்கு சென்று மயிரிழையில் காப்பாற்றப்பட்டது.

இதே போன்று சில மின்கம்பங்களும் அகற்றப்படாமல் உள்ளதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளதாக மக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ந-100)


ஓம் விராட விஸ்வப்பிரமணே நம!

## 12ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



29.02.2012

துரைசாமி புவனேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன்

### து.வைத்தீஸ்வரன்

தனது 12ஆவது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரைப் பல்லாண்டு காலம் சீரும், சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கண்ணகை இல்லம்,
90, சிவன் கோயில்,
வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
பெரியப்பா கேந்திரன் (அவுஸ்திரேலியா)
பெரியம்மா சறோ (அவுஸ்திரேலியா)
அக்கா சிந்து (அவுஸ்திரேலியா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







12.02.2012 அன்று சண்டிலிப்பாய் சக்தி ஜிம் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாவட்டமட்ட பளுதூக்கல் போட்டியில் மலாயன் சாண்டோ உடற்பயிற்சிக்கழகத்தைச் சேர்ந்த வெற்றிவேல் கிருஸ்ணதரன் (62kg நிறைக்குட்பட்ட பிரிவு) முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் நவரத்தினம் நாகராசா (85kg நிறைக்குட்பட்ட பிரிவு) இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்றதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் மேலும் பல சாதனைகளைப் புரிவதற்கு பருத்தித்துறை அருள்மிகு ஸ்ரீ பேச்சி அம்பாளின் அருள் கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

கல்லூரி வீதி, பருத்தித்துறை — ஸ்ரீ பேச்சி அம்மன் ஆலய சமூகம்.

(சி/8590) (2-6-7)

## நான்காவது பிறந்நாள் வாழ்த்துக்கள்





பரமேஸ்வரன் ஜெனனி தம்பதிகளின் செல்லப் புதல்வி

### செல்வி ஜஸ்விதா

தனது நான்காவது பிறந்தநாளை இன்று (29.02.2012) கொண்டாடுகின்றார். இவர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நெடுந்தீவுப் பிள்ளையார் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பெரியமாமா, மாமி, றோஜிதன்
மற்றும் தாத்தா, அம்மம்மா, சின்னமாமா, கேசாமாமா, சாருமாமா
பெரியப்பா, பெரியம்மா, சைமிலி, தீப்தி (லண்டன்)
சித்தப்பா, அன்ரா, மேனுகா

நெடுந்தீவு - 03

## வாடகைக்கு

மெயின் வீதி, பருத்தித்துறையில் (பரு/வேலாயுதம் பாடசாலைக்கு அருகில்) அமைந்த கடைக்கட்டடம் வாடகைக்கு உண்டு. 540 சதுர அடி உள்விஸ்தீரணம், 270 சதுர அடி இரு கடைகளாக பிரிக்கக்கூடியது. தண்ணீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் கொண்டது.

தொடர்புகளுக்கு
0779581506, 0771556089

## பேரின்பப் பெருவிழா

### சுகமளிக்கும் அற்புத இரவு



நிம்மதிக்கு வழி
வாழ்க்கையில் புதியதோர் எதிர்பார்ப்பு

உங்கள் வாழ்க்கையில்

* பில்லி, சூனிய பிடிகளா
* போராட்டமா
* தீராத பிரச்சினையா
* தீராத நோயா
* பேய், பிசாசின் பிடியில் துயரமா
* சமாதானம் இல்லையா

உட்பிரவேசம் இலவசம்

வாருங்கள் தேவனுடைய வல்லமையை அனுபவியுங்கள்.

போதகர்: சுவீடன் தேசத்தைச் சேர்ந்த, போதகர் மைக்கல் போமன்

இடம்: பழைய மாநகர சபை வளாகம் (சுப்பிரமணியம் பூங்கா முன்னால்) யாழ்ப்பாணம்.

2012 மார்ச் 01,02,03,04 தினங்களில் மாலை 4.30 மணிக்கு

-Organized by Pastors' Fellowship - Jaffna -


## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி பரமநாதன்

சரவணை, காளி கோயிலடியைப் பிறப்பிட மாகவும் கேசாவில் வீதி, வண்ணார்பண்ணை வடமேற்கை வதிவிடமாகவும் இல. 235, யாழ் வீதி, தாண்டிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பரமநாதன் 27.02.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற பரமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற நல்லைநாதன் (நல்லையா) மற்றும் தில்லைநாதன் (லோகுமாமா), மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் காலஞ் சென்றவர்களான யோகம்மா, பூமாதேவி மற்றும் பூமணி, நாகேஸ்வரி காலஞ்சென்ற முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் நித்தியானந்தம் (நித்தி மெக்கானிக் - யாழ். வண்ணார்பண்ணை), காலஞ்சென்ற செல்வி தவமலர், நித்தியானந்தன் (ரகு - நெதர்லாந்து), அகிலன் (ரிங்கர், வவுனியா) ஆகியோரின் தாயும் தில்லைநாயகி (வண்ணார்பண்ணை), வசந்தமாலா (நெதர்லாந்து), ரஞ்சினிதேவி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் தர்சினி (பிரான்ஸ்), சாளினி (ஆசிரியை - Techno world, திருநெல்வேலி), வித்தியா (மாணவி, கொக்குவில் இந்து கல்லூரி ), விஜித் (நெதர்லாந்து), விஜோக் (நெதர்லாந்து), விஞ்சிற் (நெதர்லாந்து), வினோத் (நெதர்லாந்து), விமேஸ் (டோகா), கஜீபன், மயூரி (முகாமைத்துவபீட 1 ஆம் வருட மாணவி யாழ். பல்கலை), கபில்தாஸ் (மாணவன் -வவு/தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம்), திஷானி (வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா விவசாயக் கல்லூரி முன்பாகவுள்ள அவரது இல்லத்தில் நாளை (01.03.2012) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 235, யாழ். வீதி,
தாண்டிக்குளம், வவுனியா
விவசாயக்கல்லூரி முன்பாக.


மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(C8392)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு இத்தாலி கப்பலும் சிக்கியது விபத்தில்

## விரைகின்றன அவசர உதவிகள்



இந்தத் தீவிபத்து காரண மாகக் கப்பல் இருளில் மூழ்கிக் காணப்படுகிறது. இந்தக் கப்பலில் 636 பயணிகளும் 413 ஊழியர் களும் உள்ளனர்.

ரோம்,பெப்.29

ஆயிரத்துக்கும் அதிகமா னோருடன் பயணம் செய்து கொண்டிருந்த இத்தாலிய உல்லாசக் கப்பலொன்றில் ஏற்பட்ட தீவிபத்தின் காரண மாக மின்விநியோகம் செய லிழந்த நிலையில் இந்து சமுத்திரத்தில் சீஷெல்ஸுக்கு சுமார் 320 கிலோமீற்றர் தொலைவில் நிர்க்கதியாகி யிருப்பதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

கொஸ்டா அல்லீக்ரா என்னும் இந்தக் கப்பல் இத்தாலியின் கொஸ்டா குரூஸஸ் நிறுவனத்துக்குச் சொந்தமானது.

இதே நிறுவனத்தைச் சேர்ந்த கொஸ்டா கொன் கோர்டினா கப்பல் கடந்த மாதம் இத்தாலிக்கு அருகில் கவிழ்ந்ததால் 32 பேர் உயி ரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

கொஸ்டா அல்லீக்ரா கப் பலின் இயந்திர அறையில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் இத னால் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீவிபத்துக் காரண மாகக் கப்பல் இருளில் மூழ் கிக் காணப்படுகிறது.

இந்தக் கப்பலில் 636 பய ணிகளும் 413 ஊழியர் களும் உள்ளனர். உதவிப் படகுகள் ஆகாய மார்க்கமான உத விகள் என்பன கப்பலுக்கு அனுப் பப்பட்டுள்ளன.

இந்தக்கப்பலைசீஷெல்ஸ் துறைமுகத்துக்கு கட்டி இழுத்துச்செல்ல வேண்டியி ருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# வெருட்டுகிறார் புடின்



மொஸ்கோ,பெப்.29


அரபுக் கிளர்ச்சிக்கு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தமது சொந்த நலன்களுக்காக ஆதரவ ளிப்பதாக ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் சிரியாவில் இராணுவத் தலை யீடு மேற்கொள்ளப்படுவ தற்கு எதிராக எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் அரசுக்கு எதிராகத் தடைகளை ஏற் படுத்துவதற்கு மேற்குலக நாடுகள் மேற்கொள்ளும் முயற்சியையும் ரஷ்யப் பத்திரிகையொன்றில் வெளி யான கட்டுரையொன்றில் புட்டின் தெரிவித்துள்ளார். அதேவேளை சிரிய அரச படைகளும் எதிர்த் தரப்புப் படைகளும் இரத்தக் கள ரியை தடுப்பதற்காக நகரங் களிலிருந்து வெளியேற வேண்டும் எனவும் புடின் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் இடம்பெற்ற தைப் போன்ற நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறுவதற்கு மொஸ்கோ அனுமதிக்காது எனக் கூறியுள்ள விளாடிமிர் புடின், சிரியாவில் இடம் பெறும் ஆர்ப்பாட்டங்களை ஜனாதிபதி அசாத்தின் அரசு ஒடுக்குவதைக் கண்டிக்கும் ஐ.நாவின் பிரேரணைக்கு எதிராக ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ அதிகாரத்தைப் பிர யோகித்ததையும் நியாயப் படுத்தினார்.

இதேவேளை, ஈரான் மீது மேற்கொள்ளப்படும் எந்தத் தாக்குதலும் பேரழிவான தொடர்விளைவுகளுக்கு வழிவகுக்கும் என அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

## ஒவ்வொரு வருடமும் இவர்கள் திருமணம்



அமெரிக்காவைச் சேர்ந்த சுசன் தம்பதியினர் ஒவ்வொரு வருடமும் தமது திருமண தினத்தில் புதிதாக மீண்டும் திருமணம் செய்து கொள்கின்றனர்.

இந்த வருடம் கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் லோஸ்வெகாஸ் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் தமது 15 ஆவது திருமணத்தைச் செய்துகொண் டனர். அதன்போது பேட்டி அளித்த சுசன், ஒவ்வொரு வருடமும் தாம் திருமணம் செய்து கொள்வதால் தம் இருவருக்கும் இடையில் நெருக்கம் அதிகரிப்பதாகத் தெரிவித்ததுடன் எதிர்வரும் வருடம் தமது 16 ஆவது திருமணத்தை அமெரிக்காவின் கால்பந்தாட்டப் போட்டி நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

## நேபாளத்தில் மூவர் சாவு

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடத்தப் பட்ட குண்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமடைந்துள் ளனர்.

சனநெரிசல்மிக்க காத் மண்டுவின் மத்திய பகுதி யில் இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

நேபாளத்தின் எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு வெளியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தாக் குதல் குறித்து மேலதிக தகவல்கள் எதுவும் இது வரை வெளியாகவில்லை.

இந்தப் பகுதியில் வட இந்தியாவிலிருக்கும் நக்சலைட்டுக்களின் செல் வாக்கு இருப்பதாக கூறப் படுகின்றபோதிலும் இந்தத் தாக்குதல் தொடர்பானவர் களைக் கண்டுபிடிக்க முடிய வில்லை.



ரஷ்யப் பிரதமர் புடினுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ரஷ்யாவில் பரவலாக பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மொஸ்கோ நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது புரட்சியாளர் ஒருவர் ரஷ்ய இராணுவத்தினரால் மோசமாக அடக்கப்படுகின்றார்.

# ஆப்கன் விமான நிலையம் மீது தலிபான்கள் தாக்குதல்

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதி யில் அமைந்துள்ள ஜலலபாத் விமான நிலையத்தின் மீது தலிபான்கள் தாக்கு தல் நடத்தியுள்ளனர்.இந்தத் தாக்குதல் களில் ஒன்பது பேர் கொல்லப்பட்ட டுள்ளனர். 10 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அண்மையில் இஸ்லாமியர்களின் புனித நூல் எரிக்கப்பட்ட சம்பவத்துக்குப் பழிவாங்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.



எனினும் இந்தத் தாக்குதலில் சர்வ தேசப் படையினர் கொல்லப்பட்டுள்ளமை இதுவரை உறுதி செய்யப்படவில்லை என நேட்டோப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் யுத்த விமானங்களும் பயணிகள் விமானங்களும் இந்த விமான நிலையத்தில் தரையிறக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கனடா அதிகாரிகள் நிறுத்தம்

காபூல் அமைச் சகங்களில் ஆலோசகர்களாக பணியாற்றி வந்த பல மேற்கு நாட்டவர்கள் திருப்பி அழைக்கப்படு கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் நடை பெறும் தொடர் போராட்டங் களின் விளைவாக அந்த நாட்டு அமைச்சகத்தில் பணி யாற்றும் கனடா நாட்டு அதி காரிகள் தங்கள் பணிகளை நிறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் ஆப்கானிஸ் தானின் காபூல் நகரத்துக்கு வடக்கே உள்ள பக்ராம் விமானத்தளத்தில் அமெரிக்க வீரர்கள் இஸ்லாமிய சமய நூலான குர்ஆனை எரித்த தைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் அமெரிக்கர்கள் 25 பேருக்கு மேல் கொல்லப் பட்டனர். இதைத் தொடர்ந்து நேட்டோ முடிவின் படி காபூல் அமைச்சகங்களில் ஆலோச கர்களாகப் பணியாற்றி வந்த பல மேல்நாட்டவரை பிரிட் டனும் அதைத் தொடர்ந்து [illegible]ம்பப் பெற் [illegible] கனடா நாட்டு அதிகாரிகளும் தங்கள் பணி களை நிறுத்திவிட்டனர்.

இந்தத் தகவலை பாதுகாப் புக் காரணங்களால் தமது பணிகளை நிறுத்துவிட்ட தாகக் கனடாவின் வெளி விவகாரத்துறை செய்தித் தொடர்பாளரான யோஹான் ரோடரிக்ஸ் கூறினார். அவர் கள் நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## அதியுச்ச திமிர் சீனாவுக்கு

சிரியாவின் விவகாரத் தில் சீனா எடுத்த நிலைப் பாட்டை 'அதியுச்ச திமிர்' என்று விமர்சித்த அமெரிக் காவின் கருத்தை சீனா மறுத் துள்ளது.

ஈராக்கில் ஏற்பட்ட அனு பவங்களுக்குப் பின் அரபு மக்களுக்காகப் பேச அமெரிக் காவுக்கு உரிமை கிடையாது என்று சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ செய்தித்தாளில் கருத்து வெளியாகியுள்ளது.

சிரியா குறித்த ஐ.நா.தீர் மானத்துக்கு எதிராக ரஷ்யா வும், சீனாவும் வீட்டோ அதி காரத்தைப் பயன்படுத்தியதை, 'வெறுக்கத்தக்கது' என்று அமெரிக்க வெளியுறவுச் செய லர் கிளாரிகிளிண்டன்அறிக்கை ஒன்றில் விமர்சித்ததை அடுத்து சீனா இந்தக் கருத்தை மறுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 115 பொதுமக்கள் சாவு

## மோசமடையும் சிரிய நிலைமைகள்



**ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கனரக ஆயுதங் களைப் பயன் படுத்தி பாதுகாப்புப் படையினர் தாக்கு தல்களை மேற் கொண்டு வருகின்றனர்.**

ஹோம்ஸ்,பெப்.29

சிரியாவின் வடபகுதியில் தொடர்ந்தும் இராணுவத் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி சிரிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 115இற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயினும் பொது மக்கள் உயிரிழப்புக்கள் இன்னும் அதிகமாக இருக்கலாம் என நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து அங்கிருந்து அவர்களும் வெளியேறி வருகின்றனர். இதனால் சேத விவரம் தொடர்பான சரியான தகவல்களைப் பெற முடியாமல் உள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் ஹோம்ஸ் நகரின் நிலைமை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடரும் வன்முறைகளில் இதுவரைக்கும் எண்ணாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆராய்ச்சி முடிவுகள் ஆபத்தானவை



சர்ச்சைக்குரிய பறவைக் காய்ச்சல் வைரஸ் தொடர்பான ஆராய்ச்சி முடிவை வெளியிடுவது தொடர்பில் நிபுணர்கள் தாமதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது வெளியிடப்படும் பட்சத்தில் உயிரியல் பயங்கரவாதிகளால் அவை தவறாகப் பயன்படுத்தப்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக வெளியிடுவது தொடர்பாக மேலதிக கலந்துரையாடல் இடம்பெற வேண்டுமென ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் இந்த வைரஸைப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் காரணமாக ஆராய்ச்சியின் முக்கியமான பகுதிகளை வெளியிட வேண்டாம் என ஊடகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இது கல்விக்கான உரிமையை மறுப்பதாக சில விஞ்ஞானிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இந்த வைரஸ் மிகவும் இலகுவாக மக்களிடையே பரவும் எனக் குறித்த ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொலைத் திட்டம் முறியடிப்பு

மொஸ்கோ,பெப்.29

ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினைக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டிய இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உக்ரைன் பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது இந்தக் கொலைக்கான சதிமுயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை கடந்த ஜனவரி மாதம் ரஷ்யாவில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் இவர்களுக்கு தொடர்புள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் விளாடிமிர் புடின் போட்டியிடவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றன. நாடு முழுவதும் பரவலான ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆயினும் ரஷ்யப் பிரதமர் அது தொடர்பாக எதுவித கவனத்தையும் எடுக்காமல் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கும் பணிகளில் அக்கறை காட்டி வருகிறார்.

**அறைகள் வாடகைக்கு**

யாழ் பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில் நான்கு அறைகள் வாடகைக்கு விடப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் (OR) அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொ.பே: 0718565662

(15116)

# கிளின்ரனின் பெயரும் பரிந்துரை

இந்த ஆண்டிற்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்ரன் சிபார்சு செய்யப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டிற்கான உலக அமைதிக்குப் பாடுபட்டவர்களுக்கான நோபல் பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

அதற்காக 231 பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவர்களில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனும் ஒருவர். இவர் தவிர, ஜேர்மனியின் முன்னாள் ஜனாதிபதி ஹெல்மட் கோல், உக்ரைன் முன்னாள் ஜனாதிபதி யூலியா டிமோ சன்கோ, அமெரிக்க ராணுவ வீரர் பிரட்லி மேன்னிங்கும் அடங்குவர்.

இவர்களுக்கான நோபல் பரிசு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வழங்கப்பட இருக்கிறது.



**நீங்காத நினைவலைகள்**

ஆறாம் ஆண்டு இருபத்தேழாம் ஆண்டு







05-01-1932
06.03.2006
**சின்னையா சின்னத்தம்பி**

மண்ணுலகு முத்தென
விண்ணுலகு வித்தென

01-03-1969
21-03-1985
**சின்னத்தம்பி ரவிச்சந்திரன்**

சப்தமி - திதி - சதுர்த்தசி

நாம் வளர்ந்து விருட்சமாகி – எம்
நிழல்தனில் இளைப்பாற கனவு கண்ட அப்பாவே!
இடை நடுவே பிரிந்து போக அழைத்த தேனோ
காலங்கள் ஆறு கடந்தாலும் நீங்கள் வாழ்ந்த காலமும்
நீங்காத உங்கள் நினைவுகளும் எம்மை விட்டு ஒருபோதும்
நீங்காது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

'குமரபதி', உடுவில் மேற்கு, சுன்னாகம். - ஆண்டுகள் ஆறு அகன்றாலும் அகலாத நினைவோடு உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



மலர்வு 05 - 10 - 1947
உதிர்வு 30 - 01 - 2012

திருமதி
**சிவசுப்பிரமணியம் விஜயலட்சுமி**

நோயெல்லாம் அனுபவித்து
வினையெல்லாம் தீர்த்ததாலோ
இறைவன் உன்னை அழைத்துக்கொண்டான்.
இனி நோய் உன்னைத் தீண்ட முடியாது - நீ
நோயற்ற உடலெடுத்து எம்மிடையே வலம்
வந்து குலவுவதற்கு காத்திருக்கும்...

அரசடி ஒழுங்கை, தாவடி வடக்கு,
கோக்குவில். குடும்பத்தினர்.
(15159) (6,7,10)

**ஓராண்டு சிரார்த்த தின அழைப்பு**

மலர்வு 16 - 01 - 1916
உதிர்வு 12 - 03 - 2011



**நாகநாதர் சுப்பையா**

கடந்த 12.03.2011 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்
**நாகநாதர் சுப்பையா**

அவர்களின் ஓராண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று
(29.02.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில்
அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால்,
அத்தருணம் தாங்களும் வருகைதந்து
அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

புதுவெளி,
ஆறுகால்மடம். குடும்பத்தினர்.

**20ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

மலர்வு 19 - 12 - 1919
உதிர்வு 28 - 04 - 1992



**சுப்பையா நாகம்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போபால் விஷவாயு விபத்து:

# அமெ. நிறுவனங்கள் உளவு பார்த்தனவாம்

### விக்கிலீக்ஸ் தகவல்



போபால் விஷவாயு விபத்துத் தொடர்பாக அமெரிக்க நிறுவனங்கள் உளவு பார்த்ததாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த 1984 ஆம் ஆண்டு மத்திய பிரதேச மாநிலம் போபாலில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட விஷவாயு கசிவின் காரணமாக அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்தக் கொடிய விபத்துத் தொடர்பாக நடைபெற்ற போராட்டங்கள், நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் போராட்டக்காரர்களின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல தனியார் துப்பறியும் நிறுவனமான ஸ்டிராட்பார் உளவு பார்த்ததாக, விக்கிலீக்ஸ் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விக்கிலீக்ஸ், மீண்டும் செயற்படத் தொடங்கிய பின்னர் வெளியிடப்பட்டுள்ள இந்தத் தகவல்களில், டவ் ரசாயன நிறுவனத்துக்காக உளவு பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கு ஆதாரமாக, கடந்த 2004 - 2011 ஆம் ஆண்டு வரையிலான மின்னஞ்சல் பரிமாற்றத் தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

ஆனால், ஸ்டிராட்பார் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஜார்ஜ் பிரீட்மென் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தவறான தகவல்களைத் தொடர்ந்து பரப்பி வரும் தனியார் அமைப்புகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)

## ஒரு வருடத்தின் பின்னர் இந்தியா வந்தடைந்த உடல்

**சட்டச்சிக்கல் காரணமாக கிருஷ்ணன் குட்டியின் உடலை இந்தியாவுக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டது.**

சவூதி அரேபியாவில் கடந்த வருடம் கார் விபத்தில் இறந்தவரின் உடல் ஒரு வருடத்தின் பின்னர் அவரது சொந்த ஊரான கேரளாவுக்கு அனுப்பப்பட்டது.

கேரள மாநிலம் கோட்டயம் அடுத்த கிண்டங்கூரை சேர்ந்தவர் கிருஷ்ணன் குட்டி (வயது 55). இவர் சவூதி அரேபியாவின் ஜிசான் நகரில் 18 ஆண்டுகளாக சாரதியாகத் தொழில் புரிந்து வந்தார். கடந்தாண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அவர் காரைச் செலுத்திச் சென்ற போது, குறுக்கே ஒட்டகம் ஒன்று ஓடிவந்தது. அதன் மீது மோதியதில் கார் கவிழ்ந்து, கிருஷ்ணன் உயிரிழந்தார்.

அவர் வேலை பார்த்த நிறுவனம் இதற்கு நட்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்தது. இதனால் ஏற்பட்ட சட்டச்சிக்கல் காரணமாக கிருஷ்ணன் குட்டியின் உடலை இந்தியாவுக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டது.

உடல் கெடாத வகையில் ப்ரீசர் அறையில் வைக்கப்பட்டது. இதற்கிடையில் இதுதொடர்பான வழக்கை நடத்தும் பொறுப்பை ஷிகாப் என்ற சமூக சேவகரிடம் கிருஷ்ணனின் உறவினர்கள் ஒப்படைத்தனர்.

அவருக்கு எதிராகவும் நிறுவனம் வழக்குத் தொடர்ந்ததால் உடலை இந்தியாவுக்கு அனுப்புவது தாமதமானது.

வழக்கு நடவடிக்கைகள் உடனடியாக முடிக்கப்பட்டதை அடுத்து, கிருஷ்ணனின் உடலை இந்தியாவுக்கு அனுப்ப சவூதி உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்தது.

ஜிசானில் இருந்து ரியாத் வழியாக கொச்சிக்கு விமானத்தில் அவரது உடல் கொண்டு செல்லப்பட்டதாக ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## பிளஸ் 2 பரீட்சை எழுதுகிறார் பேறறிவாளன்




இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேறறிவாளன் இம்முறை பிளஸ்-2 பரீட்சை எழுதவுள்ளார். வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர் எதிர்வரும் 8ஆம் திகதி பிளஸ்-2 தேர்வு எழுதுகிறார். இதேபோல் வேலூர் ஜெயிலில் உள்ள மற்றொரு கைதியான சசிகரன் என்பவரும் பிளஸ்-2 பரீட்சை எழுதுகிறார்.

இவர்களுக்காக வேலூர் ஜெயிலில் பிளஸ்-2 பரீட்சை நிலையம் அமைக்கப் படுகிறது. கைதிகளுக்காக சிறையில் பிளஸ்-2 பரீட்சை நிலையம் அமைப்பது இதுவே முதல் முறையாகும். பேறறிவாளன் ஏற்கனவே டிப்ளோமா க்றகை நெறி கற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## கையெறி வெடிகுண்டு வெடித்து 4 பொலிஸார் காயம்

செங்கல்பட்டு, பெப்.29

பயிற்சியின்போது கையெறி வெடி குண்டு வெடித்து பொலிஸ்காரர்கள் 4 பேர் படுகாயம் அடைந்தனர். செங்கல்பட்டு அடுத்த அனுமந்தபுரத்தில் பொலிஸ் துப்பாக்கி சுடும் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. ஆவடி சி.ஆர்.பி.எப். பொலிஸார் 72 பேர், 11 மாத பயிற்சிக்காக நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு இங்கு வந்தனர். கையெறி வெடி குண்டுகளை வாயால் கடித்து வீசினர். அப்போது 4 செக்கனில் வெடிக்க வேண்டிய ஒரு கையெறி வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. காயமடைந்த 4 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (வ)



லக்னோவில், கோடிக்கணக்கான ரூபா செலவில் மாயாவதி அமைத்த பார்க்கில், தேர்தல் ஆணையகத்தின் உத்தரவால் மூடி வைக்கப்பட்டுள்ள மாயாவதி மற்றும் கன்சிராம் சிலைகள் உள்ள இடம்.

## கூடங்குளப் போராட்டத்துக்கு நிதி திரட்டியவர் நாடு கடத்தல்

சென்னை, பெப்.29

கூடங்குளம் அணு உலைத்திட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு நிதி திரட்டித் தந்ததாக ஜேர்மனியைச் சேர்ந்தவர் நாடு கடத்தப்பட்டார்.

சென்னையில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த சோன்டெக் ரெய்னர் ஹெர்மன் என்ற நபர், அணு உலை போராட்டத்துக்கு தலைமை வகிக்கும் உதயகுமாருடன் தொடர்ந்து தொலைபேசியில் தொடர்பில் இருந்ததும் உறுதியாகியுள்ளது.


இதையடுத்து அவரது ஹோட்டல் அறையை சோதனையிட்ட மத்திய உளவுப் பிரிவினரான இன்டலிஜென்ஸ் பீரோ அதிகாரிகள், சில ஆவணங்களையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து வெளியுறவுத்துறை, உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கூடி விவாதித்து அவரை நாடு கடத்த முடிவு செய்தனர்.

இதையடுத்து அவர் வலுக்கட்டாயமாக ஜேர்மனி செல்லும் விமானத்தில் ஏற்றப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

முன்னதாக இவர் குறித்த சந்தேகம் வந்தவுடன், இவரது தொலைபேசி அழைப்புகள் ரகசியமாக கண்காணிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. (வ)

## 2ஜி வழக்கில் சோனியா மீது சுவாமி குற்றச்சாட்டு





டில்லி, பெப்.29

மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு 2ஜி மூலம் உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக சுப்பிரமணிய சுவாமி குற்றம் சாட்டியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு,. 2ஜி வழக்கில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்தையும் சேர்க்கக் கோரி, சுப்பிரமணிய சுவாமி உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிப்புச் செய்யப்பட்டது.

இந்தநிலையில், இந்த ஏல முறை பின்பற்றப்படாதமைக்கு சோனியாவே காரணம் என்றும், 2ஜி ஒதுக்கீட்டில் ஆ.ராசாவின் செயற்பாட்டை சோனியா தான் ஊக்குவித்தார் என்றும் தெரிவித்தார். இதுகுறித்து, ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார் என்று தகவல் வெளிவந்துள்ளது. (வ)

## நில மோசடியில் ஊழல் தமிழக ஆளுநருக்கு சிக்கல்

ஆந்திராவில் பல நூறு கோடி ரூபா மதிப்புள்ள அரசு நிலத்தை விற்றது தொடர்பாக நடந்த ஊழ லில் தமிழக ஆளுநர் ரோசய்யாவுக்கு புதிய சிக்கல் எழுந்துள்ளது.

ஹைதராபாத்தின் அமீர்பேட் பகுதியில் மைத்ரிவனம் என்ற இடத்தில் 9.14 ஏக்கர் அரசு நிலம் ரோசய்யா முதல்வராக இருந்த போது தனியாருக்கு விற்கப்பட்டது. இந்த நிலத்தின் மதிப்பு பல நூறு கோடி ரூபாவாகும். ஆனால், இதை மிகக் குறைந்த விலைக்கு விற்றதில் பெரும் ஊழல் நடந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து ஊழல் தடுப்புப் பிரிவினர் விசா ரணை நடத்தினர். ஊழல் தடுப்புப் பிரிவு சிறப்பு நீதி மன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது.

ஊழல் தடுப்புப் பிரிவினர் நடத்திய விசாரணையின்போது மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான பி.எல்.ஆச்சார்யா, டி.சன்யாசி அப்பாராவ் ஆகியோர் அளித்த சாட்சியத்தில், இந்த நிலத்தை விற்பதற்கு தாம் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறியிருந்தனர். ஆனாலும் ரோசய்யாவை இந்த வழக்கில் இருந்து ஊழல் தடுப்புப் பிரிவு விடுவித்தது.

இந்த நிலையில், 2 மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் தந்த வாக்குமூலத்தை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ரோசய்யாவை ஊழல் தடுப்புப் பிரிவினர் விடுவித்தது தவறானது என்றும் தெலுங்கானா சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக இந்த இரு அதிகாரிகளும் அளித்த வாக்குமூலத்தை பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், ரோசய்யாவை தமிழக ஆளுநர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது.

## பயங்கரவாதத் தடுப்பு நிலையம் திட்டமிட்டபடி செயற்படாது

### சிதம்பரம் தகவல்



டில்லி, பெப்.29

தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் மார்ச் முதலாம் திகதி செயற்படமாட்டாது என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால், மார்ச் முதலாம் திகதி தொடக்கம், இந்த மையம் செயற்படுவதை தற்காலிகமாக ஒத்திவைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசிய பயங்கரவாதத் தடுப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தை செயற்படுத்த மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்தது.

இந்த நிலையத்தை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் செயற்பாட்டுக்குக் கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலையில், மத்திய அரசின் இந்த முடிவுக்கு, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.மத்திய அர சின் இந்த முடிவு, மாநிலங்களின் அதிகாரத்தில் தலையிடு வதாக உள்ளது என்று அவர்கள் விமர்சித்திருந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுண்டாயில் அணையை அழித்து

# விஷமிகள் மண் அகழ்வு குடிமனைகளுக்கு ஆபத்து

நவாலி, பெப்.29

கல்லுண்டாய்ப் பகுதியில் அனுமதியின்றி மீண்டும் மீண்டும் தொடர்ந்து மண் அகழ்வதால் கடல் நீர் குடிமனைகளுக்குள்ளும் வயல் நிலங்களுக்குள்ளும் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளது.

மண் அகழ்வோர், இந்தப் பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட மண் அணை கடல் நீர் வெளியே வராமல் அமைக்கப்பட்ட மண் அணை என்பவற்றையே, அழித்து உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

**இந்தப் பகுதி விவசாய சம்மேளனம் மற்றும் சில பொது அமைப்புகள் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடியும் மனுக்களைக் கையளித்தும் இதுவரை, தகுந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.**

இது குறித்து இந்தப் பகுதி விவசாய சம்மேளனம் மற்றும் சில பொது அமைப்புகள் அதிகமாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடியும் மனுக்களைக் கையளித்தும் இதுவரை, தகுந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலை மேலும் தொடருமேயானால் கடல் நீர் வயல் நிலங்களுக்குள்ளும் குடிமனைகளுக்குள்ளும் உட்புகும் அபாயம் ஏற்படுவதுடன் சுற்றாடலிலுள்ள கிணறுகளும், மாசடைந்து உவர் நீராக மாறும் தன்மைக்கும் ஏதுவாகின்றது.

இது குறித்து சில தினங்களுக்கு முன்னரும் ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனத்தினர் இந்தப் பகுதி பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டதிற்கிணங்க அங்குள்ள உத்தியோகத்தர்களும், இந்தப்பகுதி உள்ளூராட்சி உறுப்பினரும் நேரில் பார்வையிட்டும் இவற்றை தடுத்து நிறுத்த முடியவில்லையென்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-100)

## வீதி படு மோசம் பயணிப்போர் சிரமம்

நவாலி, பெப்.29

ஆனைக்கோட்டையில் இருந்து நவாலியூடாகச் செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக சிதைவடைந்துள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த வீதியால் வாகனங்கள் செல்லும் போது வீதியிலுள்ள குழிகளில் விழுந்தெழும்பித்தான் செல்கின்றன. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர், இதே போன்றிருந்த குழிகளுக்குத் தார்க்கலவைகள் போட்டு செப்பனிடப்பட்டது.

தற்போது இவை இடிந்து அக்கலவையின் கல்லுக் குறுணிகள் வீதியெங்கும் சிதறப்பட்டுள்ளன. இதனால் சைக்கிளோட்டிகள் பாதசாரிகள் கவனமாகவே செல்ல வேண்டியுள்ளது.

மேலும் இந்த வீதியோரம் குடியிருக்கும் குடியிருப்பாளர் சிலர் தமது கழிவு நீரை, வீதிக்கு விடுவதால் அந்த நீர் இந்த வீதிக் குழிகளில் தேங்கி நிற்கின்றது. இந்த வேளையில், பாதசாரிகளோ, பாடசாலைப் பிள்ளைகளோ நடந்து செல்லும் பொழுது வாகனங்கள் வேகமாக வந்து குழிகளில் விழுந்து செல்லும் போது தண்ணீர் சிதறிப் பறப்பதால் இதில் நனைய வேண்டியயுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு வாகனங்கள் கிடங்கில் விழுந்து செல்லும் போது, அதற்குள் நின்ற தண்ணீர் சிதறிப் பறந்தபோது பாடசாலைப் பிள்ளைகளின் வெள்ளை ஆடைகள் அழுக்கு நீரில் தோய்ந்ததால் அவர்கள் கவலையுடன் வீடு திருப்பிச் சென்றதையும் காணமுடிந்தது. (வ-100)

## வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்

சாவகச்சேரி, பெப்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 6 மாணவர்களுக்கான கணித மதிப்பீடு 2 இற்கான பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரையும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (வ-9)



சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் 5 ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு சங்கத்தின் அப்போதைய தலைவரும் இளைப்பாறிய தபால் அத்தியட்சகருமான அ.துரைசிங்கம் பரிசில் வழங்கிக் கௌரவிக்கிறார். (8)

## தென்மராட்சியில் நுளம்பு வலைகள் வழங்கல்

தென்மராட்சி, பெப்.29

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சர்வோதய நிறுவனம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நுளம்பு வலைகளை வழங்கி வருகின்றது.

கோயிற்குடியிருப்பு, கல்வயல், சாவகச்சேரி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தலா 250 நுளம்பு வலைகள் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவு மக்களுக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இவை விநியோகிக்கப்பட்டன. (வ-9)

## வீதியில் மயங்கி வீழ்ந்து குடும்பப் பெண் மரணம்

சாவகச்சேரி, பெப்.29

வீதியோரத்தில் மயங்கி வீழ்ந்து குடும்பப் பெண் மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காளி கோயிலுக்கு பூக்கள் கொடுத்து விட்டு வீடு திரும்புகையில், மயங்கி வீழ்ந்தபோது அந்தப் பகுதியில் நின்றவர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கையில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த தர்மலிங்கம் மனோன்மணி (வயது -60) என்பவரே மரணமானவராவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலைச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரின் மரணம் தொடர்பாக, வைத்தியசாலை பொலிஸ் பிரிவினர் சாவகச்சேரி பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். சாவகச்சேரி பொலிஸார் இந்த மரணம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான், திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சாவகச்சேரி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர், சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார். (வ-9)

## பாடசாலைக்கு 6 அடி உயரத்தில் சரஸ்வதி சிலை

வடமராட்சி, பெப்.29

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில், ஆறு அடி உயரமான சரஸ்வதி சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வித்தியாலய நுழைவாசலில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சரஸ்வதி சிலையை, தம்பசிட்டியைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் கலாபூஷணம் கோ.வேலுப்பிள்ளை வடிவமைத்து உருவாக்கி வருகின்றார்.

இன்னும் இரண்டு மாத காலத்துக்குள் சரஸ்வதி சிலையின் நிர்மாணப்பணி நிறைவடையும் எனப் பழைய மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. (வ-8)

## அவதார விழா

வடமராட்சி,பெப்.29

அல்வாய்,கிளானை மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தில் அம்மாவின் அவதார 72 ஆம் ஆண்டுப் பெருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சக்தி கொடியேற்றுதல், யாகத்திற்குரிய ஆரம்பப் பூசைகள் என்பன இடம்பெற்று, மறுநாள் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு சிறப்பு அபிஷேகமும்,8 மணிக்கு பக்தர்கள் பாதபூசையும், 9 மணிக்கு குத்துவிளக்கு கலச யாகமும், தொடர்ந்து பூசையும் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானத்துடன் நிறைவுறும். (வ-8)

## நாடு திரும்ப விரும்பாத இலங்கை அகதி சாவு

கும்மிடிப்பூண்டி இலங்கை தமிழர் அகதி முகாமில் வசித்து வந்த முனி யாண்டி (வயது 71) என்பவர் ரயிலில் மோதி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவரது சொந்த ஊர் இலங்கையில் வவுனியா பிரதேசமாகும். இவரும் இவரது குடும்பத்தாரும் திங்கட்கிழமை இலங்கைக்குச் செல்வதாக இருந்தது.

**இவரும் இவரது குடும்பத்தாரும் திங்கட்கிழமை இலங்கைக்குச் செல்வதாக இருந்தது. அதற்கான பொலிஸ் விசாரணை முடித்து நடைமுறை ஏற்பாடுகளை குடும்பத்தினர் செய்திருந்தனர்.**

அதற்கான பொலிஸ் விசாரணை முடித்து நடைமுறை ஏற்பாடுகளை குடும்பத்தினர் செய்திருந்தனர். ஆனால் முனியாண்டிக்கு இலங்கைக்குச் செல்வதில் விருப்பம் இல்லை என்று கூறப்படுகிறது.

இதனால் சம்பவத்தன்று அதி காலையில் முனியாண்டி கும்மிடிப்பூண்டி முகாமையொட்டி உள்ள ரயில் தண்டவாளம் அருகே சென்றார்.

அப்போது ஆந்திராவில் இருந்து சென்னை நோக்கிச் சென்ற எக்ஸ்பிரஸ் ரயில் குறுக்கே பாய்ந்து அவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சென்னை கொருக்குப்பேட்டை ரயில்வே பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## தென்கொரியாவில் தம்பதி மரணம் இலங்கையர் இருவர் கைது

தென்கொரியாவின் ஜொங்கிடோ எனும் பகுதியில் தொழில்புரிந்து வந்த இலங்கைத் தம்பதியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தீ விபத்தில் கருகி உயிரிழந்துள்ளனர். இதனுடன் தொடர்புடையவர்கள் என்று இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தில் நுகேகொடை மிரிஹானைப் பகுதியைச் சேர்ந்த டைட்டஸ் பந்துல என்பவரும் கடவத்தை ராகம வீதியைச் சேர்ந்த அவரது மனைவியான சொனாளி பாக்யா என்பவருமே உயிரிழந்திருப்பதாக வெளிவிவகார அமைச்சின் கொன்சுயுலர் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

கொள்கலன் இறங்குதுறையில் பணி புரிந்த இவர்கள், தங்கியிருந்த வீட்டில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாகவே உயிரிழந்துள்ளனர்.

தாம் தங்கியிருந்த வீட்டுக்குள் புகை வெளிவருவதாக மேற்படி தம்பதியினர் தீயணைக்கும் படையினரிடம் முறையிட்டுள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த போது இலங்கைத் தம்பதியினர் தீயில் கருகி உயிரிழந்ததாக கொரிய தூதரகத்திலுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நெல்சிப் திட்டத்தின் கீழ் வடக்கில் 8 திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.29

வடக்கில் நெல்சிப் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக பெரியளவில் 8 உட்கட்டுமானத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபையூடாக நெல்சிப் திட்டத்தில் இருமாடி கட்டடத் தொகுதிகளாக வரவுள்ள பிரதேசங்களை யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள மாவட்டப் பொறியியலாளர் எந்திரி எஸ். ஸ்றெயிலிதரன் நேரடியாகப் பார்வையிட்டு உறுதி செய்துள்ளார்.

ஒவ்வொரு கட்டடமும் [illegible]க்கும் 60 மில்லியனுக்குமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2012 இல் அவசர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மாவட்ட பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி நெல்சிப் மாவட்ட பொறியியலாளர் எந்திரி எஸ். ஸ்றெயிலிதரன் அவர்களினால் நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வடிவமைப்புத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் வருமாறு:

சாவகச்சேரி நகர சபை - நவீன இருமாடிக் கடைத் தொகுதி, வேலணைப் பிரதேச சபை - நவீன இருமாடி கடைத் தொகுதி, வலி.தெற்கு பிரதேச சபை- நவீன கடைத் தொகுதி, பருத்தித்துறைப் பிரதேச சபை- இருமாடிக் கடைத் தொகுதி, வல்வெட்டித்துறை-நகர சபை - நவீன் இருமாடிக் கடைத் தொகுதி, சுழிபுரம் பிரதேச சபை- நவீன இருமாடிக் கடைத் தொகுதி, மானிப்பாய் பிரதேச சபை- நவீன சந்தைக் கடைத் தொகுதி என்பனவாகும்.

மேற்படி நவீன உட்கட்டுமானத் திட்டங்கள் ஊடாக பிரதேச நகர சபைகளின் வருமான எல்லையை உச்சப்படுத்தவே இந்திட்டங்கள் மக்களால் நெல்சிப் இல் தெரியப்படுத்தப்பட்டதாக மாவட்ட பொறியியலாளர் தெரிவித்தார். (வ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...
# ...சொல்ல?!

வெளிநாட்டிலிருந்து வந்த முதியவர் கேட்டாரே ஒரு கேள்வி...!

சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற ஒரு முதியவர் - எழுபத்தேழு வயது உடையவர். நல்லதோர் தமிழ் மகன், நாட்டின் வாழ்விலும் வளத்திலும் அக்கறை மிக்கவர், பண்பாளர், படித்தவர், பல நாடுகளையும், மக்களையும் கண்டவர். அவர் பக்குவம் மிக்க பக்தி மானும் ஆவார். இனி அவருடன் பேசுங்கள். இடையில் நான் குறுக்கிட விரும்பவில்லை.

போர் நடந்ததை நன்றாக அறிவேன். போரின் தாக் கத்தை யும் அறிவேன். போர் முடிந்ததையும் அறிவேன். ஒன்றை



மட்டும் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. வடக்கே வசந்தம் என்றார் கள். ஏதோ வீச ஆரம்பித்தது போல் தோன்றுகின்றது. ஆனால் வசந்தம் வந்து சேரவில்லை.

நான் அறுபதுகளில் கண்ட யாழ்ப்பாணம் ஏன் இன் னும் அப்படியே - பருவ மடையாத நங்கையைப் போலிருக்கிறது? கூனிக் குறு கக் காரணம் என்ன?

எல்லாவற்றையும் அரசுதான் செய்ய வேண் டும் என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண் டும்? உதாரணத்துக்கு ஒன்றைக் கேட்கின் றேன். திருக்கோவில் கள் அவசியமானவை. நானும் ஒரு சைவன் என்பதால் சொல்கிறேன்.



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்- என்றுதானே முதியோர்கள் சொன்னார்கள். கோயில் கள் என்று பன்மையாகச் சொல்லவில்லையே. ஊருக்குப் பத்து சில இடங்களில் பதினைந்தும் கோயில்கள் உள்ளன. ஆனால் எனது மகன் படித்த இராமநாதன் கல்லூரியை வெளியே தான் நின்று பார்த்தேன். அதே மதில், அதே கட்டடம், அதே புல்லுப் பற்றை, அதே மண்டபம், அப்படி இராம நாதனது கோயில், எல்லாமே அப்படித்தான் இருக்கின்றன. எனது பேரன் படிக்கும் ஸ்கந்தவரோதயா என்ன சில மாற்றங்களே. யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோத யக் கல்லூரி, இளவாலையில் சென்.ஹென்றிஸ் இப்படியாக எனது நாட்ட மெல்லாம் யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளையே தேடி நின் றது. நான் ஓட்டோ ஒன்றை மூவாயிரம் பேசி வாடகைக்கு அமர்த்தி (20) கல்லூரிகளைப் பார்த்தேன். அதனை முடித்துக் கொண்டு, தெல்லிப்பழை துர்க்கை, கீரி மலைச்சிவன் மாவைக்கந்தன், அள வெட்டி கும்பளாவளை என்று தொண்டமானாறு சந்நிதி, வல்லி புரக் கோயில், காரை நகர் சிவன்கோயில் இப்படி ஐயாயிரம் ரூபா கொடுத்து வாக னம் ஒன்றில் சென்று வந்தேன். கல்வி ஒரு கண் என்றால் இறை பக்தி மறு கண் என்பார்கள். இங்கு ஒரு கண் மூட மறு கண் திறந்திருக்கிறதே!

பாடசாலைகள் செவ்வனே நடைபெற்றால், சந்திக் குச் சந்தி ஏன் இத்தனை ரியூட்டறிகள் இருக்கின்றன என்று எவ ருக்குமே விளங்கவில்லை. எனது வன்னிப் பயணத்தில் பல கிராமங்களைச் சென்று பார்த்தேன். என்ன கொடுமை! அங்கு கல் லூரிகள், சில இடங்களில் மாட்டுத்தொழுவங்களா கவே உள்ளன. கல்வி இப்படிச் சீர்கெட்டுவிட, நாம் பல கோடிகள் வீண் செலவு செய்வது கோவில்கள் கட்டுகிறோம்; புதுப்பிக்கிறோம் மனச்சாட்சி ஏற்கக் கூடிய செயலா என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அடுத்து என் மனதை வருத்துவது, காங்கேசன் துறைவீதி, பருத்தித்துறை வீதி, கொடிகாமம் வரை செல்லும் வீதி- தீவகம் செல்லும் வீதி, அவற்றில் எந்த வீதியிலும் எந்த ஊர் இது என்று கேட்டே அறிய வேண்டியுள்ளது.பிரதேச சபை கள், மாநகரசபைகள் இப்படிப் பல உள்ளூர் ஆட்சிச் சபைகள் இருந் தும் ஏன் அந்தந்த ஊர் தொடங்குமிடத்தில் ஊர்ப் பெயரை எழுதி ஒரு பலகையையேனும் நட்டு வைக்க வில்லை.

அதனையும் ராஜபக்ஷவின் அரசே செய்ய வேண் டும்; எமக்கு ஏன் இந்த வம்பு என்று மக்கள் கேட்பது போல் தெரிகிறது. வெளிநாடுளில் உள்ளவர்களைத் திருக்கோவில் கட்டப்பணம் கேட்கும் அடியவர்கள், பாடசாலை, நூல் நிலையம், பூங்கா, நீச்சல் தடாகம் இப்படிப் பல சமூக நலத் திட்டத்தை ஏன் இன்ன மும் செய்ய நினைக்கவில்லை. அரிமாக் கழகம், ரோட்டறிக் கழகம் போன்ற கழகங்கள் யாவும் இங்குண்டு என்கிறார்கள். இவை கூடவா இவற்றைச் செய்ய முடியாது?

நான் உண்டு, என் வீடு உண்டு, என் மக்கள் உண்டு என்று மட்டும் எண்ணுபவர்கள் இருக்கும் மட்டும், நாடு காடாக மறுமே தவிர நாடு நலம் பெற மாட்டாது. இஸ் ரேலிய மக்கள் எப்படி தம் நாட்டைக் கட்டி எழுப்பினார் கள் என்பதை எம் சமூகத்துக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். நாடு இனியும் காடா காது, காப் பாற்ற வேண்டிய பொறுப்பு நம்மவரையே சாரும். நாடாளு மன்ற அங்கத்தவர்கள் உரிமைக்காகப் போராடட்டும். நாம், நமது, கிராமத்தை, சிற்றூரை, பேரூரை, வனப்புடன் வைத்திருக்க வேண் டாமா? ஊருக்கு ஒரு பூங்கா, ஒரு வாசிக சாலை, ஒரு நீச்சல் தடாகம்- இப்படி அமைப்பதும் சிவ தொண்டாகாதா? ஆலயங் களில் மட்டுமே ஈசன் தங்குவ தில்லை என்பதை மக்கள் வார்களா- என்றார்.

பிரசண்டன்

# நாட்டைக் கட்டியெழுப்ப மாணவர் தயாராக வேண்டும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

**மாணவர்களுக்குத் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப் பாங்கு தேவை. தோல்வி அடைந்தவர் முயன்று வெற் றியை அடைய வேண்டும்.**

யாழ்ப்பாணம்,பெப்.29

மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர் களாகவும், எதிர்கால சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றல் உடைய வர்களாகவும் மிளிர வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீரான விளையாட்டு மைதா னம் இல்லாது இந்தப் பாடசாலை மாணவர்கள் விளையாடுவதை அவதானித்து, நான் மிகவும் கவ லையடைந்துள்ளேன். உங்களது விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்க விரைவில் முயற்சி எடுப்பேன்.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி வேலைகளும் மீள்குடியமர்வும் நடைபெற்று வருகின்றன. எமது பகுதியில் நடைபெற்று முடிந்த போரினால் 29,000 பேர் விதவை களாக உள்ளனர். 6,000 பேர் ஊன முற்ற நிலையில் உள்ளார்கள், 38,000 பேர் வேலையின்றி இருக்கிறார்கள். 68,000 பேர் வீடிழந்துள்ளார்கள். இவர் களில் 28,000 பேருக்கு வீடுகள் வழங்கியுள்ளோம். தொடர்ந்து மக்க ளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப் பதற்காக நான் உழைப்பேன்.

இது எங்கள் தாய்நாடு. அடுத்த வரை நம்பி கடல்கடந்து ஓடக் கூடாது. மாணவர்கள் இந்த நாட் டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

நடைபெற்று முடிந்த போரின் போது நானும் வன்னியில் இருந் தேன். போரால் பல சிறுவர்கள் கல்வி கற்க முடியாத நிலையில் இருந்தனர். தாய், தந்தையரை இழந்த சிறுவர்கள் இப்போதும் சிறுவர் இல்லங்களில் உள்ளார்கள். எமக்கு எதிரான சக்திகளை எதிர்த்து, எமது நாட்டை முன்னேற்றுவோம்.

மாணவர்களுக்குத் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு தேவை. தோல்வி பெற்றவர் முயன்று வெற்றியை அடைய வேண்டும். நீங்கள் வீரர்கள் தோற்றவர், வென்ற வர் என்ற பாகுபாடு இன்றி ஒற்று மையாக இருக்க வேண்டும்- என் றார்.

(ச-16-51)

## நிர்வாகிகள் தெரிவு

நவாலி,பெப்.29

மானிப்பாய் பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் நவாலி கிளை யின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைவராக செ.நாகரத்தினமும் உப தலைவராக க.தருமலிங்கமும், செயலாளராக பி.பொன்னுத்துரையும், நான்கு பேர் அடங்கிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ச-100)

***

நவாலி,பெப்.29

சுதுமலை அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலையின் பழைய மாண வர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைவராகப் பொன்னுத்துரையும் உப தலைவ ராக திருமதி ஞானேஸ்வரியும், செயலாளராக கி.யோகராசாவும் பொருளாளராக வ.கதிரமலையும், 15 பேர் உள்ளடங்கிய நிர்வாக உறுப் பினர்களும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (ச-100)



கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந் தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்படு கின்றனர்.

# கல்வியிலும் விளையாட்டிலும் ஒருங்கே செயற்படுங்கள்

## பாடசாலை நிகழ்வில் பழைய மாணவர்

**வெளிநாடுகளில் நிதிசம்பாதிக்கலாம், விநோதக் காட்சி களைப் பார்க்கலாம். ஆனால் எமது தாயகப் பூமியில்தான் ஒற்றுமையையும், பண்பாட்டையும், அன்பையும் பகிரலாம்.**

யாழ்ப்பாணம்,பெப்.29

கல்வியில் மட்டுமன்றி விளை யாட்டிலும் ஒருங்கே செயற்படும் மாணவன் சமூகத்தின் விலை மதிப்புள்ள சொத்தாக மிளிரு கின்றான். இதற்குப் பாடசாலை யும் பெற்றோரும் கூடுதல் பங்க ளிப்பை வழங்க வேண்டும் என்று அமெரிக்காவில் இருந்து வருகை தந்த பழைய மாணவரான பரராஜ சேகரன் செகராஜசேகரன் தெரி வித்தார்.

நவாலி அட்டகிரி சைவ வித் தியாசாலையின் இல்ல மெய்வன் மைப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் நிதி சம் பாதிக்கலாம், விநோத காட்சி களைப் பார்க்கலாம். ஆனால் எமது தாயகப் பூமியில் ஒற்றுமை யையும், பண்பாட்டையும், அன் பையும் இங்கு பகிர லாம்.

மாணவர்களின் கல்வி - விளை யாட்டு ஊடாக சிறந்த கல்வியைப் பெற்று, இங்கு சேவையாற்றுபவர் களை நான் பெருமளவில் மதிக்கி றேன், நேசிக்கிறேன்.

இன்று சண்டிலிப்பாய் கோட்டத் தில் எடுத்துக்காட்டான ஒரு பாட சாலையாக நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை விளங்குகின்றது.

மாணவர்கள் கல்வி, விளை யாட்டு, கலை, கலாசாரம் மற்றும் பிற நிகழ்வுகளில் சாதனை படைக் கின்றனர்.

அதிபர் திருமதி அம்பிகை சிவ ஞானம் அவர்களின் முயற்சியால் புதிதாக முன்பள்ளி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாகப் பதவியேற்றிருக்கும் சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இந் தப் பாடசாலையின் மகத்துவத் தைப் பேணிக்காக்க வேண்டும்.

சமூக மட்டத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பாடசாலைக்கு கல்வி, விளை யாட்டு, உட்கட்டுமானம், கல்வி உப கரணங்கள் என்பன வழங்க உதவ வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## 30 வருட படிப்பினைகளால் ஆனது ஏதொன்றுமில்லை

சிங்கள இனவாதம் மீண்டும் ஒரு முறை தனது கோர நாக்குகளை வெளிக்காட்டியுள்ளது. பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய தமிழ் அதிகாரிகள் இனவாதம் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

தகுதி, கல்வியறிவு, அனுபவம் அனைத்தும் இருந்த போதும் மிக மூத்த அதிகாரிகளான 4 தமிழர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இவர்களிலும் பார்க்க அனுபவ அறிவற்ற, கல்வி நிலையில் குறைந்த சிங்கள அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் முன்னிலையில் இருந்த அதிகாரிகளும்கூட புறக்கணிக்கப்பட்டு பட்டியலில் கடைசியில் இருந்த அதிகாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்குப் பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நேரடி உத்தரவு காரணமாகவே இந்தப் புறக்கணிப்பு இடம் பெற்றது என்று பொலிஸ் திணைக்களத் தகவல்கள் திட்டவட்டமாகக் கூறுகின்றன.

பதவி உயர்வு புறக்கணிக்கப்பட்ட இந்த மூத்த அதிகாரிகள் நால்வரும் சிரேஷ்ட பொலிஸ் அதியட்சகர்களில் ஒரே அணியைச் சார்ந்தவர்கள். இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் பதவியில் இருந்து ஓய்வு பெறப்போகிறவர்கள். இவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டால், அடுத்து வரும் 10 வருடங்களுக்கு பொலிஸ் உயர் பதவிகளுக்குப் போட்டியிட எந்தவொரு தமிழ் அதிகாரியும் கிடையாது.

அண்மையில் 'சப் இன்ஸ்பெக்டர்'களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இளநிலை அதிகாரிகள் உயர் பதவிகளை எட்டிப்பிடிக்க நீண்ட காலம் ஆகும். அதுவரைக்கும் சிங்களப் பொலிஸ் உயர் அதிகாரிகள் மட்டுமே பதவிகளில் இருப்பார்கள்.

அதிகாரப் பகிர்வின்போது வடக்கு – கிழக்கு இணைந்த மாகாணத்துக்குப் பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகையில் பொலிஸ் உயர் பதவிகளில் தமிழர்கள் எவரும் இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை அரசு எடுத்ததற்கான பின்னணிகள் குறித்து கவனமாக நுணுகி ஆராயப்பட வேண்டிய விடயம்.

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பொலிஸாரை நியமித்து சட்டம் ஒழுங்குப் பாதுகாப்பை அவர்களிடம் கையளிப்பதன் மூலம் வடக்கு – கிழக்கில் படையினர் தலையீட்டைக் குறைக்க முடியும் என்றும் அதன் மூலம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆனால், தமிழ் உயர் பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகளைத் திட்டமிட்டுப் புறக்கணித்ததன் மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பதை அரசு வெளிப்படுத்தியுள்ளது. இருப்பினும் இதற்கு நேர் எதிர்மறையாக ஜெனிவாவில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு செயற்படுத்த ஆரம்பித்து விட்டதாக நேற்றுமுன்தினம் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அறிவித்திருக்கிறார்.

30 வருட காலப் போரால் இலங்கை என்ற நாடு அனுபவித்த துன்பங்கள், துயரங்களில் இருந்து கொழும்பு அரசுகள் இதுவரைக்கும் எந்தப் படிப்பினைகளையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே பொலிஸ் அதிகாரிகள் விடயத்தில் அது வெளிக்காட்டிய இனவாதம் வெளிப்படுத்துகிறது.

# ஆதிக் கனியும் மீதித் தமிழர்களும்

■ செந்தூரி

உலகியலில், மனிதப் பேரினத்தின் முக்கியமான மாற்றங்களுக்கு ஒரு ''பழம்'' தான் காரணமாக இருந்திருக்கின்றது. தன்னுடைய இருப்பினை அடுத்த தலைமுறையை நோக்கி நகர்வதற்குத் தேவையான பரிணாமங்களை மனிதனுக்குள் ஆழப் பதித்ததில் '' அப்பிள் கனிக்கு'' முக்கியமான மூன்று காலங்களுக்கான பெருமை உண்டு. முதலாவது அப்பிள்- ஆதாம், ஏவாளை அசையும் தசைக் கூறுகளாகப் படைத்த ஆதி முதல்வனால், கட்டுப்படுத்த முடியாத மனித விதியைத் தீர்மானித்தது.

இரண்டாவது அப்பிள் - பாடசாலைக் கல்வியை வெறுத்து தோட்டத்தில் தூங்கிப் போன இளைஞனின் தலையில் வீழ்ந்து, '' புவியீர்ப்பு விசையென்ற'' சடத்துவ ஈர்ப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு காரணமானது. நியூட்டனின் இந்த ஒற்றைத் தத்துவம் தான் எத்தனையோ பிற்காலக் கண்டுபிடிப்புகளுக்கு '' பிள்ளையார் சுழி'' போட்ட பெருமைக்குரியது.

மூன்றாவது அப்பிள் - '' குறுகத் தறிக்கப்பட்ட, தொடர்பாடல் உலகத்தின் ஆகப் பிற்பகுதியில், கையடக்க கணினிசார் சாதனங்களை உருவாக்குவதில் வெற்றிகண்ட '' ஸ்ரீவ் ஜோப்ஸ் '' இன் நிறுவனத்துக்குரியது. ''ஒற்றைக்'' கடியும், ஒற்றை '' இலையும் தாங்கிய இந்த அப்பிள்'' அடையாளத்துக்குரிய சாதனங்களின் அமோக விற்பனை, அவற்றின் தரத்துக்கும் , நீடித்த தொழில் நுட்பத்துக்கும் கிடைத்த பரிசு. உழைப்பை மட்டுமே மூளை முழுவதும் பொதியாக்கிச் சுமந்த அந்த மனிதனை, '' புற்றுநோய் '' தின்ற பின்னர் தான் '' மைக்ரோ சொப்ட்டும்'' பில் கேட்ஸும் கூட ஆசுவாசிக்க முடிந்த '' அப்பிள் '' அது.

மிகப்பெரிய கால இடைவெளிகளைத் தமக்கிடையே கொண்ட இம்மூன்று ஆதிக் கனிகளும் வெளிப்படுத்திய பண்புகளான '' எதிர்ப்பாற்கவர்ச்சி, '' புத்தாக்கக் கல்வி, '' இணைக்கும் சாதனங்கள் '' என்பன இன்றைய தமிழினம் சமூகத்தின் கையில் படும்பாடு என்னவென்பதே இனிவருங் கதை. ஆழ்ந்து நோக்க முணர்ந்து பயன்கொள்வதாயின் அசுரப் புரட்சிக்கு வழிவகுக்கும் மேற்கூறிய மூன்று விடயங்களும், '' வெற்று விழலாக '' எம்மவர்களினால் இன்றைக்கு சீரழிவுக்கான சந்தனக் கொள்ளிகளாக மட்டுமே பயன்படுத்தப்படுவது தான் விசும்பிலும் உயர்ந்த வேதனை.

உலகப் பொதுவேதமென மதிக்கப்படும் '' வள்ளுவனின் வாய்மொழியிலும் காமத்துக்கு இடமிருந்திருக்கின்றது. வாழ்வின் மூன்றிலொரு பங்கினை இன்பவியலுக்கு ஒதுக்கும் பண்பாடு பழந்தமிழருக்குரியது.

இலக்கியத் திணைகளிலும் அகத்திணையைக் காதலும், காதல் சார்ந்த மென்னுணர்ச்சிகளுக்குமாக, சரிபாதியாக ஒதுக்கிப் போற்றியவன் தமிழன். வாத்சாயனரின் இன்ப நுகர்ச்சிக்கான எல்லையில்லாத வழிகளை மொழிபெயர்த்து, உடலியலின் இணைப்புச் சூத்திரங்களை, நாசூக்காக கையாளத் தெரிந்து கொண்டவனும் இவனே. அணுவுலைகளைப் போல, அடக்கியாள்வதாயின் அதீத சக்தியும், அதிசயமும் விளைவிக்கும் இந்த '' விஷயம் '', எம்மையே அடக்குமளவுக்கு அத்துமீறும் போது, ஆபத்தான விளைவுகளையும், அநியாய முடிவுகளையும் தான் தீர்ப்பெழுதிப் போகும். '' பாலியற் கல்வி முறைகளைப் பாடசாலை மட்டத்தில் இருந்தே அறிமுகப்படுத்துவதால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களைச் சமூகத்தின் ஒரு பகுதியினர் விவாதித்துச் சரியான முடிவுக்கு வர முன்னரே '' வெள்ளம் தலைக்கு மேல்'' வேகங் கொள்ளும் போல்தெரிகின்றது.

யௌவனப் பருவங்களின் முன்னாரம்பத்தில், அரும்பும் வெறும் '' பாலினக் கவர்ச்சியை '' காதல் எனும் புனை சூடிக் களிக்கும் சக்கர வியூகத்தினுள் குதிக்கும் துணிச்சலை வெகு இலகுவாக கற்றுக் கொள்கின்றனர் இன்றைக்குரிய இளவல்கள். ''குடும்ப கௌரவம்'' '' திருமணத்துக்கான சவால்கள்'', '' சமூக, சமய, வேற்றுமைகள் '', பணப் பெறுமதியால் அளவிடப்படும் அந்தஸ்து '' போன்றவைகளைத் தூசுக்கு நிகரெனவே மதிக்கும் வேக முடிவுகள், நிதானிக்கும்போது, சம வீரியத்தைக் கொண்டிராமல் பலமிழப்பதால் இருபதுக்கும், நாற்பதுக்கும்மிடைப்பட்டவர்களின் குடும்ப வாழ்க்கை அச்சாணியிழந்து போகின்றது. எத்தனையோ நாவுகளால் உச்சரித்துக் களைத்துப் போன '' பதின்ம வயதுத் திருமணங்கள்'' [illegible] ங்கள்'' [illegible] துன்புறுத்தல் கள்'', '' முறையற்ற குடும்ப உறவுகளின் பாலான வன்முறைகள்'' போன்ற கொஞ்சமேனும் தணிவதற்கான அறிகுறிகள் கூட இன்னமுமில்லை.

'' பேஸ்புக் நண்பனொருவனின் முடிந்த வாரத்துக்கான பதிவொன்று இப்படியாக இருந்தது. '' யாழ்ப்பாணத்தின் நெடுங்கோட்டுக்குரிய துருவங்களான '' புங்குடுதீவின் '' மேல் '' வல்வெட்டித்துறைக்கான'' காதல், காடுகளையும், கடும் காலங்களையும் போர் இரவுகளையும் தாண்டி, தமிழ்த் தேசியத்தை வளர்த்த தூண்! ஆதலினால், காதல் செய்வீர் ! அவன் வழியில் !!!......

புத்தாக்கக் கல்வியின் மேல் எம்மவருக்கான '' மோகக் குறைவு '' வழக்கம் போல இன்னமும் தொடர்கின்றது. "இந்திய முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. கலாம் அவர்கள், '' இவ்வளவு திறமைசாலிகளான மாணவர்கள் இன்னமும், கண்டுபிடிப்பாளர்களாக மாறாமல் இருப்பது ஆச்சரியமளிக்கின்றது '' என யாழ்ப்பாண இளைஞர்களை நோக்கி நீட்டிய விரலுக்கு, எம்மிடம் போதுமான பதில் இல்லை என்பது உண்மை தானே?

'' செய்தனவே திரும்பவும் செய்யும்'', பாடசாலைக் கண்காட்சிகளும், பல்கலைக்கழக ''மாபெரும் '' கண்காட்சிகளும், வடபுல மாணவர்களைப் புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கித் தூண்டும் செயலை, '' ஏதோ தீட்டாகவே பார்ப்பது'' இன்னும் எத்தனை காலம் தான் தொடருமோ? ஏட்டுக் கல்விக்கும், '' நோட்ஸ்'' சேகரிப்புக்கும் மட்டும் அதீத முக்கியத்துவம் தரும் கற்கைத் துறைகளை மட்டுமே முனைப்பாகக் கொண்டுள்ள உயர் கல்வித் தெரிவுகள், செயன் முறை ரீதியான பயன்பாட்டினைக் கொண்ட துறைகளை அறி முகப்படுத்துவதேயில்லை. இன்றேல் பத்துக் கணினிகளை வாங்கிப் போட்டுக் கொண்டு, கொம்பியூட்டர் சென்ரர்'' தொடங்கும் வலிமையுள்ள எவராலும், இன்னமும் கற்பித்து முடியாத ''M.S.Office'' உம் '' Accounting Package'' உம் குறுகிய கால கல்லாக் கட்டும் வித்தையாக மட்டுமே தொடர்ந்து கொண் டிருக்கின்றது, ஒவ்வொரு சாதாரணதர அல்லது உயர்தர கல்விப் பொதுத் தராதர பரீட்சைகளின் முடிவுக் காலங்களின் பின்பும்.

பாரதிராஜாவின் 'அன்னக்கிளி' காலத்துக்கு மீண்டு கொண்டிருக்கும், கமெரா, திரைக்கதை, இயக்குநர், இளைஞர்களைக் கூட புத்தாக்கப் பட்டியலில் சேர்க்க முடியுமா என்பதும் சந்தேகமே? நான்கே தமிழ் வார்த்தைகளைக் கொண்ட '' கொலைவெறிப் பாடலை, நம் மொழிக்குரிய பாடல் என்று குற்றஞ்சாட்டி விவாதிப்பவர்களில், எத்தனை பேர் தனுஷ், ரஜனி குடும்பத்தினர் தமிழர்களல்ல, கன்னடர்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத் தயார்? தமிழனின் கலைப் பெருமை என்ற பேசுபொருளில் கூட முற்போக்கு சிந்தனையையும் புதுமை விருப்பத்தையும், செலுத்த முனையாத இளைஞர்களை, தென்னந்தோப்புகளில் மரஞ்சுற்றிப் பாடுவதனையும், கசூரினா மணலில் கால் புதைய கலைத்துப் பிடித்து விளையாடுவதையும், சங்குப்பிட்டிப் பாலத்தில் கைகளை அகட்டி விரித்தபடி நடப்பதையும், '' ஊக்குவிக்கும் பெருஞ்செயல்களை கலைச்சேவையின் புத்தாக்கங்களுக்குள் பட்டியலிடத் தான் முடியுமா?

மாற்றானின் '' மப்புக்கு '' , ஊறுகாயாக தொட்டுக் கொள்ளப் பயன்படும் எம்மினிய இளவல்கள் விழித்துக் கொள்ளும் வரை இது தொடரும்!

தொலைத் தொடர்பாடலின் மிகை வளர்ச்சியின் வெளிப்பாடுகள் சகல தரப்பினரையும் '' சகட்டு மேனிக்கு'' பாதித்துள்ள காலம் இது. அற்புதமான பயன்பாடுகளைக் கொண்ட நல்லியல்புகளின் குவியலான இணையச் சாதனங்கள் உள்ளிட்ட தொடர்பாடல் கருவிகளை, அப்படியே பிறழ்வுக்காக பயன்படுத்திப் பெயர் பெறுவதிலும், எம்மவரை மிஞ்ச எவரும் முடியாது. நிறையக் குடும்பங்களின் நிம்மதியான உறக்கத்தை கெடுக்கும் வகையில் நடுத்தர வயதினரைக் கூட தொற்றிக் கொள்ள இவ் வகை வியாதிகளுக்கு இன்னமும் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. பேரக் குழந்தைகள் மீது பாலியல் வக்கிரகம் காட்டிய நேற்றைய நிழல் ஒன்றின் கையிலிருந்த கைப்பேசியின் நினைவக அட்டை, ஆபாசப் படங்களினால் மட்டுமே நிரப்பப்பட்டிருந்தாக விஷமேற்றுகின்றன அண்மைச் செய்திகள்.

மலிந்து விட்ட பலவோடு, ஈழத்தமிழ் உச்சரிப்புப் பேச்சோடு இணையத்தில் உலாவரும் படுக்கையறை காணொளிகள், பார்வையிடப்படும் மீடிறன் எண்ணிக்கையில் முன்னணியில் இருக்கின்றன. மானமென்கின்ற ஆக இறுதிக் கவசத்தையும் இழந்துவிட்ட எம்மினத்துக்காய் அழக்கூட நேரமில்லாதவாறு, மீட்புக்கான தேவையைத் துரிதப்படுத்த வேண்டியிருக்கின்றது. '' ஆதாம் - ஏவளினது '' அப்பிளை சுகிக்கும் தூய அன்பு மனங்களும், நியூட்டனது அப்பிளை நிஜமாக்கும் தூங்கவிடாத கனவுகளை சுமக்கும் சாதனைகளும், ஸ்ரீவ் ஜோப்ஸ்'' தந்த அப்பிளை வினைத்திறனுடன் பயனாக்கும் திறமையுமே, முற்றிய நோயுடைத்த எம் சமூகத்துக்கான முதற் கட்டச் சிகிச்சைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பல்கலைக்கழகங்கள் ஏன்?

கலாநிதி செ.அறிவழகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணித புள்ளிவிபரவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையில் 60 வயதைக் கடந்து விட்ட இலவசக் கல்வி தற்போது அதிர்வுகளைச் சந்தித்துள்ளது.

இலங்கையின் அனைத்துச் சிறார்களுக்கும் பாடசாலைக் கல்வியை இலவசமாக வழங்கக்கூடிய வளங்களை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. ஆனால் உயர் கல்விக்குத் தகுதி பெறுபவர்களில் ஏறக்குறைய 16 % தொடக்கம் 20% வரையான மாணவர்களுக்கு மட்டுமே உயர்கல்வியை வழங்கக்கூடிய வளங்களை அரசாங்கம் கொண்டிருக்கின்றது. 80% இற்கு மேற்பட்ட உயர் கல்விக்கான தகுதி வாய்ந்த மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

முன்னைய காலத்தில் க.பொ.த (உ/த) உடன் தொழில்களைப் பெறக்கூடியதாயிருந்தது. எதிர்காலத்தில் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் பட்டப்படிப்பின்றி தொழில் பெறுதல் கடினமாயமையலாம். எனவே உயர்கல்விக்குத் தகுதி வாய்ந்த அனைவருக்கும் உயர் கல்வி வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.

தெற்காசிய நாடுகளில் இலங்கை தனிநபர் வருமானம், எழுத்தறிவு வீதம் என்பவற்றில் உயர்நிலையில் உள்ள போதிலும், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றோரின், வீதத்தில் பின்தங்கிக் காணப்படுகின்றது.

இலங்கையில் ஆயிரம் பேருக்கு ஒருவரே பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களாகியுள்ளனர். கல்வி என்பது விற்பனைக்குரிய பண்டமல்ல. அது மக்களின் அடிப்படை உரிமை. அதனை இலவசமாக வழங்க வேண்டியது அரசின் கடமை என்பதற்கப்பால் இலவசக் கல்வியானது நூறு வீதம் இலவசமாக உள்ளதா? பாடசாலைக் கல்வியை இலவசமாக வழங்கக்கூடிய வளத்தினை இலங்கை அரசு கொண்டிருந்த போதும் ஏற்கனவே இலங்கையில் சர்வதேசப் பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் உள்ளன. அதுமட்டுமன்றி எந்தவொரு இலங்கைப் பல்கலைக்கழகமும் பட்டப் பின்படிப்பினை இலவசமாக வழங்கவில்லை. ஏற்கனவே முதலீட்டு சபையின் (Board of investment) கீழ் பதியப்பட்ட பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் பல நாட்டில் செயற்படுகின்றன.

தகுதியற்ற வசதி படைத்தவர்கள் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவே தனியார் பல்கலைக்கழகங்கள் அறிமுகப்படுத்தப்படப் போகின்றன என்பது சிலரது வாதம். ஏற்கனவே ஆண்டுதோறும் மிகவும் வசதிபடைத்த 10,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டங்களைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு சென்ற வண்ணம் உள்ளனர். எனவே தகுதிபெற்றும் பண வசதி இல்லாத நடுத்தர வர்க்கத்தினர் தனியார் பல்கலைக்கழகங்களால் பயன் பெறலாம். மேலும் அரசாங்கம் கூறுவது போல தனியார் பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவதால் அந்நியச் செலாவணியையும் மீதப்படுத்தலாம்.

உலகிலேயே மிகச்சிறந்த பல்கலைக்கழக கல்வி முறையைக் கொண்ட நாடாக அமெரிக்கா திகழ்கின்றது. அந்நாட்டில் 3 வகையான பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவையாவன,

1) அரச பல்கலைக்கழகங்கள்
2) இலாப நோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்கள்.
3) இலாப நோக்குள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் என்பனவாகும்.

அமெரிக்காவில் உள்ள 2000 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் 60% இற்கு மேற்பட்டவை இலாப நோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்கள் ஆகும்.

உலக பல்கலைக்கழக தர வரிசைப் பட்டியலில் முன்னணியில் இருக்கும்Harward, M.I.T, Stanford மற்றும் பிரபல்யமான Ivy League பல்கலைக்கழகங்கள் போன்றவை இலாபநோக்கற்ற மற்ற தனியார் பல்கலைக்கழகங்களே. இவ்வகையான பல்கலைக்கழகங்களில் ஈட்டப்படும் இலாபமானது பங்குதாரர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அவ்வாறு ஈட்டப்படும் இலாபம் புலமைப்பரிசில்களாகவோ, வேறு வழியிலோ அந்தப் பல்கலைக்கழகத்திலேயே மீள மூலதனம் இடப்படும்.

இந்தப் பல்கலைக்கழகங்கள் Charity மற்றும் Endowments எனப்படும் நன்கொடை மற்றும் உதவி நிதியங்களினாலேயே ஸ்தாபிக்கப்பட்டவை.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அறிமுகப்படுத்தப்படுமாயின் அமெரிக்காவில் உள்ளதுபோல் இலாப நோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்கள் விரும்பத்தக்கன. ஆனாலும் அவ்வாறான பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அளவு நன்கொடை மற்றும் உதவி நிதியங்கள் இல்லாதவிடத்து மூலதனம் தனியரிடம் இருந்தே பெறப்படவேண்டும். மூலதனம் இடும் தனி நபர் இலாபத்தையும் எதிர் பார்ப்பார். ஆனாலும் கல்வி விற்பனைக்குரியதொரு பண்டமல்ல. எனவே தனியார் பல்கலைக்கழகத்தினை ஸ்தாபிப்பவர்கொள்ளை இலாபமீட்டுவதைத் தடுக்கும் வகையில் இலாப உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படவேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புக்கு அதிகமாக பெறப்படும் இலாபம் அந்தப் பல்கலைக்கழகத்தினுள் புலமைப் பரிசிலாகவோ வேறு வழியிலோ மீள மூலதனமிடப்படுதல் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

தற்போது கட்டுப்பாடின்றி மூலதனச் சபையில் பதிந்து இயங்கும் பட்டம் வழங்கும் நிறுவனங்கள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் உயர்கல்வி அமைச்சினுள் உள்வாங்கப்பட வேண்டும்.

மேற்படி இந்த நிறுவனங்களுக்காக ஒரு தரமான தரக்கட்டுப்பாட்டுத் திட்டம் (Quality Assurance and Accreditation system) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இலங்கையில் அமையப்போகும் தனியார் பல்கலைக்கழகங்கள் இலாபமீட்டுவதையோ வசதி படைத்தோருக்கு பட்டங்களை விற்பதையோ நோக்கமாக கொண்டவையாக அமையாது. உயர் கல்வி வாய்ப்பை இழந்து நிற்கும் தகுதி படைத்த 80% இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு உண்மையிலேயே சேவை வழங்குவதையே நோக்காக கொண்டு அமைதல்வேண்டும்.

மேலும் தகுதியுடைய ஒரு மாணவனிடம் பண வசதி இல்லை என்பதால் அவனுக்கான உயர் கல்வி வாய்ப்பு மறுக்கப்படலாகாது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆண்டுதோறும் உயர்தரப் பரீட்சை முடிவுகளினடிப்படையில் அரச பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு துறைக்குமான வெட்டுப் புள்ளிகளை அறிவிக்கின்றது. தனியார் பல்கலைக்கழகங்கள் ஸதாபிக்கப்படதன் பின்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வருடம் தோறும் உயர்தரப் பரீட்சை முடிவுகளினடிப்படையில் தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் ஒவ்வொரு துறைக்குமான வெட்டுப் புள்ளிகளை அறிவித்தல் வேண்டும்.

உதாரணமாக அரச பல்கலைக்கழகத்தில் ( ஒரு குறிப்பிட்ட மாவட்டத்துக்கு) மருத்துவத் துறைக்கான வெட்டுப்புள்ளி நியமப்புள்ளி அடிப்படையில் 2.5 ஆக இருக்குமாயின் தனியார் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறைக்கான வெட்டுப் புள்ளி 2.5 இலும் சற்றுக் குறைவாக 2.2 ஆக அமையலாம் குறிப்பிட்ட துறைக்கான மானிய ஆணைககுழுவால் அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளியிலும் அதிக நியமப்புள்ளி உள்ள மாணவர் மாத்திரமே தனியார் பல்கலைக்கழகத்தில் அத்துறைக்கு அனுமதிக் கப்பட முடியும்.

தனியார் பல்கலைக்கழகங்களில் 20% இடங்கள் புலமைப்பரிசில்களாக இலவசமாக உள்நாட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் என அரசு கூறுகின்றது. தனியார் பல்கலைக்கழகங்களில் 60% மான இடங்கள் உள்நாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்படல் வேண்டும் மிகுதி 40 %மான இடங்களை மூன்று மடங்கு அதிகமான கட்டணங்களுடன் தனிய்ார் பல்கலைக்கழகங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்க முடியும்.

உள்நாட்டு மாணவர்களில் 20%மானவர்கள் புலமைப்பரிசிலுடன் இலவசமாகக் கற்கும் அதே சமயத்தில் மிகுதி 40% மாணவர்களுக்கு தனியார் பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான குறைந்த வட்டிக் கடன்களை அரசு வழங்கவேண்டும். அவ்வாறு அரச கடனில் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களுக்கான கட்டணங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினூடாக தனியார் பல்கலைக் கழகங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அரச கடனில் படிக்கும் மாணவர்கள் தொழில் பெற்றதும் கடனைப் பகுதி பகுதியாக திருப்பிச் செலுத்தும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

(21ஆம் பக்கம் பார்க்க...)

# கசிப்பு

## இயமனாகும் பானம்

“ இந்த உற் பத்தியினால் எத்தனையோ பேரின் உயிர்கள் பறிக்கப்பட்டும். பல குடும்பங்கள் சீரழிந்துமுள்ளன. இது கட்டாயமாக புறக்கணிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இராஜ்தனபால்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேறிய மக்கள் மத்தியில் கசிப்பு உற்பத்தி ஒரு தொழிலாக இருந்து வருகின்றது. பலர் கசிப்பினை காடுகளிலும், வீடுகளிலும், உற்பத்தி செய்து வருகின்றனர். விடுதலைப் புலிகள் காலத்தில் இந்த உற்பத்தியானது முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது. ஆனால் மீள்குடியேறிய பின்பு இந்தத் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் ஆரம்பித்தவேளை பொலிஸாரின் திடீர்முற்றுகையினால், அனேக மானோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர்.

எச்சரிக்கை செய்து விடுதலை செய்தபோதிலும் அதனை அவர்கள் விட்டபாடில்லை. இதன் பின்பு காடுகளில் அந்த செயற்பாடுகளை மாற்று வழியில் தொடர்ந்தனர்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளால் சற்று குறைவடைந்துள்ள போதிலும் மேலும் சில இடங்களில் உற்பத்தி நடை பெற்றுவருகிறது. இந்த உற்பத்தியினால் எத்தனையோ பேரின் உயிர்கள் பறிக்கப்பட்டும், பல குடும்பங்கள் சீரழிந்துமுள்ளன. இது கட்டாயமாக புறக்கணிக்கப்படவேண்டியதொன்றாகும் . ஆபத்தான இந்த உற்பத்தியினால் எமது மக்களின் பெறுமதியான வாழ்க்கை அர்த்த மற்றுப் போகின்றது. இதனால் சமுதாயம், குடும்ப சூழல் என்பன மோசமாக பாதிப்படைகின்றன. இந்த உண்மை நமக்குப் புரிவதில்லை. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பாதிப்புக்களை ஏற்படுத்திய கொடிய யுத்தத்தை விட இது மிகவும் பயங்கரமானது.

போர் மனித உயிர்களை மதிக்காத, அமைதியுடன் கூடிய கூட்டு வாழ்வை புறக் கணிக்கும் ஒரு சமூகச் சூழலையே உருவாக்கும். அதே போன்றது தான் இந்தக் கசிப்பு உற்பத்தியும். பல குடும்பங்களினதும் சிறுவர்களினதும் வாழ்க்கையை சீரழித்துள்ளது. நாட்டின் எதிர்காலத்தில் சிறப்புடன் பங்குபற்ற வேண்டிய இளைஞர்கள் இந்த வகையான உற்பத்திகளாலும் போதைப் பொருள்களாலும் பழிவாங்கப்பட்டுள்ளனர்.

தமது அன்றாட கடின உழைப்பினால் பெறும் சிறு ஊதியத்தில் தங்கிவாழும் இளைஞர்கள் போதைவஸ்துக்கும் புகைப்பிடித்தலுக்கும் வீணான செலவுகளை செய்வதோடு, வாழ்க்கையை சீரழித்துக் கொள்கிறார்கள். இதற்கு அடிமைப்படும் ஒவ்வொரு குடும்பமும் சீரழிந்து செல்கின்ற வரலாற்றைத் தான் நாம் வாசிக்க முடியும்.

மதுவுக்கு அடிமையாகும் குடும்பங்கள் வறுமை, சண்டை சச்சரவு, பிள்ளைகளின் கல்வி பாதிப்பு, குடும்பப்பிரிவு , உயிரிழப்பு என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன .

புகைப்பிடித்தல், போதைப் பொருள், மது போன்றன மனித வாழ்க்கையை இருட்டுக்குள் இழுத்துச் செல்வதைத் தவிர வேறொன்றையும் செய்வதில்லை. எத்தனையோ யுவதிகள் வயது வந்தும் திருமணம் செய்யாத நிலையில் குடும்பச் சீரழிவால் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கல்விகற்க வேண்டிய மாணவர்கள் வறுமை காரணமாக தமது கல்வியை மறந்து குடும்பச் சுமையை தாங்குகிறார்கள். அவர்கள் விரக்தி நிலையில் ஏனையவரோடு சேர்ந்து மதுவுக்கு அடிமையாவதும்உண்டு. பாடசாலையை விட்டு விலகும் மாணவர்கள் கூட இதற்கு அடிமையாகின்றனர். கிடைக்கப்பெறாத மனிதப் பிறவியை அர்த்தமுள்ளதாக்க இத்தீய பழக்கங்களை கைவிடவேண்டும். அரிது அரிது மானிடராதல் அரிது என்ற ஔவையின் கூற்றுக்கமைய எமது மனித வாழ்க்கையில் நல்லவற்றையும் நற்சிந்தனையையும், நல்ல நோக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

நாம் சிறப்புடன் வாழும் போதே எமது குடும்பத்தில் மனைவி, மக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். எமது செல்வங்கள் கல்விச் செயற்பாடுகளில் சிறந்து விளங்குவர். அவர்களை நற்பிரசைகளாகவும், நன்மதிப்புள்ளவர்களாகவும் மாற்ற நல்ல தொழில் மூலம் முன்னேறவேண்டும்.

மனித அழிவுக்கு வழி வகுக்கும் இவ்வாறான இழி தொழில்கள் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பத்தைச் சீரழித்து விடும். கசிப்பு பாவனையால் எத்தனையோ பேர் ஈரலே இல்லாத நிலையில் நோய்வாய்ப்பட்டு, தமது குடும்பத்தைச் சீரழிய விட்டு இறந்துள்ளனர். நாம் ஒன்றைச் செய்தால் அது மக்களுக்கு பயன்பாடாகவும் நாலு பேர் மத்தியில் நன்மதிப்பைப் பெறும் வகையிலும் அமைய வேண்டும். அதனைப் பார்த்து மேலும்பலநன்மைகளைப் பெறவும் நாம் செயற்பட வேண்டும். இழிவான தொழில் களை மேற்கொண்டு வளமாகவாழ்ந்தவர்கள் வரலாறு இல்லை. மனைவி, மக்கள் உழைப்பினையும் அவர்களது நகைகளையும் அல்லதுஇன்னோரன்ன பிறவாற்றல்கொண்டு போதைப் பொருள்களை உற்பத்தி செய்வதை விட்டு விட வேண்டும். பொலிஸில் பிடிபட்டு மானம் கெட்டு, மரியாதைகெட்டு, கடன் பட்டு, தண்டம்கட்டி தண்டனை பெறுவதைவிட நேர்வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னதான் நடக்கும்... நடக்கட்டுமே!

ஒருவர் தன் வேலையில் எவ்வளவு திறமைசாலியாக இருந்து என்ன பயன்; அலுவலகத்தில் தன்னோடு வேலை பார்க்கும் சக ஊழியர்களோடு, சதா காலமும் சண்டையிடுபவர்கள், மேலதிகாரிகளோடு முரண்டு பிடிப்பவர்கள், தம் கீழே பணிபுரிபவர்களை மனமுடையவைத்து, வேலை பார்க்கும் ஆர்வமே அற்றவர்களாக ஆக்கி விடுபவர்கள்... இவர்கள் எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்கள். இவர்கள் எத்தனை பெரிய திறமைசாலிகள் என்றாலும், அவர்கள் தங்கள் அலுவலகத்திற்குத் தேவை இல்லை என்று முடிவு செய்து வெளியே வீசிவிட்டது இன்றைய மேலாண்மை இயல். தங்கள் கோபமோ, மகிழ்ச்சியோ, வருத்தமோ எதுவானாலும் அதனை அடக்கி வாசிப்பவர்களை, நிதானம் தவறாதவர்களை நிர்வாகத்தின் பெரும் சொத்து என்கிறார்கள் மேலைநாட்டு மேலாண்மை இயல் மேதைகள்.

ஜென் குருமார்கள் இதற்கு உதாரணம் சொல்லுவதுண்டு. படகில் நாம் போகும் போது, ஆற்றில் மிதந்து வரும் வெற்றுப்படகு ஒன்று நம் படகின் மீது மோதி நாம் கவிழ நேர்ந்தால் நாம் வெற்றுப்படகை நோக்கி வருத்தமோ, கோபமோ அடையமுடியுமா? அது போலவே படகில் ஒரு மனிதன் அமர்ந்து கொண்டுவந்து நம் மீது மோதினாலும் அவனைக் கோபிப்பதில் அர்த்தம் இல்லை. அவன் இருந்தாலும் ஒன்றுதான்... இல்லாவிட்டாலும் ஒன்றுதான்...காரணம் அவனே ஒரு வெற்றுப் படகு... என்கிறது ஜென். வாழ்வில் நம்மைத் தாக்கும் மோதல்களை, வெற்றுப் படகுகளின் மோதல்களாக எடுத்துக் கொள்ளும்படி ஜென் குருமார்கள் போதிக்கிறார்கள். காலிப்படகு என்ற வார்த்தையை மூளையற்ற மனிதர்கள் என்ற அர்த்தத்தில் கையாளுகிறது ஜென்.

இதிகாச காலத்திலேயே இத்தகைய உணர்ச்சி, நிர்வாக வலிமை இராமனிடம் இருந்தது என்கிறார் கம்பர். ஆட்சி உனக்கு என்று அப்பா சொன்னபோதும் ஆட்டம் பாட்டம் இல்லை. ஆட்சி பரதனுக்கு...உனக்கு இல்லை என்று சிற்றன்னை சொன்னபோதும் அழுகையில்லை, துன்பம் இல்லை, துடிப்புமில்லை, வெடிப்புமில்லை. தன் உணர்ச்சிகளின் மீது இராமனுக்குள்ள ஆளுமையை ''சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை முகம்'' என்று படம் பிடித்தார் கம்பர்.

சித்திரத்தில் வரைந்த தாமரை எப்படி எப்போதும் ஒரே மாதிரியாகச் சிரித்தது, சிரித்தபடியாக இருக்குமோ, அப்படி இருந்தது இராமர் முகம் என்கிறார். இன்று குடும்பங்களில், நிறுவனங்களில், அலுவலகங்களில் இந்த உணர்ச்சி நிர்வாகம் அற்ற மனிதர்கள்தான் பெரும் பிரச்சினையை ஏற்படுத்துகிறார்கள். உணர்ச்சி நிர்வாகம் அற்ற மனிதர்கள், உடனுக்குடன் ஒரு நரகத்தைத் தாங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் உண்டாக்கி விடுகிறார்கள்.

காதலை, காமத்தை, கோபத்தை, தமது ஏமாற்றத்தை, தமக்கிழைக் கப்பட்ட அநீதியை, மகிழ்ச்சியை, மதிப்பை எப்படிக் கையாளுவது என்பது மிகப்பெரும் கலை. மிகப் பெரிய பதவி வகித்த ஒரு மனிதர் ஒரு விருந்தின் போது குறுகுறுப்பில் ஒரு பெண் அதிகாரியின் பின்புறத்தைத் தம் கையால் தட்டிவிட்டார். அது மிகப்பெரிய பிரச்சினையை விலைக்கு வாங்கியது... சிலருக்கு நினைவிருக்கலாம்; என்ன செய்கிறோம் என்று தெரியாத எரிச்சலில் எதிரியின் காதையே கடித்துத் துப்பிய மைக்டைசனை இந்த உலகத்தால் மறக்கவே முடியாது. தன்னை, தன் வளர்ச்சியை வேண்டும் என்றே நசுக்குகிறார்கள் என்ற அடக்க முடியாத எரிச்சலில்... மூத்த அரசியல் தலைவர்களைக் கடுமையாக அவமதித்துவிட்டுபின் தன் வாழ்நாள் முழுவதும் வளர முடியாமல் போய் ஒவ்வொரு கணமும் போராடும் இளம் அரசியல் தலைவர்கள் எத்தனை எத்தனை... அந்தக் கணம்... அந்த ஒரே ஒரு கணம்... எப்படியாவது கடந்து போய் விட்டிருந்தால், தன் உணர்ச்சியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தால்... பின்னர் வருத்தப்பட வேண்டிய அவசியமே வாழ்நாள் முழுவதும் வந்திருக்காது. தற்கொலைகள் கூட ஒரு கணம் தள்ளிப் போயிருந்தால் நடந்திராது. சில கொலைகள் கூட அப்படித்தான்.

சிலபேரை நேருக்கு நேர் பார்த்ததும் ''நாக்கைப் பிடித்துக் கொள்கிற மாதிரி சுருக்கென்று ஒரு வார்த்தை இந்த மனிதரைக் கேட்டுவிட வேண்டும்'' என்று மனம்குறுகுறுக்கும். புயல் மையம் கொண்டு சூறாவளிக் காற்று சுற்றிச் சுற்றி அடிக்கும்போது தரையில் புரண்டு விழும் கடல் அலை போல் வார்த்தைகள் பல்லுக்கும் நாவுக்கும் இடையில் புகுந்து காயத் தயாராகி விடும். வாயிலிருந்து வார்த்தை நழுவும்... ஆனால் அந்தக் கணமே அதை வாய்க்குள் திரும்பத் தள்ளி அந்த வார்த்தையைச் சொல்லாமல் விடுகிறார்களே சில மனிதர்கள்... அடேயப்பா...அவர்கள் ஆயிரம் முனிவர்களுக்குச் சமம்...சொல்லிக் காட்ட, குத்திக் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் அதைப் பயன்படுத்தாமல் ஒதுக்கிவிட்டுப் போகிறார்களே...அவர்கள் உண்மையில் மனிதர்களே அல்ல, மானுட தெய்வங்கள்...

பாராட்டுக் கூட அப்படித்தான்...மிகையாக, அளவுக்கு அதிகமான உணர்ச்சியோடு சிலர் பாராட்டுவார்கள். இது நல்லதல்ல.

பாராட்டும் போதும், ஒருவரை வசைபாடும் போதும் சரி, சொற்களைக் கவனமாகக் கையாள வேண்டும். சிலர் தடித்த, துக்கம் பிடித்த, அழுகிய ஆயுதம் தாங்கிச் சொற்களைப் பயன்படுத்தி இடியப்ப சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறார்கள். அரசியலை எடுத்துக்கொண்டால் இப்போதுள்ள சூழ்நிலையில், எந்தக் கட்சியும் எந்தக் கட்சியுடன் வேண்டுமானாலும் கூட்டணி வைத்தால்தான் நாற்காலி கிடைக்கும் என்பது அருவருப்பான உண்மை. அப்படியிருக்க சில தலைவர்கள் கோபம் வந்தபோது சில தலைவர்களைப் பற்றி வாய்க்கு வந்தபடி பேசிவிட்டு, பிறகு தயவு தேவைப் படும் போது நெருங்க முடியாமல் அவஸ்தைப்படுவதை அரசியல் நோக்கர்கள் அறிவார்கள். கோபத்திலும் சரி, பாராட்டிலும் சரி, ஒரு நிதானத்தைக் கையாண்டால் மறுபடி ஒட்டவோ வெட்டவோ வசதி இருக்கிறது என்று வளர நினைப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



சுகி.சிவம்

# ஏழை மாணவருக்கு அறிவாலயமாக திகழும் அனலைதீவு அ.த.க.பாடசாலை

லக்ஸ்மன்



தீவுப்பகுதியில் பெரும்பாலான பாடசாலைகள் தோன்றுவதற்கு அந்தந்தப் பகுதியில் உள்ள பெரியார்களும் சிரத்தை எடுத்திருந்தாலும் அவை அமைவதற்குப் பெரிதும் உதவிய சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியே அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம் ஸ்தாபிக்க உதவியிருந்தார். அப்போது ஒரு சிறிய ஓலைக் குடிசையாக இது ஆரம்பிக்கப்பட்டபோது இதன் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டவர் சி. மார்க்கண்டு ஆவார். தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை இருந்த இப் பாடசாலையில் சிரேஷ்ட தரம் வரை வகுப்புக்களை அதிகரிக்க வேண்டுமென அபிப்பிராயப்பட்ட அதிபர் அதனை நிறைவேற்றியும் வைத்திருந்தார்.

மாணவர்கள் தொகை கணிசமான வரை அதிகரித்து வந்ததால் ஏற்பட்ட இடநெருக்கடியைத் தவிர்க்க அக்காலத்தில் வடக்கில் பெரும்பாக வித்தியாதிகாரியாகப் பணியாற்றிய சி.உ.சோமசேகரம் எடுத்த முயற்சியின் பயனாக அரச உதவியுடன் இரண்டு வகுப்பறை மண்டபங்களையும் தலைமை ஆசிரியருக்கான விடுதியையும் ஓர் ஏக்கரில் விளையாட்டிடத்தையும் மூன்று நூற்பதின் மூன்று பேர்ச் விவசாய நிலத்தையும் பெற்று வித்தியாலயத்தின் குறைபாடுகளை நீக்க உதவினார். அவரே புதிய மண்டபங்களையும் திறந்து வைத்திருந்தார். மண்டபம் திறப்புக்கான நினைவுக் கல் பாடசாலையில் இருந்தபோதும் அது சேதமுற்றுக் காணப்படுவதால் குறிப்பிட்ட தினத்தை அறிவது சிரமமாக இருந்தது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு வெளியிடங்களில் நிதி சேகரித்து சைக்கிள்கள் பரிசாகவும் வழங்கப்பட்டு ஆசிரியருக்கு கௌரவிப்பும் இடம்பெற்றுள்ளது.

இவரைத் தொடர்ந்து அதிபராக நியமிக்கப்பட்டவர் ஆ இராமசாமி. இவரது காலத்தில் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடங்களோடு உயர் வகுப்புகளும் இயங்கி வந்ததால் இங்கு பயின்ற மாணவர்கள் சதாசிவம் மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டதை அடுத்து மீண்டும் தரம் ஐந்து வரையான பாடசாலையாக மாற்றமடைந்தது.

இங்கு குறிப்பிட்ட இருவரையும் தொடர்ந்து அதிபராக ப.கணபதி, நா.ப. இராசையா, நா.செல்லத்துரை, என். சுப்பிரமணியம், நா.விசுவலிங்கம் க. இளையதம்பி ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். 1972 ஆம் ஆண்டில் இங்கே நூற்றி இருபத்து நான்கு மாணவர்களும், மூன்று ஆசிரியர்களும் இருந்துள்ளனர். இந்தக் காலங்களில் வட்டாரக் கல்வி அதிகாரி வ.நடராசாவின் முயற்சியால் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டு முதலாம் இரண்டாம் தரம் வகுப்புக்களில் புதுமுறைக் கல்வியில் கூடுதல் நாட்டம் செலுத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குச் சிறப்பான பணியாற்றப்பட்டது.

1972 ஆம் ஆண்டு வீசிய சூறாவளி காரணமாக இங்கு கட்டப்பட்ட முதலாவது மண்டபம், அதிபர் விடுதி ஆகியவை தரை மட்டமானது. பதிலாக ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பண்டிதர் கா.பொ. இரத்தினம் பெற்றோர், ஆசிரியர் சங்கம் எடுத்த முயற்சியால் அரசு துரித கதியில் இவற்றை மீளக் கட்டி உதவியது.

அதிபர் இளையதம்பிக்குப் பின்னர் பதவியில் இருந்தவர்களின் விவரங்கள் பெற முடியாமல் உள்ளது. தற்போதைய அதிபராக திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் பதில் கடமையில் உள்ளார். அவருடன் சேர்ந்து ஆறு ஆசிரியர்கள் உள்ளனர். நூற்றுப்பத்தொன்பது மாணவர்கள் பயிலுகின்றனர். ஏனைய பாடசாலைகள் போலன்றி இங்கே பயிலும் தொண்ணூற்றி ஒன்பது வீதமான மாணவர்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் ஒரு குடும்பத்தில் இருந்து இரண்டு, மூன்று பிள்ளைகளும் வருகின்றனர்.

பெற்றோர் பெரும்பாலும் கல்வி நிலையங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாகவும் படிக்காதவர்களாகவுமே உள்ளனர். இதனால் பிள்ளைகளின் கல்வி குறித்து பெரிதளவில் அக்கறை எதுவும் பெற்றோரிடத்தில் காணமுடியாதுள்ளது. காலையில் பாடசாலைக்கு வரும் சிறுவர்கள் உணவு அருந்திவிட்டு வந்தார்கள் என்பதைக்கூட நிச்சயப்படுத்த முடியாதுள்ளதாகவும் கல்விச் செயற்பாடுகளுக்கான உபகரணங்களை வாங்க முடியாதவர்களாகவுமே பெரும்பாலும் உள்ளனர்.

பிள்ளைகளில் திறமை காணப்பட்ட போதும் பெற்றோர்களின் அக்கறையின்மை பெரிய அளவில் உள்ளது. இந்த மாணவர்களின் கல்விக்காக அதிபர், ஆசிரியர்கள் முடிந்த வரை உதவுகின்றனர். மேலதிக வகுப்புக்களை வைக்க ஆசிரியர்கள் தமது நேரத்தைச் செலவிட்டாலும் பிள்ளைகளை அதற்கு அனுப்புவதற்கு பெற்றோர் முன்வருவதில்லை. மிகமிக குறைந்த உழைப்பே கிடைப்பதால் பெற்றோர்கள் பாடசாலைக்கு எதுவும் செய்ய முடியாதவர்களாகவே உள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு வெளியிடங்களில் நிதி சேகரித்து அதன் மூலம் சைக்கிள்கள் பரிசாகவும் வழங்கப்பட்டு ஆசிரியருக்கு கௌரவிப்பும் இடம் பெற்றுள்ளது. தமிழ்த் தினம், ஆங்கிலம், சித்திரம், கோலப் போட்டிகளிலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

மின்சாரம், குடிதண்ணீர், மலசல கூட வசதிகளும் உண்டு. பாதுகாப்புக்கான சுற்றுமதில் பிள்ளைகளுக்கான கற்பித்தல், விளையாட்டு உபகரணங்கள், பாண்ட் வாத்தியக் கருவிகள், ஆசிரியர் விடுதி என்பன தேவையாகவுள்ளன. பாடசாலையின் தளங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

மழை காலத்தில் பாடசாலை வளவில் நீர் மட்டம் உயர்ந்து இருப்பதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். நீர் வெளியேறுவதற்கான மதகு சீர் செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

கல்வியிலும் விளையாட்டு மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மாணவரிடத்தில் திறமை காணப்பட்டாலும் அவர்களது குடும்ப வறுமை காரணமாகவும் அதனால் பெற்றோர்களின் ஆதரவு பிள்ளைகளிடத்தில் உரிய வகையில் அமையவில்லை. இவை எல்லாம் வருங்கால சமூகத்துக்கு பெரும் இழப்பை உண்டு பண்ணும் என்பது அனைவராலும் உணரப்பட வேண்டியது.

அனலைதீவில் பெருமளவு படித்தவர்களையும் நல்ல நிலையில் வாழ்பவர்களையும் உருவாக்கிய பாடசாலைகள் அவர்களின் கவனத்துக்கு வருதல் வேண்டும்.

இவ்வூரைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் மக்கள் கூடுதலாகவே உள்ளனர். குட்டி அனலை தீவு என்று சொல்லும் அளவுக்கு கனடாவில் அனலைதீவு மக்களைக் கொண்ட ஒரு பகுதியே உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ஆலயங்களுக்குப் பெரிய அளவில் உதவும் அவர்கள் இந்த வசதி குறைந்த பிள்ளைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதும் ஆங்காங்கே மக்களிடம் கேட்க முடிந்தது.

''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' இது ஆசிரியர்களுக்கு மட்டும் உரியதொன்றல்ல அதற்கு உதவும் அனைவருக்குமே பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் உயிரிழப்புகள் நம்பகமான மதிப்பீடு அவசியம்

## சர்வதேச பேரிடர் குழு வலியுறுத்து

கொழும்பு,பெப்.29
விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமான இறுதிக் கட்டப் போரின்போது ஏற்பட்ட பொதுமக்கள் உயிர்ச்சேதவிவரங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று சர்வதேச பேரிடர் குழு வலியுறுத்தியுள்ளது.

போர் நடைபெற்ற காலப் பகுதியில் காணாமல் போன மற்றும் உயிரிழந்தவர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட வேண்டும் என்று சர்வதேச பேரிடர் குழு குறிப்பிட்டுள்ளது.

போர் நிறைவடைந்து மூன்றாண்டுகள் முடிவடையவுள்ள நிலையிலும் சரியான புள்ளிவிவரத் தரவுகள் வெளியிடப்படவில்லை என்று

**ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புக்கள் உயிர்ச் சேத விவரங்கள் தொடர்பில் நம்பகமான தகவல்களை வெளியிட்டுள்ள நிலையில் அண்மையில் இலங்கை அரசு வடக்கில் போர்க் கால சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.**

சர்வதேச பேரிடர் குழு குற்றம் சுமத்தியுள்ளது

உயிர்ச் சேத விவரங்கள் தொடர்பில் சரியான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் உறுப்பு நாடுகள், இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று அந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புக்கள் உயிர்ச் சேத விவரங்கள் தொடர்பில் நம்பகமான தகவல்களை வெளியிட்டுள்ள நிலையில் அண்மையில் இலங்கை அரசு வடக்கில் போர்க் கால சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சர்வதேச பேரிடர் குழு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பில் நம்பகமானதும் பக்கச்சார்பற்றதுமான தகவல்கள் திரட்டப்பட வேண்டுமென சர்வதேச அனர்த்தக் குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட வடக்கு போர்க் கால சனத்தொகை மதிப்பீட்டு புள்ளி விவரத் தரவுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை என்று சர்வதேச பேரிடர் குழு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## துமிந்தவை ஏன் கைது செய்யவில்லை

### நீதிமன்றில் கேள்வி

கொழும்பு,பெப்.29
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலைச் சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வாவைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்து இரண்டு மாதங்களான போதிலும் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று பாதிக்கப்பட்டவர் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் அஜித் பத்திரன தெரிவித்தார்.

இதற்கான தாமதம் குறித்து கேட்டபோது 1,900 பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்று சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே சட்ட மா அதிபரின் ஆலோசனை தமக்குத் தேவை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ச)

## அரச அதிகாரிகளுக்கு விசாரணை

கொழும்பு,பெப்.29
இலங்கையில் சட்ட விரோதமான முறையில் சொத்துக்களை வைத்திருந்த 40 அரச அதிகாரிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகளில் பதினாறு பேர் அரசியல்வாதிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த அரசியல்வாதிகளில் அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதிகாரிகள் சொத்து விவரங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிகாரிகளிடம் தரவுகள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இலங்கைக்கு எதிராக அரச சார்பற்ற நிறுவனங்கள்

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,பெப்.29
இலங்கைக்கு எதிராக அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட 37 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஜெனீவாவுக்குச் சென்றுள்ளன என்று சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவின் முன்னாள் பேராயர் டெஸ்மன்டுட்டு மற்றும் அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மேரி ரொபின்சன் ஆகியோரும் இலங்கைக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர் என்று சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அரச சார்பற்ற நிறுவனங்கள், கவுன்சில் அமர்வுகளில் கோரிக்கை விடுக்கவுள்ளன.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற அனுமதி அளிக்க வேண்டாம் என்று இலங்கைப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ரொபர்ட் ஒ பிளேக் உள்ளிட்ட தரப்பினர் தீர்மானம் நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டி வருவதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ச)



சனத்தொகைக் கணக்கெடுப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. அலரிமாளிகையில் உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப விவரங்களை தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரங்களை புள்ளி விவரத் திணைக்கள அதிகாரிகள் பெற்றுக் கொள்கின்றனர்.

## முதல்வர் இல்லத்தை குத்தகைக்கு வழங்கத் தடை

**மாநகர முதல்வர் அலுவலகத்தை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகமாக பயன்படுத்துவதை நிறுத்துமாறு கோரியே இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு,பெப்.29
கொழும்பு மாநகர முதல்வரின் இல்லத்தை முன்றாம் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கக்கூடாது என்று கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாநகர முதல்வர் அலுவலகத்தை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகமாக பயன்படுத்துவதை நிறுத்துமாறு கோரியே இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மொஹம்ட் மஹ்ரூப் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதால் அலுவலகத்தை மாநகர முதல்வர் இல்லத்துக்கு மாற்ற அனுமதி கோரி ரணில் விக்கிரமசிங்க சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியதாக மஹ்ரூப் தெரிவித்தார்.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்று மஹ்ரூப் தனது மனுவில் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி டி.கனேபொல இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தார்.

## ஹைகோப் வழக்கின் தீர்ப்பு மார்ச் 15 இல்

**சாட்சிகள் பல ஆராயப்படவுள்ளதால் வழக்கு மீதான தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.**

கொழும்பு,பெப்.29
முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான ஹைகோப் நிதி மோசடி வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட இருந்த நிலையில் இரண்டாவது முறையாக பிற்போடப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றின் சாட்சிகள் பல ஆராயப்படவுள்ளதால் வழக்கு மீதான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனிர் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

ஹைகோப் நிதி மோசடி தொடர்பில் இரண்டாம் இராணுவ நீதிமன்றில் சரத் பொன்சேகாவுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் அவரை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு அவருடைய சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் வழக்கு மீதான தீர்ப்பை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு அவர் ஒத்தி வைத்துள்ளார்.

இராணுவத் தளபதியாக இருந்த போது சரத் பொன்சேகா இராணுவ ஆயுதக் கொள்வனவில் நிதி மோசடி செய்ததாக சரத் பொன்சேகா மற்றும் அவருடைய மருமகன் தனுன திலகரட்ன ஆகியோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

### ஐ.நா போர்க்குற்ற விசாரணைக்குழு:

## எவரும் சாட்சியம் வழங்கினால் குடும்பத்தோடு ஒதுக்க வேண்டும்

### சிவில் உரிமைகளும் பறிக்கப்பட வேண்டும்

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் மேற்கு நாடுகளின் சவால்களை இலங்கையால் எதிர்கொள்ள முடியாது. அர்த்தமுள்ளதும் நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதுமான உத்திகளைக் கையாளவேண்டுமே தவிர உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதால் எவ்விதமான பயனும் கிடைக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர தெரிவித்தார்.

தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஊடகவியலாளர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை சௌசிறிபாயவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிராக ஜெனிவா போர்க்குற்ற விசார[illegible] வேண்டும். அக்குழுவில் உள்நாட்டவர்கள் யாராவது சாட்சியமளித்தால் அவர்களின் குடும்பங்களோடு ஒதுக்கி வைக்க வேண்டும். எவ்விதமான சிவில் உரிமைகளும் வழங்கக்கூடாது.

புலிப் பயங்கரவாதிகளை இல்லாதொழித்த பின்னரே மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் கடுமையாக பேசுகின்றன. ஆனால், புலிகள் உள்நாட்டில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசம் பேசுவதில்லை.

உள்நாட்டு போரில் வெற்றி கொண்டதாலேயே இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன.

குறிப்பாக மேற்குலக நாடுகள் பேராசைக்காரர்கள். ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் மேற்குலக நாடுகள் பெரும் பேரழிவுகளை [illegible]ள்ளன. [illegible] மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற போதும் அவை விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. வியட்நாமில் இவ்வாறான நிலையைத் தோற்றுவிக்க முயற்சித்த போதிலும் அது படுதோல்வியையே அடைந்தது.

எனவே, இலங்கை ஒரு சிறிய நாடு என்பதால் மேற்குலக நாடுகளின் சவால்களுக்கு முகங்கொடுப்பது சவாலான விடயமாகும்.

இதற்கு ஏனைய வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமே தவிர உள்நாட்டில் பொதுமக்களை பஸ்களில் ஏற்றி வந்து ஆர்ப்பாட்டங்கள் செய்வதால் எவ்விதமான நன்மையும் இல்லை. அரசு தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மாற்றியமைக்க வேண்டும்.

சதாம் ஹுசைன் மற்றும் கடாபி போன்றவர்களுக்கு இடம்பெற்றது போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடம்பெறலாம். ஏனெனில், அவ்வாறான தொரு வெறித்தனத்திலேயே இன்று மேற்குலக நாடுகள் செயற்படுகின்றன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Star Rest

A/C & Non A/C Rooms, Restaurant




கண்டி வீதி, பரந்தன்.
Tel: 0214925521,0773846330,Fax:0212280051
mail:hotelstarrest@yahoo.com Web:www.hotelstarrest.com



# புனித கச்சதீவு அந்தோனியார் ஆலய பயணப் படகுச் சேவை



புனித கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களின் நலன் கருதிச் சகல வசதிகளுடனும் தொலைக்காட்சி மற்றும் அத்தியாவசிய வசதிகளுடன் கூடிய இரண்டு தட்டு மணி நாகதீபம் படகு 03.03.2012 குறிகாட்டுவான் - நயினாதீவில் இருந்து புறப்பட உள்ளது. கச்சதீவுக்குச் செல்ல விரும்பும் அடியார்கள் முன் கூட்டியே 0772840173 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு: **ந.மோகனரூபன்,**
நயினாதீவு - 05 (0772840173)

(15131) (2-7-6)


### துணுக்காய் பிரதேசசபை

### துணுக்காய் பொது சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகளுக்கான

# குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் - 2012

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 05.03.2012 தொடக்கம் 31.12.2012 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையக் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 01.03.2012 - 05.03.2012 மு.ப 11.30 மணி, வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : 05.03.2012 ந.ப 12 மணி வரை
கேள்வி திறக்கப்படும் திகதி : 05.03.2012 பி.ப 2.00 மணி
கேள்வி திறக்கும் இடம் : துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர்தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டுப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் வைப் புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 10,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 200,000.00 | 2,500.00 | 500.00 |

பொதுச்சந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் வைப் புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச் சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 10,000.00 | 1,500.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
5. இறைச்சிக் கடைகளுக்கான மாத வாடகை ரூபா 500.00 செலுத்தப்பட வேண்டும்.
6. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
7. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
8. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
9. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
10. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**வி.இராசரத்தினம்**
தலைவர்,
பிரதேச சபை,
துணுக்காய்.

(சி/8383) (2-6-7)

28.02.2012

### யாழ்ப்பாணம்

### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வ.து

### உணவுப் பொருள்கள் கூறு விலை கோரல்

எமது சங்கத்தின் கூட்டுறவு உணவகத்துக்கு இடியப்பம், பிட்டு, றொட்டி, தோசை, அப்பம் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களும் வடை, பற்றிஸ், றோல் மற்றும் ஏனைய சிற்றுண்டி வகைகளையும் விநியோகிக்கக் கூடிய விநியோகஸ்தர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலை விண்ணப்பிக்கும் விநியோகஸ்தர்கள் உணவுப்பொருள் உற்பத்திக்கான சுகாதாரப்பகுதிச் சான்றிதழ் பிரதியுடன் இணைத்து **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உணவுப் பொருள்கள் கூறுவிலை கோரல்'' என எழுதப்பட்டு எதிர்வரும் 06-03-2012 ஆம் திகதிக்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C\8373)

பொது முகாமையாளர்.

### அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### பயிலுநர் அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்தல் - கிளைமுகாமையாளர்

**ஆள்சேர்ப்பு தொடர்பான விவரங்கள்**

01. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
02. பயிற்சிக்காலம் முடிந்தவுடன் நிரந்தர ஆள்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
03. பயிற்சிக்காலத்தின் போது கிளைமுகாமையாளராக கிளை ஒன்றைப் பொறுப்பேற்கும்போது சங்கத்தால் கோரப்படும் றொக்கப்பிணை, உறுதிப்பிணை செலுத்துதல் வேண்டும்.
04. நிரந்தர நியமனம் வழங்கப்படும்போது ஒழுக்கம், திறமை, தொழில் அனுபவம் என்பன தொடர்பாக கவனத்தில் எடுக்கப்படும்.
05. பயிற்சிக்காலத்தில் நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.
06. கல்விப் பொது தராதரப்பத்திரம் சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 16.03.2012 க்கு முன்னர் பொதுமுகாமையாளர், அளவெட்டி - மல்லாகம், ப.நோ.கூ.சங்கம், அளவெட்டி எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

பொது முகாமையாளர்
அள.மல்.ப.நோ.கூ.சங்கம்,
அளவெட்டி.

27.02.2012 (C\8380) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னாரில் ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும். ஏனைய 3 மாவட்டங்களிலும் வழமைக்கு மாறாகக் காற்று வீசலாம்.

## கந்தையா சுவாமிகளின் குருபூசை

கோண்டாவில் கந்தையா சுவாமிகளின் 34 ஆவது வருடாந்த குருபூசை, கோண்டாவில் கிழக்கு அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள சமாதியில் இன்று புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

குருதேவரின் அடியார்கள் யாவரும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். இதன்போது திருவாசகம் முற்றோதலும் நடைபெறும். (ந)

## விபசார குற்றச்சாட்டுக்குள்ளான சீனப் பெண்கள் உட்பட மூவருக்கு பிணை

நடமாடும் விபசார வலையமைப்பொன்றை நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சீனப் பெண்கள் இருவரும் இலங்கையர் ஒருவரும் பிணையில் செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுமுன்தினம் அனுமதியளித்துள்ளார்.

தலா 100,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்வதற்கு இவர்களை அனுமதித்த நீதிவான் கனிஷ்க விஜேவர்தன, சீனப் பிரஜைகள் இருவரும் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சீனப் பெண்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி, அந்தப் பெண்கள் மீதான குற்றச்சாட்டை நிராகரித்ததுடன் அவர்கள் இலங்கைக்குப் பயணிகளாக வந்தவர்கள் எனக் கூறினார்.

பிரதான சந்தேக நபரான இலங்கையைச் சேர்ந்த ஆணும் சீனப் பெண்களும் கொள்ளுப்பிட்டிப் பொலிஸாரினால் கடந்த 23 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டனர். இவர்களால் விபசார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோ வாகனமொன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். (ந)

**தலா 100,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்வதற்கு இவர்களை அனுமதித்த நீதிவான் கனிஷ்க விஜேவர்தன, சீனப் பிரஜைகள் இருவரும் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுக்குமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டார்.**

## வட்டுக்கோட்டையில் இரத்ததான முகாம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயம் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயங்களின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு, வருடம் தோறும் இடம்பெறும் இரத்ததான நிகழ்வு இந்த முறையும் வட்டு மூளாய் வீதியில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற உள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்பும் அடியார்கள் யாவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரும், தொண்டர் சபையினரும் அறிவித்துள்ளனர். (ந)

## கடல் வளம் அழியும் அபாயகரமான நிலை

உலகின் பல்வேறு கடல்களில், கடல் வளங்கள் அழியும் அபாயத்தில் இருப்பதாக உலக வங்கி கவலை தெரிவித்துள்ளது.

மேலும் நாடுகளின் அரசுகள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து கடல் வளங்களைப் பாதுகாப்பதில் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுகுறித்து உலக வங்கி தலைவர் ரொபர்ட் ஜோயெல்லிக் கூறியதாவது:

அதிகளவில் மீன் பிடித்தல், கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை குறைதல் உட்பட பல்வேறு காரணங்களால் கடல் வளங்கள் அழியும் அபாயம் உள்ளது. கடலின் மீன்பிடி இடங்களில் 85 சதவிகித இடங்கள் முழுவதும் அதிகமாக சுரண்டப்பட்டு விட்டன.

இப்படி அழிந்து போன உயிரினங்களில் முதல் 10 இடங்களில் இருந்தவையும் அடங்கும். உலகின் பாதியளவு மீன்களையாவது காப்பாற்றுவது உட்பட்ட பணிகளை அடுத்த 10 ஆண்டுகளில் நாடுகள் இணைந்து பணியாற்றுவதற்கான பல்வேறு இலக்குகளை உலக வங்கி முன்வைத்துள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய கடல் பகுதிகளை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (ந)

## வாகனம் செலுத்திய சிறுவனுக்கு அபராதத்துடன் ஆலோசனை

வடமராட்சி, பெப்.29

சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய சிறுவனுக்கு பருத்தித்துறை நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டதுடன், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தக்கூடாது. வயது வரும் வரை காத்திருந்து சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் மோட்டார் சைக்கிளை ஓடலாம் எனவும் பருத்தித்துறை பதில் நீதிவான் ஆலோசனையும் அளித்துள்ளார்.

பதிவுப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவன் ஒருவன் மீதான வழக்கு பருத்தித்துறை பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், சிறுவன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கேட்டபோதே அவர் 17 வயதுச் சிறுவன் என்பது தெரியவந்தது. இதனையடுத்து சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்தியது மற்றும் சிறுவன் என்ற இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பதில் நீதிவான் தீர்ப்பளித்தார். (ந)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(14752) (45-6)

### 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 ★ 11 ★ 1981

மறைவு 02 ★ 12 ★ 2011



திருமதி ஜெயகரன் ராதிகாநிதி

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு
காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

எமது குடும்பத்தலைவியின் திடீர் இழப்பால் நாம் துயரடைந்து இருந்த வேளையில் நேரில் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், உடனிருந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பா. ஜெயகரன் (கணவர்)

89, கட்சன் வீதி, வட்டுக்கச்சி.

(14920) (45-6-7)

### PHYSICS ENGLISH MEDIUM. CLASS

A/L - 2014 MECHANICS

A/L 2012 ELECTRICITY

ஆரம்பம் :- 03.03.2012

நேரம் :- 3.30 P.M.

இடம் :- Green Pearl Institution Navalar Junction.

தொடர்பு : 077 4287373,

(15107)(6-7-8)

### காணி/வீடு விற்பனைக்குண்டு

கல்வியங்காடு பிளேக்கிறவுண்ட் றோட்டில் (Play ground road), கோப்பாய் தெற்கு 3 ½ பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775174872.

(15103)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம்/சுண்டுக்குழி-Girls School அருகில் 5 Rooms/Hall/2 Bathrooms/Kitchen வீடு வாடகைக்கு உண்டு NGO/நிறுவனம்/Office use விரும்பத்தக்கது/Vehicle parking available.

0757131027,
No.33,2nd Lane, Columbuthurai road, Chundukulli, Jaffna.

(15103)

### காணி விற்பனைக்கு

நல்லூர், மருதடி ஒழுங்கையில் 36ஆம் இலக்க காணி விற்பனைக்கு உண்டு பகுதியாகவும் விற்கப்படும்.

தொ.பே. 077 564 1979

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

(13923) (45-6-7)

### மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L தகைமையுடன் கற்கலாம். கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்புடனான பயிற்சி நெறி. M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.

Fee : 12,500/= (4/6 Months)

லாவா வைத்தியசாலையில் பயிற்சி.

Knowledge Universe
No.75, Temple Road, Jaffna
Call : 0776458253

### யு.கே விசாவுக்காக அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

இலக்கண வேதனையற்ற மிகவும் இலகுவான, வீடியோ,ஓடியோ முறை மூலம், தனிப்பட்ட முறையில் கல்வி. வெளிநாடுகளில் சர்வதேச பல்கலைகழகங்களில் பணியாற்றிய இங்கிலாந்து ஆங்கிலக்கல்வி முறையில் கற்பிக்கும் பட்டதாரி பயிற்றுனரின் பயிற்சிகள். ஒரு முறை வருகை தந்து KU ஏன் வித்தியாசமானது என்பதையும் பல நூறு மாணவர்கள் நம்புவதற்கு காரணம் என்ன என்பதையும் அறியுங்கள். KU-UK Visa English Specialists

திருமணம் மூலமாக யு.கே செல்வோருக்கான (Settlement Visa )A1 சான்றிதழுக்கான பரீட்சைக்கும் பயிற்சிக்கும் யாழ்நகரில் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம்.

Ku's Spoken English ESOL | IELTS | Key Exam
(No Grammar) (A College Managed by Qualified people)



அழையுங்கள் :077-6458253 www.kugroup.info

City & Guilds நொலிட்ஜ் யூனிவேர்ஸ்

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

### 12 ஆம் ஆண்டு நினைவு



சின்ன மகவின் வரவு 30.05.1942

கணித மலையின் சரிவு 29.02.2000

அமரர் பொன்னையா வேலாயுதம் ஆசிரியர்
(Vector Sir)

கணித ஆசானாக இருந்தவேளை
கற்றுக்கொண்ட அனுபவங்கள்
நெஞ்சை விட்டகலா நெடுங்காலம் வாழும்
சிந்திக்கக் கற்றுக் கொடுத்த சிகரம் நீங்கள்

என்றென்று உங்கள் நினைவில் வாழும் மாணவன்,
சில்லையூர் றெ.அலெக்ஸ் M.Eng.(AIT), B.Sc.Eng.(PDN).
0787396571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாக அமைந்தாலும், அதுவும் நன்றாகவே அமையும். வண்டி வாகனங்களை கையாளும்போது, கவனம் அவசியம். நல்ல செய்தி கேட்கலாம்.

**இடபம்:** இறை வழிபாடுகள் மூலம், அமைதி பெற வேண்டிய நாள். நீண்ட நாள்களாகப் பார்க்காமல் இருந்த ஒருவரை திடீரென வழியில் சந்திக்கலாம். தொழில் ரீதியாக சிலரின் கண்டிப்புக்கு ஆளாகலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். கடன் மிகுதிகளைச் சாக்குப்போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். திடீர் பயணங்கள் செல்லலாம்.

**மிதுனம்:** நல்ல செய்திகள் வீடுதேடி வரும் நாள். சொல்வாக்கைக் காப்பாற்றி, செல்வாக்குப் பெறுவீர்கள். உறவினர்களை உபசரிக்க, கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். உங்களின் தவறு ஒன்றை நினைத்து கவலை அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விடயங்களில், விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வீட்டில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

**கடகம்:** எதிர்ப்புகளை, போட்டிகளைச் சமாளிப்பீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில், அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்கள் தயங்கும் சில வேலைகளை, நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் சர்ச்சைக்குரிய பேச்சுக்கள் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வெற்றிகரமான நாள்.

**சிங்கம்:** வாய்ப்புகளை நழுவ விட்டு விட்டு கவலை அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களுக்கு கை கொடுத்து உதவலாம். இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட வேலை ஒன்று, இன்று நல்ல விதமாக முடியும். ஒரு வகையில் வந்த வரவுகள், மற்றொரு வகையில் செலவாகும். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

**கன்னி:** பிறரை நம்பி மற்றவர்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டாம். ஒருவரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே, உங்களை விமர்சனம் செய்வது கண்டு எரிச்சல் அடையலாம். வீண் பழிகள் வராமல் இருக்க, கவனம் அவசியம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு ஏற்படும். வேலைப்பளு கூடும்.

**நாளை**

மாசி 18 வியாழக்கிழமை 01.03.2012
திதி: அட்டமி பி.ப. 05.35 வரை
நட்சத்திரம்: ரோகிணி மா. 05.39 வரை
சுபநேரம்: 07.57- 09.27 வரை,
ராகு காலம்: 01.57- 03.27 வரை

**துலாம்:** பொது விடயங்களில் ஈடுபாட்டு, புகழ் சேர்க்க முற்படுவீர்கள். பல முறை அலைய நேரிடும் என நினைத்த வேலை ஒன்று, சுலபமாக முடிவுக்கு வரும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:** நல்ல காரியங்களுக்காக சிறிதளவு பணத்தைச் செலவு செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். அரசியல் தொடர்புடையவர்கள் திடீர் பயணங்கள் செல்லலாம். உதவி செய்த ஒருவருக்கு, பதில் உதவி செய்வீர்கள். சோம்பல் கூடும்.

**தனுசு:** ஏட்டிக்குப் போட்டியாகச் சில வேலைகளைச் செய்து, மற்றவர்களின் கோபத்துக்கு ஆளாகலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் முந்திக் கொண்டு செயற்படுவதன் மூலம், பண இழப்புகளைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம். சிலர் உங்களிடம் கடன் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். கடுமையான பேச்சுக்கள் மூலம், சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். பயணங்களால் செலவு, அலைச்சல் ஏற்படலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலை அடைவீர்கள். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம்.

**கும்பம்:** நினைத்ததை சாதித்து, சந்தோஷம் அடையும் நாள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரை சந்திப்பீர்கள். சிலர் தொழில் நிமித்தமாக, வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிதளவு ஆதாயத்தை எதிர்பார்த்த வேலை ஒன்றில், கணிசமான பொருள் வரவுகளைப் பெறலாம். சகோதரர்கள் விடயங்களில் கவனம் அவசியம். நட்பு வட்டம் விரிவடையும்.

**மீனம்:** சிலருடன் வீண் பேச்சுக்கள் பேசி, அரட்டை அடித்து நேரத்தை வீணடிப்பீர்கள். மற்றவர்களுக்கு நடந்து, உங்களுக்கு நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி யோசித்து ஆதங்கப்படுவீர்கள். வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் ஓய்வெடுப்பீர்கள். தொலைபேசி வழியில் சில முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 9 | | | | | |
| 8 | | | | | | 5 | | |
| | 7 | | | | 6 | 8 | 9 | |
| 9 | | 8 | 5 | 3 | | | 1 | 2 |
| | 4 | | 7 | 6 | 9 | | 5 | |
| 3 | 5 | | | 8 | 1 | 9 | | 4 |
| | 9 | 5 | 8 | | | | 4 | |
| | | 1 | | | | | | 9 |
| | | | | | 2 | 1 | 8 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 5 | 6 | 9 | 1 | 4 | 8 | 2 |
| 8 | 6 | 2 | 4 | 3 | 5 | 1 | 9 | 7 |
| 4 | 9 | 1 | 7 | 8 | 2 | 3 | 5 | 6 |
| 3 | 1 | 9 | 8 | 4 | 6 | 7 | 2 | 5 |
| 2 | 4 | 6 | 5 | 7 | 3 | 8 | 1 | 9 |
| 5 | 8 | 7 | 1 | 2 | 9 | 6 | 3 | 4 |
| 9 | 5 | 4 | 3 | 6 | 8 | 2 | 7 | 1 |
| 6 | 2 | 3 | 9 | 1 | 7 | 5 | 4 | 8 |
| 1 | 7 | 8 | 2 | 5 | 4 | 9 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை தவராசா

துரையந்தோட்டம், நவிண்டில், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராசா (25.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் பிரகாஷ் (சுவிஸ்), பிரபாலினி, பிரமிளா, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராஜ், சிவராஜ், ஜீவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசலட்சுமி, யோகராசா, நடராசா, இராசமணி, தர்மராசா, கெங்காதரன், தனலட்சுமி, காலஞ்சென்ற சுபாஷினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் வெற்றிவேலாயுதம், நாகேந்திரம், ப.நவரத்தினராசா, கந்தகுமார், நாகேஸ்வரி, கலாமதி, ஸ்ரீவள்ளி, பாமினி, பஞ்சராசா, இந்திராணிதேவி, காலஞ்சென்ற நவரத்தினராசா மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சோபிகா, ராகவி, டயானிகா, சஜீவனா, ரவீனா, பூர்வஜா ஆகியோரின் பேரனும், கபீனா, சகானா, அபர்னா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2012) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரையந் தோட்டம்,
நவிண்டில், கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C\8376) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் விரும்புவது ஆடம்பரமா?

இறைவனின் படைப்புகளில் மேலான படைப்பு மனிதனே. ஆனால் இன்றைய மனிதனோ இறைவனா மனிதனைப் படைத்தார்? என்று ஆதாரங்களைக் கேட்கின்றான் . இன்றைய உலகில் இறைவனைத் தேடி ஆலயம் செல்பவர்கள் யார்?ஆலயம் செல்பவர்கள் அனைவரும் இறைவனைத் தேடுகின்றனர் இல்லை. பலர் ஆலயத்துக்குச் செல்கின்றார்கள். பலரில் சிலர் தமது விலையுயர்ந்த ஆடை, ஆபரணம் என்பவற்றைப் பிறர் பார்க்க வேண்டும் என்ற செருக்குடன் ஆலயத்துக்குச் செல்கின்றார்கள். வேறு சிலரோ நான் முன்னேற வேண்டும்; எனது குடும்பம் நன்றாய் இருக்க வேண்டும் என்றும் இறைவேண்டல் செய்கிறார்கள். மிகுதியினரோ ஆலயத்தில் இறைவனுக்கு லஞ்சம் கொடுக்கச் செல்கிறார்கள்.'யேசுவே நீர் எனக்கு இது செய்தால் நான் உமக்கு இவற்றைச் செய்வேன்'. இவ்வாறான நிலையே இன்று ஆலயம் செல்வோரின் நிலையாக உள்ளது. இவ்வாறு மன எண்ணத்தோடு ஆலயம் செல்வதை விட ஆலயம் செல்லாமல் இருப்பது மேன்மையானது.




இவ்வாறான இறைவேண்டலை இறைவன் கேட்பாரா? ஒருபோதும் இல்லை. இறைவேண்டலுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தவர் யேசு. தன்னைக் கொலை செய்ய வருவோரை மன்னிக்கும்படி இறைவனிடம் வேண்டினாரே. இதுவல்லவா இறைவேண்டல். நமது இறை வேண்டலும் இன்றைய உலகில் எமது கண்களில் தென்பட்டோ ,தென்படாமலோ சித்திரவதை முகாம்களில் வாழ்ந்துகொண்டு இருப்போரை எமது அயலவராக மனதால் நினைத்து மற்றும் பசியாலும் பெற்றோரை இழந்து வாழ்ந்து கொண்டு இருப்பவர்களை எமது சகோதரர்களாக எண்ணி இதுபோன்றவர்களுக்காகவே இறைவனிடம் வேண்ட வேண்டும்.

இவ்வாறான செபத்தையே இறைவன் அதிகமாக விரும்புகின்றார் என்பதை நாம் அறிந்து கொள்வோம். நாம் மற்றவர்களுக்காக வாழும் போதோ செபிக்கும்போதோ எம்மை ஆசீர்வதித்து மென்மேலும் பலப்படுத்துவார். எமக்காக உயிர்துறந்தார் இறைமகன். அவருக்காக எம்மில் மாற்றத்தை ஏற்படுத்தி எமது வாழ்வைத் தூய்மையாக்கி இறைவனுக்காக வாழ்வோம்.

எஸ்.ரினேஸ்
குருநகர்.

# தனியார் பல்கலைக்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வகையில் இலங்கையில்,

- அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் காணப்படும்.
- அனைத்துப் பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அவதானிக்கப்படும்.
- அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக உயர்கல்வியைப் பெறுவர்.
- தனியார் பல்கலைக்கழகங்களிலும் 20வீதமான மாணவர்கள் இலவசமாக உயர்கல்வியைப் பெறுவர். மிகுதி 40 வீதமான அரச கடனில் உயர் கல்வியைப் பெறுவர்.

இவ்வாறான ஒரு நடைமுறையில் தகுதி படைத்த எந்தவொரு மாணவனும் பணவசதியில்லாத காரணத்தால் உயர்கல்வி வாய்ப்பை இழக்கமாட்டான். தனியார் பல்கலைக்கழக சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. . அச் சட்டமூலத்தில் மேற்படி இலாபநோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படக்கூடியதான சரத்துக்கள் அமைதல் வேண்டும்.

இலங்கையில் வங்கித்துறை, போக்குவரத்து, தொலைத்தொடர்பு போன்ற பல துறைகளில் தனியார் அனுமதிக்கப்பட்டார்கள். அனாலும் தனியாரை அறிமுகப் படுத்தமுன் மேற்படி அரச நிறுவனங்கள் தனியாருடன போட்டியிடக் கூடியவாறு வளர்த்தெடுக்கப்பட்டன. அந்தவகையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அறிமுகப்படுத்தப்படுமாயின் உலகின் பிரபல்யமான Monash, MIT பல்கலை க்கழகங்களை இங்கு தமது வளாகங்களை ஸ்தாபிக்கலாம். அவற்றுடன் போட்டியிடக்கூடியவாறு அரச பல்கலைக்கழகங்களும் தரமுயர்த்தப்பட வேண்டும் . அந்தவகையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கூறுவது போன்று மொத்தத் தேசிய வருமானத்தில் ஆகக் குறைந்தது 6வீதம் ஆயினும் உயர் கலவிக்காக ஒதுக்கப்படல் வேண்டும் மேற்கூறப்பட்டது போன்ற இலாபநோக்கற்ற தனியார் பல்கலைக்கழகங்களால் அரச பல்கலைக்கழகங்களுக்கு ஓர் ஆரோக்கியமான போட்டியைத் கொடுக்கமுடியும். அவ்வாறாயின் தற்போது வங்கித்துறை மற்றும் தொலைத்தொடர்புத்துறை என்பன மக்களை மையமாகக் கொண்ட சேவையை வழங்குவது போல அரச பல்கலைக்கழகங்களும் மாணவரை மையமாகக் கொண்ட கற்பித்தலை வழங்கும்.

தற்போது இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகமும் சர்வதேச தர வரிசைப் பட்டியல்களில் முதல் 2000 இடங்களினுள் இல்லை. இவ்வாறான ஆரோக்கியமான போட்டியால் அரச பல்கலைக்கழகங்களின் தரம் உயரலாம்.

இலங்கையின் மட்டுப்படுத்தப்பட்ட உயர்கல்வி வாய்ப்பு பாடசாலைகளில் மாண்வரின் கல்விசாரா திறன்களை வளர்க்காது பந்தயக் குதிரைகளாகக் கல்வி கற்கும் போக்கை உருவாக்கி விட்டுள்ளது. தனியார் பல்கலைக்கழகங்களால் உயர்கல்விக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படின் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை முதல் உயர்தரம் வரையிலான மாணவர்களின் போட்டிப் பரீட்சைக்கான வெறித்தனமான தயார்ப்படுத்தலில் தளர்வு ஏற்படலாம்.

எனவே தனியார் பல்கலைக்கழகங்கள் எமக்கு வேண்டாம் என மறுப்பதைக் காட்டிலும் எவ்வகையான தனியார் பல்கலைக்கழகங்கள் எமக்குத் தேவை என ஆராய்ந்து அந்த வகையான பல்கலைக்கழகங்களின் தோற்றத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது புத்திசாலித்தனமானது.

Join Sri Lanka's #1
Sri Lanka's Leader Professional ICT Education is looking for skilled people
ESOFT

Vacancies @ ESOFT

Available in Kilinochchi for Lecturers / Asst. Lecturers / Instructors

Would be responsible for conduting classes for Certificate and Diploma level programmes covering basic application, operating systems, Programming (Java ,C#) etc. Multimedia / Networking / Hardware lecturers should be qualified with vendor certifications in their relevant fields. Experience is not a must. Minimum qualification for General IT Asst Lecturer post would be a higher diploma in computing.

Mail us your CV (POST or EMAIL) within 10 days to reach the Human Resourse Manager. Mark the Post along with the branch that you are applying for on the top left corner of the envelope or as the subject in the mail.
How to Apply

ESOFT Computer Studies (Pvt) Ltd.
No.17/1, Brown Road,Jaffna - Srilanka. Hotline: 0773099308
Web:www.esoft.lk Email:careers@esoft.lk

## பெயர் மாற்றம்

கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் நந்தகுமார் ஆகிய நான் எனது பெயரினை சட்ட வரம்புக்கமைய 27.02.2012 அன்றில் இருந்து பொன்னம்பலம் நந்தகுமாரன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன்.

பொன்னம்பலம் நந்தகுமாரன்
கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை வீதி.

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயோதிபத் தம்பதியினரை பராமரிக்கக் கூடிய பணிப் பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு : 077 7260974 (C8377)(6-7-8)

## வீடு வாடகைக்கு தேவை

கன்னாதிட்டி, மருதனார்மடம், இணுவில் பிரதேசங்களில் கே.கே.எஸ். வீதியில் அல்லது அண்மையில் தூரத்தில் சகல வசதிகளும் கூடிய வீடு சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்குத் தேவை. (முற்பணம் வாடகை நேரில்)
தொடர்பு: 077 0440 570, 077 139 3670

## கோழிப்பண்ணை விற்பனை

நவாலி வடக்கு, மானிப்பாய்
நவீன 3 பண்ணைக் கட்டடம் உட்பட அலுவலகம், செக்குறுட்டிக் கட்டடம் 5½ பரப்புடன் சகல வசதிகளுடன் நல்ல விலையில் விற் பனைக்குண்டு. தொலைபேசி:
0778350478, 0776704364

## வேல் மிக்சர்

விசேட தயாரிப்புக்கள்

சுபவைபவங்களுக்குத் தேவையான பூந்தி லட்டு, நெய் பூந்தி, மஸ்கட், பயற்றமுருண்டை, அரியதரம், சிற்பி முறுக்கு, வெளிநாடு கொண்டு செல்லக் கூடிய விஷேட மிக்சர், பகோடா, கச்சான் பகோடா விற்பனைக்கு உண்டு. ஓடர் செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: வேல் மிக்சர்
[illegible]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 21.09.1921 மறைவு 31.01.2012

அமரர்
### கார்த்தி கந்தையா

கடந்த 31.01.2012 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (01.03.2012) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
தாவடி தெற்கு, கொக்குவில். (15163)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
01★07★1943

விண்ணில்
11★03★2011

திதி:-
பூர்வ பட்ச ஸப்தமி

### கனகசபை சிவராசா
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

ஆண்டு ஒன்று ஆகிவிட்டதப்பா
எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை
ஆண்டவன் திருவடியை அடைந்து
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.01,மருதடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (15160) (5-7-6)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### பொன்னையா தங்கராசா

கடந்த 29.01.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.02.2012 திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று (29.02.2012) புதன் கிழமை குமரபுரம், பரந்தனில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குமரபுரம்,
பரந்தன்.
தொ.பே: 0778365564.

க. சிவபாக்கியம்
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள். (11016) (6.7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජාතික නාට්‍ය උළෙල 2012
தேசிய நாடக விழா 2012

**கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**தேசிய நாடக விழா - 2012**

**(சிங்களம் / தமிழ்)**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலங்கை கலைக் கழகத்தின் நாடக குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் 2012 தேசிய நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அரங்கேற்றப்பட்ட சுய / மொழிபெயர்ப்பு / தழுவல் மேடை நாடகங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை தகுந்த முறையில் பூரணப்படுத்தி **2012 மார்ச் மாதம் 31** ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

மேற்குறிப்பிட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் சுற்றுநிருபம் என்பன செயலாளர், நாடகக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
**011-2872385 என்ற**
**தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்**

விஜித் கனுகல
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்


## லக்சுமி தியேட்டர் ஒழுங்கையில் சட்டவிரோத மதுபான விற்பனை

### தடுத்து நிறுத்தக் கோரி கடிதம்

வடமராட்சி, பெப். 29.

நெல்லியடிப் நகர்ப்பகுதியில் லக்சுமி தியேட்டர் ஒழுங்கையில் சட்டவிரோதமான மதுபான விற்பனை மற்றும் சிற்றுண்டி விற்பனையை உடனடியாக நிறுத்தி சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதுடன், இந்த ஒழுங்கையில் பயணம் செய்யும் மக்கள் அனுபவித்துவரும் சிரமங்களைப் போக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

லக்சுமி தியேட்டர் ஒழுங்கையில் வசிக்கும் குடியிருப்பாளர்களும் வரியிறுப்பாளர்களும் இது தொடர்பான கோரிக்கையை கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

குறிப்பிட்ட ஒழுங்கை கழிப்பிடமாக பல ஆண்டுகளாகப் பொதுமக்களால் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் இரவு, பகலாகச் சட்டவிரோதமாக மதுபாவனையில் ஈடுபடுவோர் ஒழுங்கையால் பயணிப்போரிடம் தகராறிலும், தகாத வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் இந்த ஒழுங்கையின் வடக்குப் புறமாகஉள்ளஇலங்கைவங்கிக்குச்சொந்தமான காணியில் நடமாடும் சிற்றுண்டி வண்டிகள் தரித்து நின்று மது அருந்துவோருக்குச் சிற்றுண்டிகளை விற்பதால், அந்தச் சிற்றுண்டிகளின் மிகுதிகளும், கைவிடப்பட்ட வெற்று மதுபானப் போத்தல்களும் அங்கு பரவிக் காணப்படுகின்றன. இதனால் பெரும் அசௌகரியங்களும் தொல்லைகளும் ஏற்படுகின்றன. இதுபற்றி இந்த ஒழுங்கையால் பயணிப்போரைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்குமாறு அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையின் பிரதிகள் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர், பருத்தித்துறை மாவட்ட சுகாதாரத் வைத்திய அதிகாரி, பருத்தித்துறை மதுவரி அத்தியட்சகர், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர், இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-08)


ජාතික කෙටි නාට්‍ය උළෙල 2012
தேசிய குறு நாடக விழா 2012

**கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**தேசிய குறு நாடக விழா - 2012**

**(சிங்களம் / தமிழ்)**

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக் கழகத்தின் தேசிய நாடகக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் 2012 தேசிய குறு நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சகல விண்ணப்பதாரிகளும் நாடகக் குழுவின் செயலாளரால் வழங்கப்படும் விண்ணப்பத்தை தகுந்த முறையில் பூரணப்படுத்தி 03 நாடகப் பிரதியுடனும் 03 சாராம்சப் பிரதிகளுடனும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி திகதியான **2012 மார்ச் மாதம் 31** ஆம் திகதிக்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் '**தேசிய குறு நாடக விழா-2012**' என்று குறிப்பிடவும்.

மேற்குறிப்பிட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் சுற்றுநிருபம் என்பன செயலாளர், நாடகக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு சகல மாவட்ட செயலகங்களிலும் விண்ணப்பங்கள் மற்றும் சுற்றுநிருபங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
**011-2872385 என்ற**
**தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்**

விஜித் கனுகல
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்


### பணிக் கொடை நிலுவை விசாரணை

இளைப்பாறிய வட பிராந்திய போக்குவரத்து ஊழியரின் பணிக்கொடை நிலுவையை கடந்த 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணியளவில் யாழ்.பஸ் நிலையத்தில் சமுகம் கொடுத்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஓய்வு பெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை வட பிராந்திய ஊழியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(ந)


**80 ஆவது அகவையின் நினைவுடன்**



**திருமதி நல்லையா மனோன்மணி**

80 ஆவது அகவையில் உங்களை நினைத்து பிரார்த்திக்கின்றோம்.

230, கண்டி வீதி, சாவகச்சேரி. (14666)(6-7-8)

என்றும் நினைவுடன் குடும்பத்தினர்.

**31 ஆம் நாள் நினைவலை**

பிறப்பு 27 - 04 - 1946

இறப்பு 30 - 01 - 2012



**சிவசுப்பிரமணியம் சாயாதேவி**

அன்புத் தெய்வமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அனைவருக்கும் காவலனாய்
திகழ்ந்த அம்மாவே
காலம் எல்லாம் உனை மறவோம்.

- குடும்பத்தினர்.

பிறப்பிடம்: அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
வதிவிடம்: 722, சுவிச்சென்ரர், வட்டக்கச்சி, கிளிநொச்சி. (11048) (2,6,7)

**அந்தியேட்டி அழைப்பு**



**முருகுப்பிள்ளை தணிகாசலம்**

(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)

தோற்றம் 1931.06.16 முல்லைத்தீவு

மறைவு 2012.02.01 பருத்தித்துறை

2012.03.02 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு தாமரைக்குளத்தடியில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர், உறவினர்
பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறை.

(4/8384)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுலன், பங்குஜன், ஆதித்தன் சதம் இன்னிங்ஸால் வென்றது கொக்குவில்

யாழ்ப்பாணம், பெப்.29

ராகுலன், பங்குஜன், ஆதித்தன் ஆகியோர் சதம் விளாச ஒரு இன்னிங்ஸ் 306 ஓட்டங்களால் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை வெற்றி கொண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி .


ராகுலன்


பங்குஜன்


ஆதித்தன்

கடந்த ஞாயிறு, திங்கட் ஆகிய தினங்களில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு அணிக்கு இடையிலான நட்பு ரீதியிலான கிரிக்கட் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோயைக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 77 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 503 ஓட்டங்களை பெற்றனர்.

இதில் ராகுலன் 90 பந்துகளில் 6 ஆறு ஓட்டங்கள் 15 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 132 ஓட்டங்களையும், பங்குஜன் 124 பந்துகளில் 18 நான்குகள் அடங் கலாக 122 ஓட்டங்களையும் , ஆதித்தன் 80 பந்துகளில் 7 ஆறு ஓட்டங்கள் 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 116 ஓட்டங்களையும் நிஷாந்தன் ஆட்டம் இழக்காமல் 15 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 21 ஓட் டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பாக ஜெனசன் 22 ஓவர்கள் பந்து வீசி 139 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டு க்களையும் துவாரகன் 13 ஓவர்கள் பந்து வீசி 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சஞ்சயன் 17 ஓவர்கள் பந்துவீசி 97 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது. இதற்கமைய தனது முதலாவது இனிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 41 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

டிலக்ஷன் 60 பந்துகளில் 36 ஓட்டங்களையும், ஜெனோஷன் 33 பந்துகளில் 25 ஓட்டங்களையும் சிந்துஜன் 30 பந்துகளில் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பில் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக ராகுலன் 11 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக் களையும் யனுதாஸ் 10 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிலோஷன், பவித்திரன், நிஷாந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பலோ ஒன் முறையில் தனது 2ஆவது இனிங்ஸ்சில் துடுப்பெ டுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 26.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் றொபேட் 60 பந்துகளில் 27 ஓட்டங்களையும், டிலக்சன் 38 பந்துகளில் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக ராகுலன் 9 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் டுக்களையும், ஆதித்தன் 1.2 ஓவர்கள் பந்து வீசி 2 விக்கெட்டுக்களையும், பவித்திரன் , திவாகர், ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். (த-23)

## இன்றைய ஆட்டம்




யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மத்திய கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்களின் அனுசரணையுடன், யாழ். சென்றல் விளையாட்டுக் கழகமும், யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின் ஒளியில் இடம்பெறவுள்ளது.

இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 6 மணிக்கு கே.ஸி.ஸி.ஸி 'ஏ' அணி எதிர் யாழ்.பல்கலைக்கழகம்

7 மணிக்கு பற்றிசியன் விளையாட்டுக்கழகம் எதிர் கோல்ட் கோல்ட் விளையாட்டுக்கழகம்.

(த-23)


## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதரத்துவ உறுப்பினர் **கனகசபை முத்துலிங்கம்** அவர்களின் அன்பு மாமன்

### அமரர் கைலாயர் தம்பு

அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(C\2943) (6,7,10)

## அச்சக வேலைக்கு ஆள்கள் தேவை
(ஆண்கள் மட்டும்)

எமது நிறுவனத்திற்கு அச்சகவேலைகள் செய்வதற்கு ஆள்கள் தேவை முன் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் (2012.03.01,02) ஆம் நாள்களில் காலை 9.00 - 12.00 வரை நேரில் வரவும்.

முகாமையாளர்,
லக்ஷ்மி என்ஜினியறிங்,
105, இராஜ வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(C/8373)(6-7-8)

## தொழிற்திறன் இலவச வகுப்புக்கள்

பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான

1) தையல் பயிற்சி வகுப்பு
2) மனைப்பொருளியலும், மனை அலங்காரமும் வகுப்பு
3) அடிப்படைக் கணினி அறிவு பயிற்சி நெறி என்பன

இலக்கம் 26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள், தமது பெயர் விவரங்களை 2012.03.07 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலய நாள்களில், காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 05.00 மணி வரை நேரிலோ அல்லது தபாலிலோ மேற்படி முகவரியில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் (மேற்படி பயிற்சி நெறியினை மேற்கொள்பவர்களுக்கான அடிப்படை ஆங்கில அறிவு வகுப்புக்களும் இடம்பெறும்.)

நிர்வாகம்.

(C8382)(6-7-8)

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுணராசா ஜெயமதி



வல்லியாவத்தை கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட சாந்தகுணராசா ஜெயமதி 27.02.2012 திங்கட் கிழமை சிவபதமடைந்தார். அன்னார் வேலுப்பிள்ளை (காந்தி) - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா - பத்மினி தம்பதி யரின் அன்பு மருமகளும், சி.சாந்தகுணராசாவின் அன்பு மனைவியும், தனுஷா, தர்ஷகா, தனுசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## தேவை

பழைய கழிவுப் பேப்பர்கள், பழைய காகிதாகிகள், வெட்டுப் பேப்பர்கள் என்பன தங்கள் இடங்களுக்கு வந்து கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 071 4546802

## வேலைக்கு ஆள் தேவை

வாகனங்கள் சேவிஸ் போடுதலில் முன் அனுபவம் உள்ள ஆள்கள் தேவை. தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்குத் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

பாலா சேவிஸ் ஸ்ரேசன், கொடிகாமம் வீதி, மந்திகை, புலோலி. 077 6192927

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கொட்டடிச் சந்திக்கு மிக அருகில் (S.V.M. காஸ் விற்பனை நிலையத்துக்குப் பின்புறம்) 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 2279219

## தவறிவிட்டது

இல.9/7, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யேசுதாசன் டெனிஸ் தர்சன் என்பவருடைய தே.அ.அட்டை (842682762 V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0771117789.
[illegible]
குருநகர். யாழ்ப்பாணம்.

(15157)

## மரண அறிவித்தல்

திருமதி
### குமாரசாமி மங்கையர்க்கரசி

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில், பழனியாண்டவர் கோயிலடியை விசிப்பிடமாகவும், தற்போது தயா றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி குமாரசாமி மங்கையர்க்கரசி 28.02.2012 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-செல்லம்மா தம்பதியரின் அருமை மருமகளும், குமாரசாமியின் ஆருயிர் மனைவியும், சகிலா (லண்டன்), அகிலன் (லண்டன்), சுமங்கலா (நோர்வே), கபிலன் (இத்தாலி), அனுஷலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(15133) (6,7,10)

தகவல்:
நாகலிங்கம் கிருஷ்ணபாலா
(தம்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு இமாலய வெற்றி



வெற்றியின் நாயகன் விராட் ஹோக்லி

இந்திய அணி வாழ்வா, சாவா என்ற நிலையில் நேற்றையதினம் களமிறங்கியிருந்தாலும் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெறும் வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் சீ.பி. கிண்ண முக்கோணத் தொடர் இடம்பெற்று வருகின்றது. ஹோபார்ட்டில் நேற்றையதினம் தொடரின் பதினொராவது ஆட்டம் இடம்பெற்றது. இதில் இலங்கை அணியும், இந்திய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி இந்திய அணித்தலைவர் டோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் பதான் நீக்கப்பட்டு சகீர்கான் இணைத்துக் கொள்ளப்பட்டார். இலங்கை அணி மாற்றமின்றி களமிறங்கியது.

மஹேல, டில்ஷான் கூட்டணியே களமிறங்கியது. மிகச் சிறப்பாக இந்தத் தொடரில் கலக்கிய மஹேல நேற்றைய தினம் சுழற்பந்து வீச்சுக்கு வழமையாக ஆடும் தனது 'ஷொட்டை' சிலிப் திசையில் தட்டிவிட முயன்ற சமயம் சேவாக்கிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அதன் பின்னர் நுழைந்த சங்ககார இந்தியப் பந்து வீச்சில் வெளுத்து வாங்கினார். இது நாள்வரையில் சாதிக்காததை வைத்து நேற்றையதினம் போட்டுத் தாக்கினார். மறுமுனையில் டில்ஷான் சங்காவுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து ஓட்டங்களைக் குவித்துச் சென்றார். டில்ஷான் 132 பந்துகளில் தனது 11 ஆவது சதத்தை குவிக்க மறுமுனையில் விளாசிக் கொண்டிருந்த சங்ககாரவும் 84 பந்துகளில் 13 ஆவது சதத்தை எட்டினார்.

இந்தத் தொடரிலேயே அதிகூடிய இணைப்பாட்டமாக 200 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் சங்காவின் இலக்கு தகர்க்கப்பட இணைப்பாட்டம் பிரிந்தது. அத்துடன் இலங்கை அணி இரண்டாவது இலக்குக்காக பகிர்ந்த அதிகூடிய இணைப்பாட்டமாகவும் இந்த இணைப்பாட்டம் இடம்பிடித்தது. அதன் பின்னர் நுழைந்த பெரேரா, மத்தியூஸ் சிறிது நேரத்தில் களத்திலிருந்து வெளியேறினாலும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி கலக்கிய டில்ஷான் இறுதிக் கட்டத்தில் அதிரடியில் போட்டுத்தாக்க இலங்கை அணி 300 ஓட்டங்களைத் தாண்டியது. இறுதியில் 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டில்ஷான் இறுதி வரை ஆட்டமிழக்காது 160 ஓட்டங்களை விளாசி இந்தத் தொடரில் ஒரு ஆட்டத்தில் அதிகூடிய ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இந்திய அணி போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு செல்வதற்கான வாய்ப்பை தக்கவைக்க வேண்டுமேயானால் 40 பந்து பரிமாற்றங்களில் பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

சச்சின், சேவாக் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கி அதிரடி வேட்டையைத் தொடக்கினர். இவர்களது அதிரடியில் ஆறாவது பந்து பரிமாற்றத்திலேயே 50 ஓட்டங்களை அணி எட்டியது. எனினும் மஹ்ரூப் வேகத்தில் சேவாக்கை வெளியேற்றினார். தொடர்ந்து மலிங்க, சச்சினை வெளியேற்ற இந்தியாவின் அதிரடியின் வேகம் தணிந்தது.

கம்பீர், ஹோக்லி இருவரும் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் வரையில் மெதுவாக ஆடிப்பின்னர் அதிரடியைத் தொடக்கினர். இவர்களது வெளுத்து வாங்கல்களில் இலங்கை நொந்து போனது. 47 பந்துகளில் கம்பீர் தனது 31 ஆவது அரைச்சதத்தை கடந்தார். 164 பந்துகளில் இந்திய அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது. இலங்கை அணி பந்து வீச்சு 'பவர்பளேயை' எடுத்த வேகத்தில் கம்பீரின் இலக்கு சரிந்தது.

இருப்பினும் இந்திய அணியைப் பொறுத்த வரையில் களத்தில் தனித்து நின்று போராடிக் கொண்டிருந்தார் ஹோக்லி. போனஸ் புள்ளியுடன் வெல்வதானால் 10 பந்து



சதமடித்த சங்காவும் டில்ஷானும்

பரிமாற்றங்களில் 91 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் 31 ஆவது பந்து பரிமாற்றத்தை குலசேகர வீச 4 நான்கு ஓட்டங்கள் விளாசினார் ஹோக்லி. பந்துவீச்சு 'பவர்பளேயை' தொடர்ந்து உடனடியாகவே துடுப்பாட்ட 'பவர்பளேயை' இந்திய அணி தேர்வு செய்தது.

35 ஆவது பந்து பரிமாற்றத்தை மலிங்க வீச எதிர்கொண்ட ஹோக்லி முதலாவது பந்தில் 2 ஓட்டங்கள் தட்டிவிட்டு 76 பந்துகளில் தனது 9 ஆவது சதத்தை அடித்தார். அடுத்த ஐந்து பந்துகளில் 4 பவுண்டறிகள் ஒரு சிக்ஸர் என்று விளாச இந்தியாவின் வெற்றி 37 ஆவது பந்து பரிமாற்றத்தில் போனஸ் புள்ளியுடன் வந்து சேர்ந்தது. ஹோக்லி இறுதி வரை விளாசி இந்தியாவின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொடுத்ததால் ஆட்டநாயகனாக தேர்வானார். (ங-5)

## இலங்கை எதிர் இந்தியா

ஹோபர்ட் மைதானம்

இலங்கை 320/4 (50) இந்தியா 321/3(36.4)

இந்தியா 7 இலக்குகளால் வெற்றி பெற்றது

ஆட்டநாயகன்: விராட் ஹோக்லி

**இலங்கை**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மஹேல | c சேவாக் b ஜடேஜா | 22 | 33 | 1 | 1 |
| டில்ஷான் | (ஆட்டமிழக்காமல்) | 160 | 165 | 11 | 3 |
| சங்ககார | b பிரவீன்குமார் | 105 | 87 | 8 | 2 |
| பெரேரா | run out (சச்சின்/பிரவீன்குமார்) | 03 | 03 | 0 | 0 |
| மத்தியூஸ் | c அஸ்வின் b சகீர்கான் | 14 | 10 | 1 | 0 |
| சந்திமால் | (ஆட்டமிழக்காமல்) | 02 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | | 14 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 320 | | | |

இலக்கு இழப்பு: 1-49, 2-249, 3-279, 4-309.

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சகீர்கான் | 9 | 0 | 61 | 1 |
| பிரவீன்குமார் | 9 | 0 | 64 | 1 |
| யாதவ் | 8 | 0 | 56 | 0 |
| ஜடேஜா | 9 | 0 | 43 | 1 |
| அஸ்வின் | 10 | 0 | 52 | 0 |
| சேவாக் | 3 | 0 | 24 | 0 |
| ரெய்னா | 2 | 0 | 17 | 0 |

Sri Lanka Cricket

**இந்தியா**

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சேவாக் | c டில்ஷான் b மஹ்ரூப் | 30 | 16 | 5 | 1 |
| டெண்டுல்கர் | lbw மலிங்க | 39 | 30 | 5 | 0 |
| கம்பீர் | run out (சந்திமால்/மத்தியூஸ்) | 63 | 64 | 4 | 0 |
| ஹோக்லி | (ஆட்டமிழக்காமல்) | 133 | 86 | 16 | 2 |
| ரெய்னா | (ஆட்டமிழக்காமல்) | 40 | 24 | 3 | 1 |
| உதிரிகள் | | 16 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 321 | | | |

இலக்கு இழப்பு: 1-54, 2-86, 3-201.

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மலிங்க | 7.4 | 0 | 96 | 1 |
| குலசேகர | 8 | 0 | 71 | 0 |
| மஹ்ரூப் | 3 | 0 | 21 | 1 |
| மத்தியூஸ் | 7 | 0 | 59 | 0 |
| பெரேரா | 7 | 0 | 44 | 0 |
| ஹேரத் | 4 | 0 | 20 | 0 |

கொமன்வெல்த் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடர்

### புள்ளித் தரவரிசை - 29.02.12

| | புள்ளிகள் | நி.ஓ.சராசரி |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | 19 | 0.553 |
| இலங்கை | 15 | 0.162 |
| இந்தியா | 15 | -0.593 |

*நிகர ஓட்ட சராசரி

# இலங்கை ஒரு கேள்விக்குறி?

சீ.பி.கிண்ண முக்கோணத் தொடரில் 19 புள்ளிகளைப் பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுவிட்டது. இலங்கை, இந்திய அணிகள் தலா 15 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளன. எனினும் ஓட்ட சராசரி விகிதத்தின்படி இலங்கை அணி முன்னிலை வகிக்கிறது. இலங்கை அணி 0.162 ஓட்ட சராசரியினையும், இந்திய அணி - 0.593 ஓட்ட சராசரியினையும் பெற்றுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றால் இலங்கை அணி இறுதிக்கு தெரிவாகும். அப்போது இந்தியா தொடரிலிருந்து வெளியேறிவிடும்.

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ மழை காரணமாக கைவிடப்பட்டாலோ இலங்கை அணிக்கே இறுதிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**இரு அணிகள் சம புள்ளிகளை பெற்றால் ...**

எனினும் அந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றால் இலங்கை, இந்திய அணிகள் சமநிலையான புள்ளிகளைப் பெற்றிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகையசூழ்நிலையில் இறுதிக்கு தெரிவாகும் அணி எது என்பதைத் தெரிவு செய்வதற்கு சில விதிகள் உள்ளன.

முதலாவதாக, இரு அணிகளும் மொத்தமாக பெற்ற வெற்றிகளின் எண்ணிக்கை கருத்திற்கொள்ளப்படும். அந்த அணிகளின் எண்ணிக்கை சமநிலையில் இருந்தால் குறித்த அணிகளுக்கிடையிலான போட்டியில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணிக்கு என்று பார்க்கப்படும். அதுவும் சமநிலையில் இருந்தால் ஓட்ட வீதம் கருத்திற் கொள்ளப்படும்

தற்போதைய நிலையில் இலங்கை, இந்தியா ஆகிய இரு அணிகளும் தலா 3 வெற்றிகளைப் பெற்றுள்ளன. எனவே இந்த இரண்டு அணிகளுக்கிடையிலான போட்டியில் அதிக வெற்றிகளை பெற்ற அணிக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்தியா 2 வெற்றிகளையும் இலங்கை ஒரு வெற்றியையும் பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. இதனால் ஆஸ்திரேலியாவிடம் இலங்கை தோல்வியுற்றால் இந்திய அணிக்கே இறுதிக்கான வாய்ப்பு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

# நானா தடுத்தேன்?

சிட்னி ஆட்டத்தில்சச்சினை வேண்டுமென்றே தடுக்கவில்லை, என்று ஆஸ்திரேலியாவின் பிரட் லீ கூறியுள்ளார்.

முத்தரப்பு ஒரு நாள் ஆட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதிய லீக் ஆட்டம் சிட்னியில் நடந்தது. ஆஸ்திரேலிய வீரர் டேவிட் ஹசி ஓட்டம் எடுக்க ஓடிய போது, ரெய்னா எறிந்த பந்தை, கையால் தடுத்தார். கிரிக்கெட் விதிப்படி இது தவறு. இதற்கு ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தனர்.

பின்னர், இந்திய அணியின் சச்சின், ஓட்டம் எடுக்க ஓடிய போது, பிரட் லீ குறுக்கே ஓடி வந்து இடையூறு செய்தார். இதனால் சச்சின் ரன் அவுட்டானார். இதற்கு இந்திய அணித் தலைவர் டோனி கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து ஆஸ்திரேலிய ஊடகங்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

**டெய்லி டெலிகிராப்**

ஹோபர்ட்டில் இந்திய அணி பங்கேற்ற இன்றைய (நேற்றைய) ஆட்டம், கடைசியாக அமைந்ததற்கு கடவுளுக்கு நன்றி. சச்சின் 14 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, ரன் அவுட்டானார். பிரட் லீ தடுத்ததால் தான் இப்படி நேர்ந்தது என்று பேசி, இரக்கத்தை தேடிக்கொள்ளப் பார்க்கிறார். இவர் உலக மற்றும் இந்தியாவின் நவீன கிரிக்கெட் வீரராக இருக்கலாம். இந்தியா அதிகமான பணத்தை கொண்டு, இறுமாப்புடன் கிரிக்கெட்டின் மீது ஆதிக்கம் செலுத்தலாம். ஆனால் இதை வைத்து வெற்றியை வாங்க முடியாது. கிரிக்கெட்டுக்கு எவ்வளவு மரியாதை தருகின்றனர் என்பதற்கு, சிட்னி ஆட்டம் ஒரு உதாரணம். இந்த அணி எப்படி டெஸ்டில் முதலிடத்தில் இருந்தது? எப்படி உலகக் கிண்ணத்தை வென்றது என்பதை நம்பவே கடினமாக உள்ளது.

**சிட்னி மோர்னிங் ஹெரால்ட்**

ஹசி விவகாரத்தில் இந்தியாவின் முன்னாள் வீரர்கள் ரவி சாஸ்திரி, மஞ்ச்ரேக்கர் ஆதரவாக உள்ளனர். ஆஸ்திரேலியாவின் இயன் சப்பல்,ரொனி கிரேக் ஆட்டமிழப்புக் கொடுத்திருக்க வேண்டும் என்கின்றனர். அதேபோல, சச்சின் ரன் அவுட்டானதும் தற்செயலாக நடந்தது தான்.

**பிரட் லீ மறுப்பு:**

இதுகுறித்து பிரட் லீ, தனது 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில், இந்திய அணிக்கு எதிராக மிகப்பெரிய வெற்றி பெற்றோம். இது எங்கள் வீரர்களை பெரிதும் உற்சாகப் [illegible] சச்சின் ரன் [illegible] குறுக்கிட்டு தடுக்கவில்லை, என்று குறிப்பிட்டுள்ளார். (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை, துணவி, கிராம உத்தியோகத்தர் பிரிவு ஜே/ 159 இல் வசிக்கும் துரைராசா ரூபன் ஆகிய நான் எனது பெயரை துரைராசா குகராஜ் என 29.02.2012 புதன்கிழமையில் இருந்து மாற்றம் செய்துள்ளேன். எனவே எனது பெயர் துரைராசா குகராஜ் என இத்தால் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

தகவல்: துரைராசா குகராஜ்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியர் **க.ஸ்ரீகணேசன்** அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை கந்தையா**

அவர்கள் கடந்த (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாப ங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். அதிபர், ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை சி.விஜயறயனி அவர்களின் அன்புத் தாய்

அமரர் **தனலட்சுமி சிவசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர். (C8388)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராஜா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்-நு/பூண்டுலோயா தமிழ் வித்தியாலயம்)*
*(காரைநகர் வியாவில் சைவ வித்தியால யம், இணுவில் சைவ மகாஜன வித்தியால யம், மத்திய கல்லூரி)*



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிட மாக வும் கொண்ட கந்தையா நடராஜா 21.02.2012 அன்று காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் கனிஷ்ட புத்தி ரரும் காலஞ்சென்றவர்களான உடையார் மயில்வாகனம்-நாகம்மா தம்பதியர், காலஞ்சென்றவர்களான சின்னையா-சிதம்பரம் தம்பதி யர் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினசவுந்தரி, கணேஷ் வரி ஆகியோரின் பாச மிகு கணவரும், சிவகாமசுந்தரியின் அன்புத் தந்தையும், குமார லிங்கத்தின் அன்பு மாமனும், மயூரன் (அவுஸ்தி ரேலியா), நிரூஜன், சிவனுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22.02.2012 புதன்கிழமை கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

E.A. குரே மாவத்த, கொழும்பு-6. (15165) (6,7,10)

தகவல்: மருமகன், மகள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

### வேலுப்பிள்ளை-கந்தசாமி

(லிப்டன் கந்தசாமி)



சங்கானையை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை - கந்தசாமி கடந்த (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் இளையமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நமசிவாயத்தின் சகோதரனும், ராஜகோபால், கமலாதேவி, ஆகியோரின் சகலனும், பூமணி, குணேஸ்வரி, சிவநேசன், ஆகியோரின் மைத்துனரும், அன்னலக்ஸ்சுமி, மகேஸ்வரன், ஜெகதீசன், ஜெயராணி, திருமாள், கெங்காதரன், ஜெயதர்சினி, மயூரா, ரஜீவா, ரவீனா, ஆகியோரின் தம்பி என அழைக்கப்படும் பாசமிகு சித்தப்பாவும், உதயநேசன், மாலினி, நிர்மலா, சுரேஸ், தயாளினி, பாலேஸ்வரன், ரமேஸ், அன்பழகன், ஆகியோரின் பாசமிகு மாமனும், ஆரதி, அரிஸ், ராகுல், அர்ஜின், அனுசன், அஞ்சலன், அபினாஸ், சிவானுஜன், சரண்றாஜ், கஜானன், ஜசிகன், திரிஷா, அஜி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2012) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது வடலியடைப்பு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கனை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு. தகவல்: மனைவி, பெறாமக்கள்

## அரியாலை ஐக்கியத்தின் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அரியாலை அபிவிருத்திச் சங்க லண்டன் கிளையின் ஆதரவுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழ கம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வியாழக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல்நாள் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது.

5 மணிக்கு குருநகர் பாடும்மீன் நீலம் எதிர் வளர்மதி விளையாட்டுக்கழகம். (த-23)

## கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் .பெப் .29

யாழ். கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத் தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-23)

***

கோப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 9 ஆம் , 10ஆம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## இன்றைய உதைபந்தாட்டம்

வலிகாமம், யாழ். உதை பந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஏஎல் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஒன்பது பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை அராலி ஏஎல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணி களின் விவரம் வருமாறு-

பிற்பகல் 4 மணி

சென்றோக் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

## துர்க்கா சம்பியன்

தென்மராட்சிப் பிரதேச வலைப்பந்தாட்ட சம்பியனாக, கொடிகாமம் துர்க்கா விளையாட்டுக் கழகம் தெரிவாகியுள்ளது. பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இறுதிப் போட்டியில் கொடிகாமம் துர்க்கா வி.க.அணியும், சாவகச்சேரி இந்து வி.க. அணியும் களத்தில் இறங்கின. (த-9)

## கே.ஸி.ஸி.ஸி,ஜொலிஸ்ரார் ஆட்டங்களில் வென்றன

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மத்திய கல்லூரி யில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்களின் அனுசரணையுடன், யாழ். சென்றல் விளை யாட்டுக் கழகமும், யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத் தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி. ''ஏ'' அணியும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி ''ஏ'' அணியை எதிர்த்து கோப்பாய் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி ''ஏ'' அணி 54:40 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரர் ''ஏ'' அணி மோதிக்கொண்டது. இதில் ஜொலிஸ்ரர் ''ஏ'' அணி 37:32 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)


மோட்டர் விற்பனைக்கு

[illegible] Phase 10 HP 25 HP England Made மோட்டர் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : 077 8330024


## கலாஜோதி வென்றது

இணுவில். பெப்.29

இணுவில் வடகிழக்கு கலா ஜோதி விளையாட்டுச் கழக மும் உரும்பிராய் வடக்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் கடந்த 21 ஆம் திகதி சினேகதபூர்வ உதைபந்தாட்டப் போட்டியொன்றில் மோதின. அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றிய இப்போட்டி இணுவில் கலாஜோதி விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கலாஜோதி விளை யாட்டுக்கழகம் 5-4 என்ற அடிப்படையில் இப்போட்டியில் வெற்றி பெற்றது .

(த-45)

## துயர்பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி.லலிதாதேவி ஜெயகோபால் அவர்களின் அன்புக்கணவர்

**திரு.இராசையா ஜெயகோபால்**

நேற்று (27.02.2012) திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் துயர்பகிர்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், சங்கானை. பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.


# KIRUBA LEARNERS

கே.கே.எஸ். வீதி, மதவடி முன்பாக, சுன்னாகம்

0212242022 - 0714546956 - 0777225292

யாழ்.மண்ணில் முதன் முதலாக கிருபா லேணர்ஸ் அறிமுகப்படுத்தும் அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உள்ளக சாரதி பயிற்சி நெறி




## கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை)

இவ் இயந்திரம் நிஜமான வாகனத்தில் பயிலுவதைப் போன்ற உணர்வை அளிப்பதுடன் பல்வேறுபட்ட வீதிகள், போக்குவரத்து நிலவரங்கள், வித்தியாசமான காலநிலைகளில் வாகனம் செலுத்துவதற்கான பயிற்சியினை பயிற்சி நிலையத்துக்குள்ளே பெற்றுக்கொள்வதால் எந்தவித பயமோ தயக்கமோ இன்றி தன்னம்பிக்கையுடன் வீதிகளில் பயிற்சி பெறமுடியும்


## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி தர்மலிங்கம்



கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தர்மலிங்கம் நேற்றுமுன்தினம் (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயசோதி, ஈஸ்வரபாதம், பரஞ்சோதி மற்றும் மனோகரி (பருத்தித்துறை), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளினி (பிரான்ஸ்) தயாளன் (மலேசியா), தபேசன் (பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரசேகரின் (பிரான்ஸ்) பாசமிகு மாமியும், பிரவீனாவின் (பிரான்ஸ்) பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறையில் உள்ள அவரது சகோதரி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] (C/8394) தகவல்: த.தபேசன் (மகன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி

1 டொலரின் மதிப்பு நேற்றுக் காலை மேலும் 2 ரூபாவினால் அதிகரித்தது. கடந்த வெள்ளிக்கிழமை, அமெரிக்க டொலர் ஒன்று 120 ரூபாவாக இருந்தது.

முன்னெப்போதும் இல்லாதளவுக்கு சிறிலங்கா ரூபாவின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், எரிபொருள் உள்ளிட்ட இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையே, டொலரின் பெறுமதி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை வங்கி தனது கையிருப்பில் இருந்த ஒரு தொகுதி டொலரை 123 ரூபாவுக்கு விற்பனை செய்து டொலரின் பெறுமதியை 121 ரூபாவுக்குக் குறைத்தது என்று நாணயமாற்று வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். தனது பெயரை வெளியிட அவர் விரும்பவில்லை.

''இலங்கை வங்கி 123 ரூபாவுக்கு டொலரை விற்று மெல்ல மெல்ல 121 ரூபாவுக்குக் குறைத்தது'' என்று அவர் கூறினார். வேறு மூன்று வர்த்தகர்களும் இதனை உறுதிப்படுத்தினார்கள்.

அதேவேளை, நாணயமாற்று வர்த்தகர்கள் சிலரைத் தொடர்பு கொண்ட மத்திய வங்கி, டொலரின் பெறுமதியை 121 ரூபாவுக்குக் குறைக்கும்படி அறிவுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டொலரின் பெறுமதியை நிர்ணயிப்பதில் இலங்கை மத்தி வங்கியின் தலையீடு இனிமேல் இருக்காது என்று வழங்கப்பட்ட உறுதிமொழியை இது மீறுவதாக இருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

டொலருக்கு எதிரான ரூபாவின் இந்தப் பெறுமதி வீழ்ச்சி தற்காலிகமானது என்றும் உடனேயே அது நிமிர்ந்துவிடும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். ஆனால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த இலங்கை வங்கி தலையிட்டமை குறித்து கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

''இது அளவுக்கு மீறிய வெளிப்பாடு. விரைவில் சரியாகிவிடும். நிலைமையைச் சரியாக்க நாங்கள் ஏதாவது செய்வோம்'' என்றார் கப்ரால். (உ-01)

## அறிவித்தல்

***2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் (9) (1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.***

**கம்பனியின் பெயர் :** சாரங்கா மனி எக்ஸ்சேஞ் (பிறைவேற்) லிமிட்டற் (Sharangaa Money Exchange (pvt) Ltd)

**கம்பனியின் இலக்கம் :** PV 75134

**கூட்டிணைக்கப்பட்ட திகதி :** 28.10.2010

**பதிவு செய்யப்பட்ட விலாசம் :**

இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கம்பனி இயக்குநர்.**

## இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரிக்கும்

1 இடம்பெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்துவதை ஒன்றியம் ஊக்குவிக்கும் என இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ங-சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 * 06 * 1931 இறப்பு 15 * 04 * 2010

*பொன்னுச்சாமி தங்கராசா*



பிறப்பு 03 * 03 * 1938 இறப்பு 10 * 02 * 2011

*தங்கராசா அன்னலட்சுமி*

பாசமாய் பெற்றெடுத்து
பாரினில் வளர்த்தவரே
ஆசையாய் முத்தமிட்டு
அன்புமொழி சொன்னவரே
நீண்ட தூரம் சென்றீரோ
நினைவிழந்து அழுகின்றோம்
ஆண்டொன்று சென்றதுவோ - உம்
அன்பு மொழி கேட்டிங்கு
மீண்டும் ஓர் பிறப்பெடுத்து
எம் உறவாய் வாறீரோ?

சண்டிலிப்பாய் வடக்கு. — பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### அமரர் கந்தசாமி சரஸ்வதி



தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சரஸ்வதி நேற்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல் :
க.மகேந்திரன் (மோகன், மகன்)

(15182)

### சோமசுந்தரக்குருக்கள் மகாகணபதிக்குருக்கள்

(நல்லூர் தேவஸ்தான முன்னாள் பிரதம குரு)



இளவாலை சித்திரமெளலியைப் பிறப்பிடமாகவும், யாழ். திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரக்குருக்கள் மகா கணபதிக்குருக்கள் (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் - அனந்தாம்பாள் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமிக்குருக்கள் - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அனபுக்கணவரும், மகேஸ்வரி(கனடா), ஸ்ரீரங்கநாதசர்மா (கனடா), நகுலேஸ்வரி (ராதா-கனடா), குகராஜசர்மா (சுவிஸ்), குமரேசசர்மா (கனடா), குகவர்த்தனசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சித்திராங்கி, மற்றும் பாலசுப்பிரமணியக்குருக்கள், காலஞ்சென்ற நடராஜக்குருக்கள் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சோதிநாதசர்மா, காலஞ்சென்ற நேசமணி அம்மா மற்றும் விஜயகுமாரி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாமாதேவி சுகுமாரன், வாணி, அமன், செல்வி ஆகியோரின் அன்பு மாமனும் சிவகெளரி, சிவப்பிரியா, மயூரன், சுஜீபன், சிந்துஜா, செளம்யா, சாரங்கா, கிருஷ்ணா, அரிஷ், யது, தரண், ப்ரீத்தி, லவன், ஆகியோரின் அன்புத்தாத்தாவும், சஞ்சீவன், சஞ்ஜனா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.03.2012) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்


PATHE ACADEMY

யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக
PATHE Academy & Park Hospital மற்றும் UNI ICT Campus வழங்கும்
கீழ்வரும் உயர் மருத்துவ பட்டப்படிப்பு மற்றும் ஹோட்டல் நிர்வாக கற்கைநெறிகள் யாழ் மாவட்டத்தில் ஆரம்பம் !!!

HND in MLT (Medical Laboratory Technology)
Study Modules :-
* Chemical Pathology * Parasitology * Microbiology * Blood Bank Serology * ICT Training * Anatomy & Physiology * Hisopathology * Haematology * Laboratory Management * Laboratory Management * Practical & Internship
Admission Criteria :- G.C.E.A/L Pass in Chemistry or Equivalent qualification. Durations - 18 Months.
Academic Coordinator :- Mr.R.M.R.Ranaweera (Former Principal of MLT School Peradeniya)

HND in Radiography (X - Ray Technology)
Study Modules :-
* Medical English * Anatomy, Physilogy * X-ray Production * General Radiation * Radiation Protection * Equipments * Radiography Techniques * Imaging * Diagnostic Radiography * Imaging process ECG * ICT Training * Practical & Internship
Admission Criteria :- G.C.E.A/L Pass in Physics or Equivalent qualification. Durations - 18 Months.
Academic Coordinator :- Mr.Balasooriya M.Sc (15 Years of University Teaching Experience)

HND in Physiotherapy
Study Modules :-
* Musculo- skeletal system * Anatomy, Physilogy * Kinesiotherapy * Fractures and Splints * Manipulative Procedure * Clinical Scenarios in Physiotherapy * Physical Education & Instrumental Physiotherapy * Psychological aspects of patient care * Electrotherapy, Arthrotherapy & Hydrotherapy * Practical & Internship
Admission Criteria :- G.C.E.A/L Pass in Bilogy or Equivalent qualification. Durations - 18 Months.
Academic Coordinator :- Mr.Kumar de silva (Consultant Physical Therapist)

HND in Pharmacy (மருந்துக் கலவையாளர் பட்டப்படிப்பு)
Study Modules :-
* Forensic Pharmacy * Pharmaceutics * Human Anatomy * Pharmacology * Pharmacognosy * Pharmaceutical management * Pharmaceutical Ethics * Pharmaceutical Marketing * Practicals and Internship * Chemistry
Admission Criteria :- G.C.E.A/L Pass or Equivalent qualification. Durations - 18 Months.
Academic Team :- Mr.S.Kandaswamy (Superintendent Pharmacist N.D.Q.A.I.)
Mr.M.Sadaruwan (Government Pharmacy Examiner)

Dip.Medical Science (Foundation Level)
Study Modules :-
* Bio physics * Physical chemistry * Organic chemistry * Bio Chemistry * Human Biology * Medical English
100%
Admission Criteria :- G.C.E.O/L Pass or Equivalent qualification.
Academic Coordinator :- Prof.S.V.Parameswaran (Dean. Faculty of Medical Science)

HND in Nursing (தாதியர் பட்டப்படிப்பு)
Study Modules :-
* Fundamentals of Nursing * Anatomy, Physilogy * Health Education * Micrabiology * History and Trends in Nursing * Introductory Psychology * Introductory Sociology * Nursing ethics * Pharmacology * Nutrition and Dietetics * Pathology * Practical & Internship
Admission Criteria :- G.C.E.O/L Pass or Equivalent qualification. Durations - 18 Months.
Academic Coordinator :- Mrs.Sumana Perera (Former Director of Nurses (Ministry of Health)

ஹோட்டல் நிர்வாக பட்டப்படிப்புக்கள்
Diploma in Hotel Management
Ad/Diploma in Hotel Management
Ad/Diploma in Tourism Management (Confederation of Tourisim, and Hospitality CTH (UK) Certificates)

DIPLOMA IN HUMAN RESOURCE MANAGEMENT - ABE - UK Certificates
HIGHER/GRADUATE DIPLOMA IN BUSINESS MANAGEMENT - ABE - UK Certificates
Diploma In Health Care - City & Guilds Certificate in First Aide & Emergency Treatment
(உங்கள் பதிவுகளுக்கான இறுதி திகதி - 07/03/2012)

Our International Affiliations :- City & Guilds CTH TOEFL BRITISH COUNCIL BCS edexcel

The HND Offered is Registered under Ministry of Vocational & Technical Training - Tertiary and Vocational Education Commission. For those who wish to migrate or travel to work Abroad we recommend to visit the Ministry of Foreign Affairs consulate section where your PATHE Diploma is attest by Sri Lankan Government [illegible] your HND.

எமது HND கற்கை நெறியை பூர்த்தி செய்தோர் உடனடியாக தொழில் வாய்ப்பை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பெற்றுக் கொள்ள முடிகின்ற அதேவேளை, இந்திய அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பட்டத்தினையும் இலகுவாக எம்மூடாக பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் : UNI ICT Campus and PATHE Academy (North Regional Office)
No :83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P : 021 321 6433 / 0777 110 862 / web :www.patheacademy.org (Branch :- Manipay)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணை; போராட்டம் நடத்த அரச ஊழியருக்கு நிர்ப்பந்தம்

1 கள் அமைச்சின் கீழ் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் பேரணியாக சென்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி கோயில்களில் பூசை நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் அரச அதிபர்களுக்கான கலந்துரையாடலொன்று நேற்று ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் அரச அதிபர்களுக்கு வாய்மொழி மூலம் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி ஒவ்வொரு பிரதேச செயலர்களும் தமக்கு அருகில் உள்ள கோயில்களுக்கு சென்று பூசை வழிபாட்டில் ஈடுபட வேண்டும். அத்துடன் கோயிலுக்குச் செல்லும் போது பிரதேச செயலகங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள்,

''பயங்கரவாதத்தை ஒழித்த ஜனாதிபதிக்கு துணைநிற்போம்''

"மனிதஉரிமையையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்போம்''

என்னும் சுலோகங்களை தாங்கியவாறு செல்ல வேண்டும் என்றும் அமைச்சின் செயலர் பணித்திருக்கின்றார்.

இதன் பின்னர் யாழ். மாவட்ட அரச அதிபரினால் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்களுக்கும் தொலைபேசியூடாக மேற்படி அறிவித்தல் வழங்கப்பட்டது. அத்துடன் மும்மொழியிலும் எழுதப்பட்ட மேற்படி கோஷங்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு இணைப்புக் கடிதம் இல்லாமல், அனுப்பப்பட்டிருந்தன.

இன்று மாலை 3.00 மணியளவிலேயே கோயில்களில் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், வடக்கிலுள்ள அரச திணைக்கள பணியாளர்களை ஆர்ப்பாட்டம் நடத்த வருமாறு பணித்திருக்கும் நடவடிக்கையானது சட்டவிரோதமானது என்றும் இது குறித்து தாம் நீதிமன்றத்தை நாடப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரச உத்தியோகத்தர்களை கடமை நேரத்தில் குழப்புவது குற்றமாகும். அவர்களுடைய பணியை செய்யவிடாமல் தடுத்தால் அது சட்டவிரோதமான செயற்பாடு. இவ்வாறு அவர்களின் பணியைக் குழப்பும் வகையில் சுற்று நிருபம் அனுப்பப்படுமாக இருந்தால் அது சட்டவிரோத செயற்பாடு மாத்திரமல்லாமல் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.

இவ்வாறு செய்வதானது மிகமோசமான அதிகார துஷ்பிரயோகம். இப்படியான அதிகார துஷ்பிரயோகம் இலங்கையை ஒரு நாளும் ஆசியாவின் அதிசயமாக்காது மாறாக ஆசியாவின் அவலமாகவே மாற்றும். இது இலங்கையை இன்னும் மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் செயற்பாடாகும் - என்றார்.

(உ-10-05)

# ஜெனிவாவில் மீண்டும் துரோகம் இழைக்காதீர்

1 யின் அந்தப் பழி, பாவம் உங்களைச் சும்மா விடாது.''

- இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியுமான வைகோ நேற்றுக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார் என்று வெளியான தகவலை அடுத்தே வைகோ இந்தியப் பிரதமருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு-

இலங்கை அரசு ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்வதற்கு அனைத்துவிதமான ஆயுத உதவிகளையும், நிதியையும் அள்ளிக்கொடுத்ததுடன், இராணுவ உதவிகளையும் இந்திய அரசு செய்தது. இது உலகத் தமிழர்களின் நெஞ்சில் ஆறாத ரணத்தையும், தாங்கமுடியாத துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த மூன்று உறுப்பினர்களைக்கொண்ட நிபுணர்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக இலங்கை அரசு தனக்குத்தானே ஒரு விசாரணைக்குழுவை (நல்லிணக்க ஆணைக்குழு) நியமித்துக்கொண்டது. அந்தக் குழு அனைத்து உண்மைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, 'கோயபெல்ஸ்' பாணியில் இலங்கை அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டு மே மாதம் இரண்டு மற்றும் மூன்றாவது வாரங்களில் நடைபெற்ற கொரடூரமான படுகொலைகளுக்குப் பின்னர் ஜேர்மனியின் முன்னெடுப்பில் பதினாறு நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தை ஜெனிவா நகரில் கூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. அக்கூட்டம் 2009 மே மாதம் கடைசி வாரம் நடைபெற்றது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் போர்க்காலத்தில் இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இந்தியா பெரிதும் உதவியது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை, தமிழ் இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மன்னிக்க முடியாத துரோகமாகும்.

இப்போது உலக நாடுகளின் மனச்சாட்சி விழித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது.

எனவே, பெப்ரவரி 27ஆம் திகதி ஜெனிவா நகரில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசின் போர்க்குற்ற நடவடிக்கைகளை விசாரிப்பதற்கான ஒரு பிரேரணையை அமெரிக்காவும், மேலும் பல நாடுகளும் மேற்கொண்டுவருகின்றன.

இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் இனக்கொலை நடவடிக்கைகளை விசாரிப்பதற்கான அத்தகைய ஒரு பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்கவேண்டும். இலங்கை அரசுக்கு எவ்வித ஆதரவும் அளிக்கக்கூடாது என்று (நேற்று முன்தினம்) நான் தங்களுக்கு ஏற்கனவே எழுதியுள்ள பல கடிதங்களில் கேட்டுக்கொண்டுள்ளேன்.

ஆனால், 27ஆம் திகதி மஹிந்த சமரசிங்க என்ற இலங்கை அரசின் பிரதிநிதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடைபெறவிருக்கின்ற மிக முக்கியமான வாக்குப்பதிவில், ''இந்தியா, இலங்கை அரசை ஆதரிக்கும்'' என்று தெரிவித்திருப்பது பேரதிர்ச்சியாக உள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே. காந்தா இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த 26ஆம் திகதி நேரில் சந்தித்து ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும் என உறுதியளித்து இருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இது உண்மையாக இருக்குமானால், இந்த நடவடிக்கை, ஈழத் தமிழர்களுக்கு எதிராக இந்தியா செய்கின்ற மன்னிக்க முடியாத துரோகமாகும்.

ஈழத் தமிழர்களின் படுகொலையால், தமிழகத்திலும், உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் இதயத்தில் குருதி வடிந்துகொண்டு இருக்கின்றது.

உலக நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் இலங்கை அரசு நிறுத்தப்படுவதைத் தடுக்க இந்தியா முயற்சிகளை மேற்கொள்ளுமானால், இலங்கையில் நடைபெற்ற தமிழ் இனப் படுகொலைக்கு இந்தியாவும் பொறுப்பு. கூட்டுக் குற்றவாளி என்ற நிலைமையே ஏற்படும்.

ஏற்கனவே காயப்பட்டுப் புண்ணாகி இருக்கின்ற தமிழர் நெஞ்சில் மேலும் தீ வைக்கின்ற எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாதீர்கள் என வேண்டுகிறேன்.

ஜெனிவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாதீர்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ங-சி)

# மக்களை அச்சுறுத்தி சர்வதேசத்திடம் நாட்டைக் காட்டிக் கொடுத்தது அரசே

1 நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளது. நமது நாட்டில் சர்வதேசத்தின் தலையீடுகளுக்கு இடமளிக்கமாட்டோம் என்று அரசு கூறியது. அப்படியாயின், தற்போது ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக் குழு அமர்வில் மஹிந்த சமரசிங்க கூறியது என்ன?

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கேள்வியெழுப்பினார்.

சர்வதேசத்தின் எதிர்ப்புகளை முறியடிப்போம் என நமது நாட்டிலிருந்து 52 பேர் அடங்கிய குழுவினர் சொகுசுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய ஜெனிவா சென்றிருக்கின்றனர்.

இவர்களது ஆடம்பரமான செலவுகளுக்கான பணத்தையும் மக்களே செலுத்தவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்விற்காக நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஓர் உறுதிமொழியை அரசு வழங்கவில்லை. தற்போது ஜெனிவாவில் மஹிந்த சமரசிங்க, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறுகின்றார். இவரது இந்தக் கருத்தின் மூலம் அரச தரப்பின் உண்மையான நிலைப்பாடு என்ன என்றே எமக்கு விளங்கவில்லை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று (நேற்று முன்தினம்) அரசால் நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பொதுமக்களுக்குப் பணம் கொடுத்தும், அரசசேவையாளர் க்ளைக் கட்டாயப்படுத்தி யும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடச் செய்துள்ளனர்.

எனினும் டலஸ் அழகப்பெரும, ''நாம் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிர்ப்பு இல்லை'' என்று இந்த ஆர்ப்பாட்டங்களின் போதுகூறினார். ஜெனிவாவில் மஹிந்த சமரசிங்க ஒரு கருத்தையும், இங்கு டலஸ் அழகப்பெரும இன்னொரு கருத்தையும் கூறுகின்றனர். இதுபோன்ற மாறுபட்ட கருத்துகளின் மூலம் நாட்டையும், நாட்டு மக்களையும் அரசே சர்வதேசத்திடம் காட்டிக்கொடுத்துள்ளது.

நாம் ஜனாதிபதியையும், இராணுவத்தினரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் குற்றவாளிகளாக நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றோம் என அரசு எம்மீது பழி சுமத்தியது. ஆனால், தற்போது அரசினது கபட நாடகங்களின் விளைவாக அரசே ஜனாதிபதியையும், இராணுவத் த்ளபதியையும் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்துள்ளது.

எமது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து அரசினது நிலைப்பாட்டை எமக்குத் தெரியப்படுத்துமாறு கோரி கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு அரசிடமிருந்து இதுவரை யில் எந்தப்பதிலும் வரவில்லை. நாம் நல்லிணக்க ஆணைக் குழு தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன எனக் கேட்டபோது, மௌனம் காத்து எம்மை விரோதிகள் எனச் சாடிய அரசு, தற்போது ஜெனிவாவில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறுகிறது. அப்படியாயின், ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தொடரை துரும்பாகப் பயன்படுத்தி அரசு நாட்டு மக்களைப் பயங்கரமானமுறையில் அச்சுறுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடு மூலம் நமது நாட்டுப் பிரச்சினைகளில் சர்வதேசம் தலையிடுவதற்கு அரசே வழிவகுத்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறை மூலம் ஒடுக்கிய அரசு தற்போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்காகப் பொதுமக்களுக்குப் பணம் கொடுத்தும், அரச சேவையாளர்களைக் கட்டாயப்படுத்தியும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துகின்றது. இது தவறு.

அரசின் இதுபோன்ற செயற்பாடுகளின் காரணமாகவும், அரச தலைவர்களின் மாறுபட்ட கருத்துகளின் காரணமாகவும், எமக்கும் சர்வதேசத்திற்கும் அரசு மீது இருந்த நம்பிக்கை இல்லாது போயுள்ளது - என்றார். (ங-சி)

# அமெ. பிரிட்டன் ராஜதந்திரிகள் 20 பேர் ஜெனிவாக் களத்தில்

1 விவகாரத்தில் வோஷிங்ரன் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் கொழும்பில் விளக்கியிருந்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி அவர் ஜெனிவாவில் இலங்கை விவகாரம் குறித்து உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. தனக்கு எதிரான பிரேரணை குறித்து இலங்கை அரசு மேற்கு நாடுகளுக்கும் ஐ.நாவுக்கும் எதிராகக் காட்டும் வெளிப்பாடுகள் குறித்து வோஷிங்ரன் ஆத்திரமுற்றுள்ளதாக வெளியாகும் தகவல்களின் பின்னணியிலேயே ஒரேரோவின் ஜெனிவாப் பயணமும் இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளின் பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்குப் பதிலடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முதல் உலக நாட்டுத் தலைவர்களுடன் தொலைபேசி ஊடாக நேரடியாகத் தொடர்பு கொண்டு இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான உறுதி மொழியைப் பெறும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மலேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாட்டுத் தலைவர்களுடன் உரையாடிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தமது நாடுகள் எதிர்க்கும் என்ற உறுதிமொழியைத் தலைவர்கள் வழங்கியுள்ளனர்.

அத்துடன், குறித்த நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் ஜெனிவாவில் முகாமிட்டுள்ள அரச குழுவிடம் இதே உறுதிமொழியை வழங்கியிருக்கின்றனர் என ஜெனிவாவிலுள்ள பிரதிய மைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

பிரேரணையை எதிர்ப்பதாகக் கட்டார், சவூதி அரேபியா, மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் தம்மிடம் உறுதியளித்தன என ஹிஸ்புல்லா பிரதியமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா கொண்டுவருவதனால் மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பல அமெரிக்க சார்புப் போக்கையே இறுதி வேளையில் கடைப்பிடிக்கக்கூடும் என்ற தமது எதிர்பார்ப்பை அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் ‘[illegible]’ [illegible] தார். [illegible] பயன்படுத்தக்கூடாது என்று அவர் நிபந்தனை விதித்தார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்காவே முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 5ஆம் திகதி குறித்த பிரேரணை முன்வைக்கப்படலாம் எனக் குறிப்பிட்ட அந்தப் பிரமுகர், அமெரிக்காவே இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதால் பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவான தமது கொள்கையை மறுபரிசீலனை செய்யலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐரோப்பிய நாடுகள் முழுவதும் ஆதரிக்கவுள்ளன என்பதை உறுதிபடச் சுட்டிக்காட்டிய அவர், எனினும் இதுவரை இலங்கைக்கு எதிரான போக்கு [illegible]இல்லை என்றும் தெரிவித்தார். (உ-01-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலம்

ஒரு மணிநேர இலவச கற்கைநெறி

**29.02.2012 புதன்கிழமை**

1 : காலை 8.00 – 9.00  2 : காலை 10.00 – 11.00
3 : மாலை 3.00 – 4.00  4 : மாலை 5.00 – 6.00

அனுமதி இலவசம், பயிற்சி புத்தகம் இலவசம்
பயிற்சிக்கான சான்றிதழ் இலவசம்

(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)
இந்த விளம்பரத்துடன் வகுப்புக்கு வரும் அனைவருக்கும்
ஆங்கில கற்கைநெறிக்கான CD முற்றிலும் இலவசம்

**MyWay English**
ஸ்ரேசன் வீதி, நகரசபை அருகில்
சாவகச்சேரி
077 33 63 456



GET QUALIFIED IN
MARKETING
WHILE YOU ARE
WORKING

**SLIM**
• PCM
• PG Diploma in Marketing

இத் தனித்துவம் மிக்க
சந்தைப்படுத்தல் கற்கை நெறி
உங்கள் துறைசார் திறன், தகுதி,
தராதரத்தை உயர்த்திக்
கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை
ஏற்படுத்தி தருகின்றது

புதிய பிரிவு ஆரம்பம்:
03/03/2012
காலை 10.00 மணி

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:info@iis.edu.lk Web: www.iis.edu.lk


# தகராறைத் தடுக்க முயன்றவர் தலையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 29.

காணிப்பிரச்சினை தொடர்பாக உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறைத் தடுக்க முயன்றவர் தலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டும், கையில் வாளினால் வெட்டப்பட்டும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் யாழ். திருநகர் இராஜசிங்கம் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ். குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த அருளானந்தம் நியூட்டன் (வயது-35) என்பவரே படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பாக யாழ்.. பொலிஸ் நிலையத்தில் மூன்றுபேருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அயல் வீட்டுக்காரர்களான இந்த உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறு பற்றிக் குருநகரிலுள்ள பிரஸ்தாப நபருக்கு அறிவிக்கப்பட்டது. அதனைச் சமரசப்படுத்தும் நோக்கில் இவர் செயற்பட்டபோது இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் அவர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-04)

# சர்வதேசத்துக்கு அடிபணியோம்

1 இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேற்கத்தேய சக்திகளின் பிரிவினைவாத நோக்கத்தை முறியடிப்பதற்கு ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுவதற்கு - சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தீர்மானித்துள்ளன.

நாட்டில் மலர்ந்துள்ள சமாதானத்தைப் பிடுங்கி எடுப்பதற்கு எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கப்போவதில்லை, உலகில் முறியடிக்க முடியாது என வர்ணிக்கப்பட்ட புலிகள் அமைப்பையே தோற்கடித்துக் காட்டியவர்கள் நாங்கள்.

புலிகள் வீழ்ச்சியுற்றபின்னர் வடக்கில் தனியான ஆட்சி அலகொன்றை அமைப்பதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன.

மனிதாபிமான நடவடிக்கைகளைமுன்னெடுத்து, வடக்கு, கிழக்கு மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி சமைத்துக் கொடுத்த இலங்கை அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது மீண்டும் பிரிவினைவாத, தீவிர வாதத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியாகும் -என்றார். (ஙு-சி)

# பனங்கள்ளு இறக்கம் இனி ஏறும் 'கிக்'

அத்தியாவசியப் பொருள்கள் நாளாந்தம் உயர்ந்து வரும் அதே சமயம் பனங்கள்ளின்விலை நாளை முதலாம் திகதி தொடக்கம் போத்தலுக்கு 10 ரூபாவால் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பனங்கள்ளு நாளை தொடக்கம் 40 ரூபாவாகக் குறைக்கப்படுகிறது.

பனங்கள்ளு சீசன் ஆரம்பமானதையிட்டு கள்ளின்விலைகுறைக்கப்பட்டுள்ளது என்றும் தென்னங்கள்ளின் விலையில் மாற்றம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)


**விற்பனைக்கு**

253-xxx இலக்கமுடைய ஹயஸ் வான் 113 நீள மொடல் super GL,96 மொடல் 13sri-xxxx இலக்கமுடைய Box மொடல் மிற்சுயி லான்சற் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு 0777238615



**தவறிவிட்டது**

வரதராசன் கிரிஷாந் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (920823580V), காப்புறுதிப் பத்திரம், வாகன அனுமதி அட்டை, வாகன வரிப்பத்திரம் என்பன கைப்பையுடன் (பேஸ்) சண்டிலிப்பாய்க்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0750485132



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 05.03.2012 | Batch II:10.03.2012 | Batch III :13.03.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Quick Learning Course** 1½ Months
(Spoken English with Grammar)

**Diploma In English** 2½ Months

✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS** (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4[illegible] / 077[illegible]



**விற்பனைக்கு**

JC-XXXX இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள டொல்பின் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770500388, 0775166621 (சோலைத் தெரு)



**கிருபா லேணர்ஸ் சுன்னாகம் கிளை**
**கோலகலமாக**
யாழ். அரச அதிபர்
**திருமதி இமெல்டா-சுகுமார்**
அவர்களால் 29.02.2012 புதன்கிழமை மு.ப 10 மணிக்கு
திறந்து வைக்கப்படவுள்ளது

பிரதம விருந்தினர்கள்
திருமதி இமெல்டா சுகுமார்
யாழ். மாவட்ட அரச அதிபர்

சிறப்பு விருந்தினர்கள்
திரு.M.நந்தகோபால்
(உடுவில் பிரதேச சபை செயலாளர்)
திரு. T.இந்திரன்
யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்
திரு.G.D.R கங்கநாத்
(சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி)
திரு. R.ஜெயசேகரன்
(யாழ். வர்த்தக சங்கத் தலைவர்)

கௌரவ விருந்தினர்கள்
திரு. T.பிரகாஸ்
வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர்
திரு பண்டாரா
(போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை செல்வராஜா



இல.14, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வராஜா நேற்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாகம்மா தம்பதியரின் மகனும், தவமணி, துரைஐயா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் உடன் பிறவாச் சகோதரரும், இராமலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், இரகுநாதன் (ஜேர்மனி), புனிதவதி, விஜயநாதன் (சுவிஸ்), கலாவதி, செல்வநாதன் (டென்மார்க்), திலகவதி (பிரான்ஸ்), இரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் மாமனும், சிவபாலன், காலஞ்சென்ற சிவரமணி மற்றும் சிவரோகினி, சிவநந்தினி, அனுசியா, தர்சினி ஆகியோரின் சிறிய தகப்பனும், பிரஷாந் (சிற்றி மெடிக்கல்), பிந்துஜா (HNDA, 3rd year), சந்திரிகா, ஜனனிகா, லாவன்யண், விதுஷனா, அரண், இந்துஜா, சாருஜா, விதுஷன், விபுஷன், கோபிஷாந், விஸ்னுகாந், கம்சிகா, கிருதிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கலாபவனம்"
14, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கலா யோகராஜா (மருமகள்).

## சந்திரன் நாகம்மா



கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்திரன் நாகம்மா நேற்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் சரஸ்வதி யின் சகோதரியும் நாகேஸ்வரன் (ஜேர்மனி), சதீஸ் வரன் (வரன்), தனுசன் ஆகியோரின் அன்புத் தாயும் சுமதி (ஜேர்மனி), கனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2012) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறி வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல் :
தனுசன் (மகன்)

(15183)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலம் உற்றதே தீய ஒழுக்கமாகும். அதைவிடுத்து சுயநலம் அற்றதே நல்லொழுக்கம். எனவே என்னிலையிலும் சுயநலத்தை மறக்கவே பழகு.
-விவேகானந்தர்

# புதன் பொய்கை A

உதயன் 29 பெப்ரவரி 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு



# கற்பவரும் கற்பிப்பவரும் ஆசிரியரே!

ஆசிரியர் என்ற பதத்திற்கு, குற்றங்களை களைபவர் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. எனவே மாணவர்களிடையே காணப்படுகின்ற அறியாமையாகிய குற்றத்தை நீக்கி, அறிவை ஊட்டுபவர் ஆசிரியர் ஆவார். நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு சமூகத்தையோ நற்பிரஜைகளையோ உருவாக்கிக் கொள்ள முடியாது. ''இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள்'' அவர்களை ஆளுமையுள்ளவர்களாக ஆக்குபவர் ஆசிரியர் என்பதனை இக்கருத்து வலியுறுத்துகின்றது. பிள்ளைகளுடைய ஆர்வத்தை அளந்து, திறனைத் தெரிந்து, கவனத்தைக் கவர்ந்து, கருத்தைக்கூறி கல்வியறிவை அவர்களுக்கு ஊட்டுபவர்கள் அவர்களே. சிறுவர்களின் வாழ்வைச் செழிப்படையச் செய்வதுடன், அவர்களின் ஆற்றல்களையும் கட்டியெழுப்ப வேண்டியவர்கள். 'ஆசிரியர்களே'. நமது நாட்டின் சிறுவர்களின் எதிர்காலம் நமது வகுப்பறைகளிலே கற்பிக்கும் ஆசிரியர்களாலேயே சீரமைக்கப்படுகின்றது.

மருத்துவர், வழக்கறிஞர் போன்ற சேவை செய்பவர்களுடன் மக்கள் எல்லோரும் எப்போதும் உறவு கொள்வதில்லை. நோயுற்றபோது மருத்துவரிடம் செல்கின்றோம். நோயற்றபோது அவரை நினைப்பதில்லை. அவர்பற்றி அக்கறை கொள்வதுமில்லை. அதேபோல வழக்கு ஒன்றினைத் தீர்த்துக் கொள்ள வழக்கறிஞரை நினைக்கின்றோம். தேவை முடிந்தவுடன் அவரையும் மறந்து விடுகின்றோம். ஆனால் ஆசிரிய மாணவ உறவு அப்படியானதொரு மேம்போக்கான உறவன்று.

ஆசிரியம் நிகழும்போது, ஆசிரியரது பேருள்ளம் மாணவரது உள்ளங்களைத் தொடுகின்றது. ஆசிரியரது அகக்காட்சியும், அறிவும் அகநெகிழ்வும் மாணவரது உள்ளங்களோடு கலக்கின்றன. ஆண்டாண்டுதோறும் தொடர்கின்ற இத்தொடர்பு புத்துணர்ச்சியையும், புதுமையையும், தெளிவையும் ஏற்படுத்தக் கூடியது.

ஆசிரியத் தொழிலின் மாண்பையும் அதன் உயர்வையும் பற்றி ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டும். ''கல்வி ஒளி விரிந்து அனைவரிடத்துக்கும் பரவிச் செல்ல, ஒளி விளக்காக விளங்குபவர் ஆசிரியர். அதன் சுடர் எரிந்து கொண்டிருந்தால் மட்டுமே அந்தச் சுடரால் இன்னொரு விளக்கை ஏற்றி வைக்க முடியும்'' என்கின்றார் கவிஞர் தாகூர்.

ஆசிரிய விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்தாற்றான், அதனால் மாணவ விளக்குகளுக்குச் சுடர் ஏற்ற முடியும். விளக்கின் சுடர்மங்காது தொடர்ந்து ஒளிர்வதற்கு எண்ணெயை வார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறே ஆசிரிய விளக்கு மங்காது பிரகாசிக்க, அதனாற் பல விளக்குகள் சமுதாயத்தில் உருவாக, அறிவாகிய எண்ணெயால் அந்த விளக்கை நிரப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.

நாட்டின் கல்வி அபிவிருத்தி பற்றி அறிக்கைகள் பல வெளியிடப்பட்டாலும், அரசு பெருந்தொகைப் பணத்தினைச் செலவிட்டாலும், பல்வேறு பெயர் சொல்லிக் கருத்தரங்குகளை நடத்தினாலும் அவை வகுப்பறையிலுள்ள மாணவர்களிடத்துச் சென்றடையாது விடுமாயின் அவ்வ அனைத்தும் வீண்விரயமானதே.

காலந்தோறும் வரவுசெலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி கல்விச் செயற்பாடுகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், தேசிய ஆணைக்குழு கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள் கல்வித் திணைக்களங்கள், மாகாணக் கல்வி அமைச்சுக்கள், பல்கலைக்கழக கல்விப்பீடங்கள் ஆகியவையும் கல்வி மேம்பாட்டுக்கெனவே உழைத்து வருகின்றன. இவை அனைத்துமே வகுப்பறையிலே மாணவரது கல்வியினை வளம்படுத்தும் நோக்குடனேயே செயற்படுகின்றன. அவற்றைச் செயற்திறன் மிக்கதாகக் காண்பதற்கென முன்னின்று உழைப்பவர் ஆசிரியரே ஆவார். அந்த வகையிலே ஆசிரியர் பல்வேறு திறன்களைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது. அத்துடன் வினைதிறன் மிக்க ஆசிரியர்களின் தேவையும் எமது சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு அத்தியாவசியமானதாக உள்ளது.

வினைத்திறன் மிக்க ஆசிரியராகச் செயற்பட வேண்டும் என்ற மனப்பாங்கினைக் கொண்டுள்ள ஒருவராலேயே, அந்த மகத்தான ஆசிரிய நிலையை அடைய முடியும். ஓர் ஆசிரியர் போதனா இலக்குகளின் குறிக்கோள்களை விளங்கிக் கொள்வதன் மூலம், அக்குறிக்கோள்களுக்கு ஏற்றதாகத் தமது போதனை முறையை, வடிவமைக்கும் திறன் மிக்கவராக இருத்தல் வேண்டும்.

ஒரு பாடத்தைக் கற்பதனால் மாணவர் தமது இலக்கை அடைவதற்குப் பொருத்தமான உத்திகளுடன் கற்பிக்கும் திறனை ஆசிரியர் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கேற்ற ஆக்க பூர்வமான சிந்தனையாளராகவும், அறிவை கற்றுக் கொள்பவராகவும், மாணவரை முன்னேற்றுதவற்காகத் தமது கற்கும் சூழலை ஒழுங்கமைப்பவராகவும் தம்மை வலு மிகுந்தவராக்குதல் வேண்டும். மாணவரைக் கற்றலில் ஈடுபடுத்த, அவரைச் சமூகத்தின் நற்பிரசையாக உருவாக்க, பல்வேறுவகையான போதனா அணுகுமுறைகளையும் பயன்படுத்தத் தெரிந்திருத்தல் வேண்டும். விசேடமாகத் தம்மைத் தாமே மதிப்பீடு செய்து கொண்டு தமது செயற்பாடுகளையும், நடத்தைக் கோலங்களையும் சீரமைக்கும் பண்புடையவராகுதல் வேண்டும்.

ஆசிரியர் என்றென்றும் ஒரு மாணவனாகவே இருக்க வேண்டும். அவர் கற்பிப்பதுடன் தொடர்ந்து கற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். கணினியுகமாக மாறிவரும் இக்காலத்திலே, நாளுக்கு நாள் புதிய தகவல்களும் கருத்துக்களும், அதிகரித்துக் கொண்டு வருகின்றன. பண்டைய காலத்தினைப் போன்று இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், நீதி நூல்கள் போன்றவற்றினை மட்டும் அறிந்திருந்தால் அவர் ஒரு வாண்மையுள்ளவராக இருக்க முடியாது. அன்றாடம் கிடைக்கின்ற புதிய தகவல்களைத் திரட்டி அவற்றை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்காக அவர், தொடர்ந்தும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும்.

அதேவேளையில் பல்வேறு திறன் கொண்ட மாணவரின் கற்றல் செயலொழுங்கை அவதானித்து, அதற்கு அமைவாக தமது கற்பித்தலைத் திட்டமிடவும் கற்பிக்கவும் தெரிந்தவராகுதல் வேண்டும். தற்பொழுது ஒரு வகுப்பறையில் கற்கும் மாணவரை அவர்தம் கற்கும் ஆர்வம் குறித்து ஆய்வு செய்தமையின் வழி, அவர்கள் வெறுமனே செவிமடுப்பவராகவும் செயலற்றுக் கற்போராகவும், மனனஞ் செய்வோராகவும், உள்ளனர் என அறியப்பட்டுள்ளனர். செயற்பாடுகளின்றி இம்மூன்று வகைகளிலேயும் பெறுகின்ற கற்றல் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்க வேண்டிய நடத்தை மாற்றங்களுக்கு உந்துகோலாக அமையாது. மாணவனின் கிரகித்தல், செயலாற்றுதல், பழக்கப்படுத்திக் கொள்ளுதல் ஆகிய வெளிப்படுத்தல்களை அவதானிப்பதன் மூலம் அம்மாணவனுக்குப் பொருத்தமான வழிகாட்டல்களின் ஊடாக, அவனைச் சுறுசுறுப்பு மிக்கவனாகவும் கருத்தூன்றிக் கற்பவனாகவும் மாற்ற முயலலாம். கண்டறிதலின் மூலம் கற்போன் என மாற்றம் பெறும் ஒருவன், தான்பெறும் கல்வியின் மூலம் நீண்டு நிலைக்கக் கூடிய நடத்தை மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளுதலும் நிகழக் கூடியதாகும்.

தற்போது வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களுள் அநேகர் அறிவை வழங்குபவராகவே உள்ளனர். அதன் காரணமாக ஆசிரியர் பலரும் தமது இத்தகைய செயற்பாட்டின் மூலம் கற்பித்தலை நிறைவு செய்ததாக நம்புகின்றனர். எனவே அவர் ஆசிரியர் மைய நிகழ்ச்சி திட்டத்தைச் சார்ந்தவராகவும் போதனை முறைக்கு முதலிடம் கொடுப்பவராகவும் செயற்படுவதில் ஈடுபடுகிறார்.

இந்த வகைக் கற்றல் கற்பித்தலால் மாணவர் பாடநூலை மனனஞ் செய்ய வழிப்படுத்தப்படுகின்றனர். திறமை மிக்க மாணவரின் வேகத்திற்கேற்ப ஆசிரியர் கற்பித்துச் செல்கிறார். மாணவரின் திறமைகளையும், திறமையீனங்களையும் இனங்கண்டு கற்பித்தல் செயற்பாட்டை நிறைவேற்றாது, பாடத்தை நிறைவு செய்வதற்கே அவர் பெரிதும் சிரமப்படுகிறார். எதிர்காலத்திலும் இவ்வழிமுறைகளையே மேலும் கடைப்பிடிப்பின், வகுப்பறையில் ஆசிரியர் தம் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாதிருப்பர். ஆசிரியர் கற்பிக்கிறார் என்பதற்குச் சாட்சியாக விளங்கும் மாணவனிடத்தில் மாற்றம் ஏற்படாதவரை ஆசிரியர் கற்பித்தலை நிகழ்த்தவில்லை என்றே முடிவாகலாம். எனவே விவேக முள்ளதாகவும், வேகமிக்கதாகவும் கற்றலை மாணவரிடத்தில் ஏற்படுத்த ஆசிரியர் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். மாணவர் மையக் கற்றல் முறைக்கு முன் னுரிமை வழங்குதல் மூலமும், கற்றல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி மாணவர் மகிழ்ச்சியுடன் கற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் மூலமும் கல்வியின் முழுமையை மாணவர் அடைய வழிகாட்ட வேண்டும்.

தனித்தனியே மனனஞ் செய்வதைப் பார்க்கிலும், குழுவாகச் செயற்பட்டு தொடர்பாடலுடன் கற்க வழிவகுத்தல் சிறப்பானதாகும். குழுக்களிடையே. காணப்படும் கற்றல் வேகத்தைக் கணிப்பிட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய உத்திகளைக் கடைப்பிடிக்கலாம். இதனால் புத்தகக் கல்வி யோடு நின்று விடாது வாழ்க்கைக்கு ஏற்ற கல்வியைக் கற்கும் வசதிகளையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த முடியும். ஆசிரியர் ஆசிரியராகத் திகழ புதிது புதிதாகப் பாடசாலைக்குள் நுழைகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் பொருத்தமான புதிது புதிதான கற்பித்தல் உத்திகளைக் கைக்கொள்ளுதல் அவசிய மாகும். அவரே ஆசிரியராவார்.

எனவே ஆசிரியர் கற்பிப்பவர் மாத்திரமல்லர், கற்றவரும் கற்பவரும் கற்றதன் வழி ஒழுகுபவரும் ஆசிரியரே. ✱

மைதிலி தேவராஜா
BA.PG.Dip. Edu
ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாண வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பும் பேரணிகளும்

தமிழரின் உரிமைக்காகவும் மானத்தைக் காக்கவுமே தமிழன் வீதிக்கிறங்கிப் பதாகைகள் ஏந்திப் போராடினான். அவற்றுக்கு இலங்கை அரசு தீர்வுகளை முன்வைக்காததால் பதாகைகளுக்குப் பதிலாக ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டான். பல்கலைக்கழக மாணவர்களும் சமூகமட்ட அமைப்புக்களும் அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்துப் போராடிய காலமது. அங்கு எழுப்பப்பட்ட கோஷங்கள் அவர்களின் இனவாதத்தின் ஒடுக்குமுறையால் அடிமனதில் இருந்து ஆவேசமாய்புறப்பட்ட வார்த்தைகள். ''பார்வையாளர் வேண்டாம் பங்காளிகள் வேண்டும்'' என்ற கோஷம் வீதி மருங்கில் நின்றவர்களையும் போராட்டத்தில் குதிக்க வைத்த காலமது.

வழிகாட்ட ஒரு சிறந்த தலைமை இல்லாததால், தமிழினம் தன்னிலை மறந்து கடந்தகால அர்ப்பணிப்புக்களை மறந்து அடிமையாய் வாழ்கிறது. அண்மைக் காலங்களில் அரசுக்கு எதிராகத் திரண்டுள்ள சர்வதேச அழுத்தங்களை முறியடிக்க, வீதிப் போராட்டம் என்ற நாடகத்தை அவ்வப்போது அரங்கேற்ற அரசு தவறவிடவில்லை. இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன், நாமல் மற்றும் கருணா போன்றவர்களைத் தாராளமாகப் பயன்படுத்துகிறது இன்றைய அரசு. இவற்றைக் கண்காணிக்கவும், இவர்களுக்குப் புத்தூக்கம் அளிப்பதற்கும் மஹிந்தரின் குடும்ப உறுப்பினர்கள் வடக்கு நோக்கி வருவதுண்டு.

இதன் உச்சக்கட்டமாக அண்மையில் அரச சார்பற்ற நிறுவனங்களால் கட்டப்பட்டுக் கையளிக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலையின் கட்டடத் தொகுதி மஹிந்தரால் திறந்து வைக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் கட்டடத் தொகுதியை நிதி வழங்கிக் கட்டிக் கொடுத்த இரண்டு அரசசார்பற்ற நிறுவனத்தினரையும் பார்வையாளராக அழைத்திருக்கும் திறமை வேறு எந்த அரசாலும் இதுவரை செய்யப்படாத ஒரு சாதனை.

அரசின் அந்த அழைப்பை நிராகரித்த அந்த இரு அமைப்புக்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆமை வேகத்தில் நகரும் வடக்கின் வசந்தமும், அபிவிருத்தி வேலைத்திட்டமும் சாவகச்சேரி நகரப் பகுதியில் (மஹிந்த வருகை தந்த இடம் மட்டும்) கடுகதியில் இரவு பகலாக நடைபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரியில் நீச்சல் தடாகம் திறந்து வைக்கையில் மஹிந்தரை 'குஷி'யேற்ற டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்த தென்னிலங்கைப் பாடசாலை மாணவிகளின் நீச்சல் உடையில் நீந்தும் காட்சிகள் அங்கிருந்த அனைத்து அரசியல் ஆசாமிகளையும், மெய்சிலிர்க்க வைத்ததாகச் செய்திகள் வெளியானபோது, நான் யாழ்.மத்திய கல்லூரியில் படித்தபோது வேம்படிப் பக்கமுள்ள ஜன்னலில் மாணவர்கள் நின்றாலே அதிபரால் தண்டிக்கப்பட்ட காலம் நினைவுக்கு வந்துபோனது.

இவ்வாறான விழாக்களை நடத்துவதற்கு அனுமதி அளிக்கின்ற வைத்தியசாலை மற்றும் பாடசாலை நிர்வாகிகள் மீது கோபப்படுவதா அல்லது பரிதாபப்படுவதா என்று புரியவில்லை.

படித்துப் பதவியில் உள்ள இவர்கள் அற்பத்தனமான இந்தச் செயல்களுக்குத் துணைபோனது எமது சமூகத்துக்கே செய்த ஒரு துரோகம். இவர்களுக்குத் தமது பாடசாலையோ, வைத்தியசாலையோ அபிவிருத்தியடைந்தால் போதும்.

அதனால் தமிழன் ஏமாற்றப்படுவதோ இழிவுபடுத்தப்படுவதோ பெரிதல்ல. நமது பிரதேசத்தில் உள்ள அரச அதிகாரிகள் அனைவருமே அதிகாரமற்ற அரசின் ஏவலாளிகள் என்பது அனைவரும் அறிந்ததே. ''மனச்சாட்சி, மனிதாபிமானம், கடமை உணர்வு எல்லாவற்றையும் விற்று எமது சம்பளத்துக்காகக் கையேந்தும் நிலையில் மனமுடைந்து விட்டோம். எப்ப ஓய்வு பெறும் காலம் வரும்'' என்று அண்மையில் ஓர் உயரதிகாரி ஒருவர் சலித்துக் கொண்டதை நினைத்துப் பார்க்கின்றேன்.

வேலையில்லாத் திண்டாட்டம், குடும்பத்தின் சுமை, விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் தற்போதைய இளைய சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் அரசு டக்ளஸ், அங்கஜன், நாமல் போன்றோரின் உதவியுடன் வேலைவாய்ப்புத் தருவதாகவும், தொழில் உபகரணங்கள் தருவதாகவும் கூறி இளைஞர்களையும், யுவதிகளையும் அழைக்கின்றது. பின்பு அவர்கள் கையில் தங்களால், தமக்குச் சாதகமாக எழுதப்பட்ட பதாகைகளைக் கொடுத்து நெற்றியில் நாமத்தைப் போடுகின்றது.

குடும்பத்தின் சுமைக்குமுன்பு பதாகைகள் பாரமில்லை, உறவுகளின் பட்டினிக்கு முன் தன்மானம் தேவையில்லை என்ற பரிதாப நிலை நமது தலைமுறைக்கு. அண்மையில் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன் ஒரு கடையில் நின்றேன். ஒரு பெண்மணி வந்திருந்தார். கடைக்கார முதலாளி கேட்டார் ''என்ன தங்கச்சி நிறைய ஆக்கள் வந்து நிக்கினம் ஏதும் கூட்டமோ'' என்று. அதற்கு அந்தப் பெண்மணி 'இல்லை அண்ணை வைத்தியசாலை சிற்றூழியர் வேலைக்கு ஆக்களை எடுக்கப் போறம். வாங்கோ உதயன் தோழரைச் சந்தியுங்கோ எண்டு சொன்னவை அதுதான் வந்தனான். தீவகத்தில் இருந்து வாறன்' என்று பதிலளித்தார். மறுநாள் காலை உதயன் பத்திரிகையைப் புரட்டினேன். அமெரிக்க பிரதிநிதியின் யாழ். வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்ற விடயம் தொடர்பான புகைப்படத்தில் பாவம் அந்தப் பெண்மணி ஒரு பதாகையை ஏந்திக் கொண்டு நின்றிருந்தார்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால் கையில் உள்ள பதாகை ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. பாவம் அந்தப் பெண் அந்த ஆங்கில வசனத்தைச் சரியா உச்சரிக்காததால் அவருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கலயாம்.

இன்றைக்குப் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர், யுவதிகளுக்கும் இதே நாமம் தான். படித்துப் பட்டம் பெற்றாலே, அரசு அவர்களை வேலைக்கு அமர்த்துவது எல்லா நாட்டிலும் உள்ள நடைமுறை.

ஆனால் எங்கட நாட்டில மட்டும் வால் பிடிச்சாத்தான் பட்டப்படிப்புக்கே மதிப்பு. வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பின தீவக மக்கள்தான் அதிகம் இந்த நிலைக்கு ஆளாகின்றனர். தன் தலையில் தானே மண்ணள்ளிப்போட்ட கதையாப் போச்சு தீவக மக்களின் நிலை.

இலவசமாக ஏற்றுவதென்றால் பிண வண்டியிலும் ஏறி பயணம் செய்யும் எமது அரச விசுவாசிகள், கூட்டம் கூட்டமாக அங்கஜனின் அலுவலகத்திலும், ஈ.பி.டி.பியின் அலுவலகத்திலும் அலை மோதும் காட்சி ஆர்ப்பாட்டப் பேரணிக்கான சமிக்ஞையாகவே மாறிவிட்டது. இளைய தளபதி அங்கஜனின் பாதையில் குடைகளாலும், துணிகளாலும் முகத்தை மறைத்து வீதியில் வலம்வந்த பெண்கள் தான் பாரதி கண்ட புதுமைப் பெண்கள். இளைய தளபதியின் கூத்து இப்படி இருக்க தமிழினத்தின் தளபதி டக்ளஸ் தேவானந்தா அண்மைக் காலங்களில் தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பித்து ''வீணை என்னடா வெற்றிலை என்னடா அவசரமான நேரத்தில'' என்று சின்னமோ கொள்கையோ முக்கியமல்ல; அமைச்சர் பதவியே போதும் என்ற பாணியிலான காட்சிகளின் மூலமாக வைகைப்புயல் வடிவேலின் திரையுலக இடைவெளியை ஈடுசெய்யும் வகையில் நகைச்சுவையாக உள்ளது.

கடந்த காலங்களில் அரசின் செயற்பாட்டைப் பார்த்தும், அனுபவித்தும் இன்னமும் புத்திவராத எமது இளைஞர், யுவதிகள் தம் அறிவையும், பெற்றுக் கொண்ட பட்டத்தையும் அரசியல்வாதிகளுக்குத் தாரைவார்த்து அடிமையாக வாழ்வதை என்றுதான் [illegible] கள் தமக்கு [illegible] கூட மறந்துவிட்டனர்.

■ பாவலன்

# மின்சாரக் கனவுகள்

மாணிக்கத்தாருக்குப் புளுகம் பிடிபடவில்லை. பாயிலே புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வருவதாக இல்லை. அவர் கண் முன்னே ஒளி வீசிக் கொண்டிருக்கும் 'பல்புகள்' மட்டுமே நிறைந்திருந்தன. கனவிலும் வெவ்வேறு வர்ணங்களோடு அவை கண் சிமிட்டிப் போயின. மாணிக்கத்தாருக்குத் தன் வீடும் 'கறண்டில்' ஒளிர வேண்டும் என்பது நெடுநாளைய கனவு. ஆனால் என்ன செய்வது? வன்னியில் பாதைகளே சீராக இல்லாத ஒரு கிராமத்தில் பிறந்துவிட்ட அவரால், நகருக்குச் செல்லும்போது மட்டுமே மின்சாரத்தைக் காண முடிந்தது.

அவ்வப்போது ஆசைக்கு 'ஜெனரேட்டரை' வாடகைக்கு அமர்த்தி, விடிய விடியத் தொலைக்காட்சியில் படம் பார்ப்பார்கள். அன்றைக்கு மட்டும் தன்னுடைய 'ட்ரங்குப்' பெட்டியில் கவனமாக வைத்திருக்கும் பல்புக்களை எடுத்து வந்து அந்த மின்சாரத்தில் வீடு முழுவதும் ஒளி வெள்ளம் பாய்ச்சுவார் மாணிக்கத்தார். ஓரிரவோடு அந்த வெளிச்சத்துக்கு முற்றுப்புள்ளி வந்துவிடும். விடிந்ததும் பழையபடி 'ட்ரங்குப்' பெட்டிகளுக்குள் பல்புகள் மீளாத உறக்கத்துக்குச் சென்றுவிடும்.

எத்தனையோ பேருக்கு, கோரிக்கைக் கடிதங்கள் எழுதி எழுதி அந்த ஊர் மக்கள் களைத்துப் போயினர்.

'போஸ்ட் வரவில்லை'

' நிறையப்பேர் எண்டால் மட்டும்தான் கறண்ட் குடுக்கலாம்'

'மேலிடத்து அனுமதி கிடைக்கவில்லை'

'பாதுகாப்புப் பிரச்சினை'

'கெதியில தருவம்'

' முதல்ல உங்கட ஊருக்கு ஒழுங்கான றோட்டுக்கூட இல்லை. முதல்ல அதுகளைச் செய்துபோட்டுப் பிறகு இதைப்பற்றி யோசிப்பம்'

- இப்படி நிறையத் தட்டிக் கழித்தல்கள் அவர்களது மின்சாரக் கனவுகளைக் கலைந்து போகச் செய்தன.

## கோணல் கோலங்கள்

இனி ஆயுளுக்கும் மின்சாரத்தைக் காணவே முடியாது என்று முடிவெடுத்த கணத்தில்தான், இன்று பின்னேரம் விதானையாரோடு வந்த சில 'ரிப்-ரொப்' நபர்கள் இவர்களது வீட்டு விவரங்களைப் பதிந்து விட்டு, ''ஐயா, உங்கட ஊருக்கு 'சோலர்' (சூரியகலம்) மின்சாரம் இலவசமாகத் தரப்போறம். நாளைக்கு வந்து அதை வாங்குங்கோ'' என்று கூறிச் சென்றார்கள். அதிலிருந்து வானத்துக்கும் பூமிக்கும் பாயாத குறையாக மாணிக்கத்தார் மகிழ்ச்சிக் கடலில் நீந்திக்கொண்டே இருந்தார்.

■ ஓடுகாலி

விடிந்தது. விடியுமுன்னரே வேட்டி உடுத்து மாணிக்கத்தார் ஆயத்தமாகி விட்டார். ஊருக்கு வந்த பஸ்ஸில் விழுந்தடித்தேறி, இடம் பிடித்துக் கொண்டார். பஸ்ஸில் அவரது ஊர்க்காரர்கள் அநேகர் இவரைப்போலவே புத்தாடை பூண்டு, புது மாப்பிள்ளைகள் போன்று உட்கார்ந்திருந்தார்கள். அவர்களின் முகத்திலும் மாணிக்கத் தாரைப்போல ஆயிரம் வாற்ஸ் மின்சார வெளிச்சம். இலவசமாக சோலர் தந்தாலும், அதில் ஒளிர்வதற்கு மின்சார விளக்குகள் வாங்குவதற்காக யார் யாரிடமோ கடன்வாங்கிச் சிறுதொகைப் பணத்தையும் எல்லோரும் கூடவே கொண்டு வந்திருந்தனர். பஸ் சென்று கொண்டிருந்தது. மாணிக்கத்தாருக்கு கைகளில் சோலரை வாங்கும் கணம் எப்போது வரும் என்று ஏக்கம் பிறந்தது. பஸ் ஒரு குலுக்கலோடு நின்றபோது ஒலிம்பிக் வீரன் போல பாய்ந்திறங்கினார் மாணிக்கத்தார். வெளியில் பெருங்கூட்டமே நின்றது. கைகளில் வாளேந்திய சிங்கக் கொடிகளும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சுலோகங்களும் வெளியே நின்றவர்களின் முகங்களை மறைத்துக் கொண்டிருந்தன. மாணிக்கத்தாருக்கு ஒன்றும் புரியவில்லை. சிலவேளைகளில் இத்தகைய விழாக்களில் இவ்வாறு செய்வதுதான் மரபுபோலும் என்று எண்ணிக் கொண்டார்.

ஆனாலும், அவர் நினைத்தபடி விழா நடைபெறவில்லை. மாணிக்கத்தாரின் பஸ்ஸில் வந்தவர்களைப்போல இன்னும் பல பஸ்களில் இருந்து வெள்ளையும் சொள்ளையுமாகப் பலர் இறக்கப்பட்டனர். எல்லோர் கைகளிலும் கொடிகளும் சுலோகங்களும் திணிக்கப்பட்டன. விழாவுக்குப் பதில் பேரணி ஒன்று ஆரம்பமானது. பேரணி முன்னால் சென்றவர் ஒரு வசனத்தைச் சொல்ல பின்னால் சென்றவர்கள் ''வாழ்க'' என்றும் ''ஒழிக'' என்றும் கத்துமாறும் பணிக்கப்பட்டனர்.

''ஜனாதிபதி மஹிந்த ...!''- இது முன்னால் சென்றவர்.

''வாழ்க'' - கூட்டம் கத்தியது.

''அமெரிக்கா... ''- முன்னால் சென்றவர்.

'' ஒழிக'' இதுவும் கூட்டத்தின் குரல்தான்.

ஆனாலும் 'ரைமிங்' அடிக்கடி பிரச்சினை செய்ததால் பல முறை மஹிந்த ஒழிக என்றும் அமெரிக்கா வாழ்க என்றும் குரல்கள் தாறுமாறாக எழுந்தன. இது முன்னால் சென்றவருக்குக் கடுப்பை ஏற்படுத்தி இருக்க வேண்டும். கடைசியில் அவரே ஒலிபெருக்கியில் வாழ்க, ஒழிகவையும் சேர்த்துக்கொண்டார். கடைசி வரையிலும் மாணிக்கத்தாருக்கும் மற்றவர்களுக்கும் சோலர் கொடுக்கப்படவில்லை. மாசி வெயிலில் காய்ந்து கருவாடானதுதான் மிச்சம். ஒரு வேளை, சூரிய வெயிலில் காயவிடுவதைத்தான் அவர்கள் சோலர் என்று சிலேடையாகச் சொன்னார்களோ என்ற சந்தேகமும் மாணிக்கத்தாருக்கு முளைத்தது. வீட்டுக்கு மாணிக்கத்தார் சென்றபோது அவர் சந்தோஷம் பறந்து போயிருந்தது. ஆனாலும் அவருக்கு ஒரு திருப்தி. பேரணியில் கலந்துகொண்ட அவரது சிறுவயது நண்பர் ஒருவர் இப்படிச் சொல்லியிருந்தார்.

''எடேய், விடிய நான் 'ரொய்லற்' இருக்கவெண்டு காட்டுப் பக்கமாப் போகேக்க பிடிச்சுக் கொண்டு வந்திட்டாங்கள். 2 மணியாப்போய்ச்சு. இன்னும் நான் எல்லாத்தையும் அடக்கிக் கொண்டுதான் இருக்க வேண்டியதாய்ப் போய்ச்சு'' என்று அங்கலாய்த்திருந்தார். அவரோடு ஒப்பிடும்போது நான் பரவாயில்லை என்ற நினைப்பே மாணிக்கத்தாருக்கு ஆறுதலாக இருந்தது. ஏதோ நினைவுக்கு வந்தவராக 'ட்ரங்குப் பெட்டியில்' இருந்த பல்புகளை எடுத்து வெளியே வீசினார். வீசும்போது அவரது வாய் இவ்வாறு முணுமுணுத்தது.

''அவங்களும் அவங்கட சோலரும். ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண் (8) சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் இவ்வாரமும் தொடர்கின்றன**

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (31)

### 8ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து

இவர்கள் தங்கள் பெயருக்கு அடுத்த படியாக தாங்கள் இடும் கையெழுத்தையும் அதிர்ஷ்டமானதாக மாற்றிக் கொள்ள வேண்டும். வலப்புறச் சுழியுடன் மேல் நோக்கி ஆரம்பித்து சனி ஆதிக்க எழுத்துக்கள் கம்பீரமாக தலைநிமிர்ந்த வண்ணம் இடும் கையெழுத்து சிறந்த நிர்வாகத் திறனையும், பலபேரைக் கட்டியாளும் திறனையும், பெரும் செல்வத்தைத் திடீரென்று பெற்றுத் தரும் அமைப்பையும் உருவாக்கும்.

### சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

#### 8ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

அமைதியான வாழ்க்கை வாழ விரும்புவார்கள். பல காரி யங்களைச் சாதிக்கத் துடிப்பார்கள். மன அமைதி இல்லாதவர்கள். எந்த நேரமும் சிந்தனையில் மூழ்கி யிருப்பார்கள். தனிமையை அதிகம் விரும்புவார்கள். ஓயாத உழைப்பால் உன்னத நிலையை அடைவார்கள். இவர்கள் எண்ணங்கள் வித்தியாசமாக இருக்கும். பொதுக்காரியத்தில் அயராது உழைப்பார்கள். நன்மை செய்தால் நற்புகழ், புண்ணியம் உண்டாகும்.

#### 17ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

பிறப்பில் சீமானாக இல்லாவிட்டாலும் சுய முயற்சியால் மிகப் பெரிய அந்தஸ்தான நிலைக்கு அறிவால் முன்னேறிவிடுவார்கள். இளமைக் காலம் போராட்டம் நிறைந்திருக்கும். வயது செல்லச் செல்ல உயர்ந்த நிலைக்கு வருவார்கள். எல்லாக் கஷ்டங்களையும் மிகுந்த பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் அனுபவித்து முன்னேறுவார்கள். எதையும் தாங்கும் சக்தி படைத்தவர்கள். குடும்பத்தில் தனக்குக் கட்டுப்பட்ட மனைவியையே விரும்புவார்கள். பிடிவாதம், வைராக்கியம், தனிப்பட்ட கொள்கைகள் இருக்கும்.


#### 26ம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

முன்னேற்றத்தில் அதிக ஆர்வமுடையவர்கள். வாழ்க்கையில் பெரிய லட்சியத்துடன் வாழ்வார்கள். தொழிலில் அரும்பாடுபட்டு முன்னேறுவார்கள். எந்தத் துறையில் ஈடுபட்டாலும் இவர்களுக்கு மறைமுக எதிரிகள் இருப்பார்கள். சிறு வயதிலேயே பெற்றோரை இழப்பதும், குடும்பப் பாரங்களைச் சுமப்பதும் இவர்களுக்குச் சோதனையாக இருக்கும். உணவு உறக்கமின்றி உழைக்கும் நபர்கள். கொள்கையில் பிடிவாதமுடையவர்கள். ஆனால் கொள்கை எதுவும் நிலையாக இருக்காது. குடும்ப வாழ்க்கை மிகவும் போராட்டமாகவே இருக்கும். இவ்வெண்காரர்கள் விதியால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

### சனி ஆதிக்கப் பெயரெண்களின் பலன்கள்

#### பெயர் எண் 8

சனியின் ஆதிக்கம் பெற்ற இவ்வெண் பல்வேறு



இன்னல்களுக் கிடையில் காரியம் சாதிக்க வைக்கும். திடீர், திடீரென ஆபத்துக்கள் வரும். இல்லற இன்பங்களில் ஈடுபாட்டைக் குறைத்துவிடும். பெரும் போராட்டத்தைச் சந்திக்கச் செய்யும். விபத்துக்கள் மற்றும் அரச தண்டனைக்கு ஆளாக்கும். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் தடைகள் இருக்கும்.

#### பெயர் எண் 17

அசுரத்தன்மையுடன் கூடிய சனியின் பூரணமான பலன் உடைய எண்ணாகும். பலவித சோதனைகள் உரு வாகும். பல்வேறு வழிகளில் சோதனைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கும். சளைக்காமல் போராடச் செய்யும். காலத்தால் மறையாத, மங்காத புகழ் உண்டாகும். மக்கள் மனதில் நீங்காத இடம் பிடிப்பார்கள். எதிர்ப்புகளை வென்று வீழ்த்தி பிற்காலத்தில் பொன், பொருளுடன் நீங்காத புகழ் பெற்று வளமுடன் வாழ்வார்கள்.

#### பெயர் எண் 26

வாழ்க்கை ஆடம்பரமும், ஆர்ப்பாட்டமுமாகத் தொடரும். இவர்கள் பின் வாழ்க்கையில் வருத்தமடைவார்கள். குடும்ப வாழ்க்கையில் சுகம் என்பதே இருக்காது. நட்பு நிலைக்காது. தகுதிக்கு மீறிய தொழிலில் ஈடுபட்டு நஷ்டமடைவார்கள்.

#### பெயர் எண் 35

வரவுக்கு மீறிய செலவு வந்து கொண்டேயிருக்கும். எந்தத் தொழில் செய்தாலும் முடங்கிவிடும். சிறிது சிறிதாகச் சேர்த்த பொருளை அநியாயமாக இழக்க நேரிடும். எதிர்பாராத விபத்தும் அபராதமும் கிட்டும். கல்வியில் தடையை ஏற்படுத்தும். உடல் நோயும், மனநோயும் ஒரு சேர வாட்டும். நரம்பு, வயிறு சம்பந்தப்பட்ட நோயால் அவதிப்படுவார்கள். கெட்ட பெயர், அவமானம், வீண் பகை, எதிரிகளை உருவாக்கிவிடும்.

#### பெயர் எண் 44

நல்ல சிந்தனை வளமிருக்கும். இவர்களுடைய எண்ணங்கள் முழுவதும், திறமையைப் பல வழிகளில் செயல்படுத்திப் பொருள் ஈட்டுவதிலேயே இருக்கும்.

கலைகளால் பொருள் சேரும். பணம் எளிதில் சம்பாதிக்க வழிகள் கிடைக்கும். நீர், மின்சாரம், நெருப்பு போன்றவற்றால் ஆபத்துக்கள் உண்டாகும். நோயால் அவதியுற நேரிடும். வழக்கும், தீராத கஷ்டமும் வாழ்க்கையைப் பின் தொடரும்.

#### பெயர் எண் 53

புகழ்பெற ஆசை கொண்டவர்கள். பல தோல்விகளைச் சந்திக்க நேரிடும். விடாமுயற்சியால் சில வெற்றிகள் கிடைக்கும். சுய வாழ்க்கை சுகமற்றுப் போய்விடும். பொறுமையிலும், நிதானத்திலும் பெயர்போன இவர்கள் கஷ்டப்பட்டு வெற்றியை அடைவார்கள்.

#### பெயர் எண் 62

சுகமான வாழ்க்கை வாழ்வார்கள்.மனம் இஷ்டப்பட்ட படி வாழ்வார்கள். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிப்பார்கள். மிகுந்த புகழையும், பெரும் வெற்றியையும் தரும். பேராபத்தும் கூடவே வரும். அவ்வப்போது தோல்விகளும் பின் தொடரும். குடும்ப வாழ்க்கை சுகமற்றுப் போகும்.

#### பெயர் எண் 71

பலருக்கும் போதனைகள் செய்வார்கள். நல்ல புத்திமான். அறிவாளிகள். பலருடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். ஆன்மீகத்தில் சிறப்பு உண்டாகும். ஆரம்ப வாழ்க்கை மிகவும் போராட்டமாக இருக்கும். போகப் போக பல வெற்றிகளைக் குவிக்கும். பலவழிச் செல்வம் சேரும். மறைமுக எதிர்ப்புகளும், ஆபத்துக்களும் சேரும்.

*(தொடரும்)*

# தியேட்டர்காரர் சொந்தம்...

யாழ்ப்பாணத்தின் பிரபலமான பெண்கள் பாடசாலையொன்று அண்மையில் பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தது. அந்தப் பாடசாலையில் அமைந்திருந்த கல்வி அலுவலகத்தைப் பாடசாலையை விட்டு அகற்றுமாறு கோரியே அந்தப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள் அவ்வாறு பகிஷ்கரிப்பு மேற்கொள்ளக் காரணம், இந்து சமயத்து நாயன்மாரில் ஒருவருடைய பெயரைக் கொண்டமைந்த கல்வி அலுவலகத்தின் அதிகாரி செய்த மன்மத லீலைகளாலேயே அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த அதிகாரி தியேட்டர்காரருக்கு உறவுமுறையால் வேண்டப்பட்டவர். அதனால்தான் அவர் எத்தகைய லீலைகள் செய்தாலும் யாரும் கண்டு கொள்வதில்லை.

இருப்பினும் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதனால் அவ் விடயத்தில் தலையிட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார் வடக்கின் நாட்டாமை. உடனடியாகவே அவர் அந்த அதிகாரியையும், பாடசாலை அதிபரையும் கொழும்பில் உள்ள தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்திருந்தார். (எங்களுடைய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் கொழும்பில் தங்கியிருக்கிறார்கள் என்றால் நாட்டாமையும் அந்த வழியில் செல்லத் தொடங்கிட்டார்.)

**ஏன்...**
**எதற்கு...**
**எப்படி?**

தியேட்டர்காரரின் செல்வாக்கு இருக்கிறதால எந்தப் பிரச்சினையும் இல்லையென்று தான் அந்த மன்மதலீலை செய்த கல்வி அதிகாரி போனவர். அங்க நாட்டாமை எக்கச் சக்கமாய் கிழி கிழியெண்டு அவரை கிழிச்சுப் போட்டாராம். அடிச்சு வெளியால கலைக்காததுதான் மிச்சம். அந்தளவுக்கு வாங்கு வாங்கு எண்டு வாங்கிப் போட்டு விட்டாராம் நாட்டாமை. அப்பதான் அவருக்கு தெரிஞ்சுது தியேட்டர்காரர் செல்வாக்கு (?)

அதோட ஊடகங்களுக்குத் தகவல் எதுவும் குடுக்கக் கூடாதெண்டு சத்தியக் கடதாசியில கையெழுத்தும் வாங்கினவராம் எங்கட நாட்டாமை. பாருங்கோவன் உள்ள குட்டு முழுக்கலும் செய்து போட்டும் அதை பேந்தும் எப்படி மறைக்கினையெண்டு ?

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ள பத்திரிகை 'உதயன்' என்றால் மிகையாகாது. நாள்தோறும் நடைபெறும் மறுக்க முடியாத உண்மைகளையும் மக்களின் பிரச்சினைகளையும் உள்ளதை உள்ளபடியே பிரசுரிப்பது மக்களின் மனதில் மங்காது இடம்பிடித்துள்ள உதயனே! உன்னைப் புகழ வார்த்தைகள் தேடுகிறேன்.

கட்டுரைகள், ஆக்கங்கள் உணர்வு பூர்வமாக எழுதப்படுவது வரவேற்க வேண்டிய விடயம். அத்தோடு சிறுவர் பக்கம், கவிதைப் பக்கம், திலகம் என எல்லாப் பக்கங்களும் எல்லோரையும் கவரும் வகையில் அமைந்துள்ளன.

எத்தனை இடர்களைக் கண்டும் துவண்டுவிடாமல் தன்னிகரற்ற துணிவுடன் தலைநிமிர்ந்து நின்று ஈழத்தவர்களில் மட்டுமன்றி வெளிநாட்டவர்களிலும் புகழ்ந்து பேசப்படும் எம் இனிய நாளேடான உதயன் என்றும் அழிவில்லாத சிறப்புடன் மிளிர வேண்டும்.

நிலா,
ஏழாலை.

இன்று தமிழ் மக்களின் அபிமானப் பத்திரிகையாக உதயன் விளங்குகின்றான் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

ஆனால் சில குறைகளை நிறைவு செய்தால் பத்திரிகையின் பெருமை மேலும் உயர்வடையும்.

உதாரணமாகக் கோணல் கோலங்கள், கோப்பாய் சண்முகம் ஆகிய பகுதிகளில் முழுமையான வகையில் குறைகள் சுட்டிக் காட்டப்படுவதில்லை. சமூகத்திலே நிலவும் சகல குறைகளையும் எவ்வித பாரபட்சமுமின்றி வெளிப்படுத்துவதே பத்திரிகைத் தர்மமாகும்.

இந்த வகையில் இந்த இரு பகுதிகளும் அமைய வேண்டுமென்பதே வாசகர்களின் விருப்பமாகும். ஆகவே ஒரு சில குறிப்பிட்ட விடயங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காது எவ்வித பாரபட்சமுமின்றிச் சகல விடயங்களையும் ஆராய்ந்து துணிவுடன் குறைகளை எதிர்காலத்தில் உதயன் சுட்டிக் காட்டுவானென எதிர்பார்க்கின்றோம்.

மா.சுந்தரமூர்த்தி,
கொடிகாமம்.

காலைகளை அர்த்தமுள்ளதாக்கும் எழுத்துப் பேழையே வணக்கம்.


25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் பரப்பில் நீ ஆற்றிவரும் பணி எழுத்தில் குறிப்பிட இயலாது. வரலாற்று அலையும் ஓர் இனத்தின் உரிமைக் குரலாய்.


ஆயினும் அண்மைக் காலமாய் நிகழ்ந்து வரும் அரசியல் மாற்றங்களை வெளிப்படுத்திச் செல்வதில் தடுமாற்றங்களை சந்திப்பதை உணர்கிறோம்.

இவ்வளவு காலத்தைப் போல உண்மைகளை மட்டுமே தருவது எப்போதும் முன்னணியில் நீ நிற்க வேண்டு மென நம்புகிறோம். இதுவே 25 வருட கால வாசகனின் வேண்டுகோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட ரோபோ






மனிதனின் வடிவத்திலும், அவனது செயல்களைக் கொண்டும் அமைக்கப்பட்டு வந்த ரோபோக்கள் காலப்போக்கில் செல்லப் பிராணிகளின் வடிவங்களிலும் அமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் அதிகமான மனிதர்கள் உணவாக உட்கொள்ளும் மீனின் வடிவத்திலும் தற்போது ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோவானது மீனின் உருவத்தைப் பெருமளவில் ஒத்ததாகவும், அளவில் அல்லது பருமனில் சற்றுப் பெரிதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இது ரோபோ தொடர்பான கல்வியைத் தொடரும் மாணவர்களின் படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

# மது அருந்தும் குரங்குகள்



மனிதனின் தோற்றத்துக்கு ஒத்ததாகக் கருதப்படும் குரங்குகள் இயல்பிலும் பெருமளவில் ஒத்ததாகவே காணப்படுகின்றது. இதனால்தானோ என்னவோ கரீபியன் தீவிலுள்ள மது அருந்தும் நிலையத்தில் மது அருந்துவதற்காக குரங்குகள் கூடுகின்றன.
இந்தத் தீவுக்கு விஞ்ஞான ஆய்வுகளை நோக்கிச் சென்ற சில ஊடகவியலாளர்கள் குரங்குகளின் இந்தச் செயற்பாட்டைக் கண்டு அதிர்ந்துள்ளனர்.
இந்தத் தீவில் சுற்றுலாப் பயணிகளுக்கு என அமைக்கப்பட்ட மதுபான நிலையத்தில் கூடும் இந்தக் குரங்குகளுக்கு அவர்களே மதுபானம் கொடுக்கின்றனர். எனினும் சில குரங்குகள் மதுவை வெறுப்பதால் அவை பழரசங்களை மட்டும் அருந்துகின்றன.

# 2 தலை, 6 கால்களுடன் அதிசய கடல் ஆமை



உக்ரைன் நாட்டில் கீவ் நகரில் உள்ள அறிவியல் அருங்காட்சியகத்தில் இரு தலைகளுடனும் 6 கால்களுடனும் கூடிய அதிசய கடல் ஆமை ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இந்த ஆமை வேறு சில புதுமைகளுடன் காட்சி அளிக்கிறது. அதாவது சுமார் 5 வயதுடைய இந்த ஆமையின் மேற்பகுதி ஓடானது இருதயம் போன்று காணப்படுகின்றது. இந்த கடல் ஆமையை ஏராளமான மக்கள் அதிசயத்துடன் பார்த்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

# புதிய சைக்கிள்

நாம் பொதுவாக எமது உடலை திடகாத்திரமாகப் பேணுவதற்கு என 'நெட்மில்' என்ற உடற்பயிற்சி உபகரணத்தை வீட்டில் பயன்படுத்துவோம்.
இவ்வாறான செயற்பாட்டினால் பயன் கிடைக்கின்ற போதிலும் எமது நேரம் வீணடிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக தற்போது புதியவகைச் சைக்கிள்கள் அறிமுகமாகியுள்ளன.
இதன்மூலம் நாம் பயணம் செய்யமுடிவதுடன் நெட்மில் போன்ற அமைப்பு காணப்படுவதனால் அதனூடாக எமது உடலையும் திடகாத்திரமாகப் பேணமுடியும். இதனால் எமது நேரம் சேமிக்கப்படுவதுடன் எதிர்பார்ப்பும் நிறைவேற்றப்படுகிறது. ஏறத்தாழ 6 அடி நீளமான இந்த சைக்கிளின் பெறுமதி 1,800 அமெரிக்க டொலர்கள் ஆகும்.



# இரத்தக்குழாய் கட்டிகளை நீக்க புதிய சாதனம்



இரத்தக் குழாய்களான நாடி, நாளம் என்பவற்றில் உண்டாகும் கட்டிகள் காரணமாக இரத்த ஓட்டம் தடைப்படுவதனால் "ஸ்ரோக்" போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் சில சந்தர்ப்பங்களில் இறப்புகளும் ஏற்படலாம். தற்போது இவ்வாறான நோய்களுக்கு இலகுவாகச் சிகிச்சை அளிப்பதற்கென விசேட உபகரணமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கருவிகள் மிக மெலிதாகக் காணப்படும். இரத்தக் குழாய்களுள் செலுத்தக் கூடியவாறு அதன் முனைகள் இரத்தக் குழாய்களைச் சேதப்படுத்தாத வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baby Cheramy

# அன்பும் பரிசும்

# வெற்றி பெற்ற அனைவருக்கும் பேபி ஷெரமியின் நல்வாழ்த்துக்கள்

மூன்றாம் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம் பின்வருமாறு




1 பரிசு

## சுசுகி அல்டோ காரினை வென்ற அதிஷ்டசாலி

H. A. L. ரசதுன் - பஹல லேல்வள, காலி



2 பரிசு

## சுகூட்டி பெப் இனை வென்ற அதிஷ்டசாலி

A. K. சாலிய ருவன் - அச்வெத்தூவ, குருனாகல

தனூஜா வீரசிங்க - சியம்பலாகொட, தன்துரே

3 பரிசு

## இருபது தங்க மாலைகளை வென்ற அதிஷ்டசாலிகள்

K. சிவனந்தன் - கந்தன்பதி, வாரியபுளம், சுன்னாகம்
சஷிகா உதயகுமார் - கோவில் வீதி, நல்லூர், யாழ்பாணம்
H. M. வசந்தரா பிரேமகுமாரி - புப்புலிய, மாத்தலை
A. M.M. சந்துபனி அலஹகோன் - கல்முறுவ, மாதம்பே
சியாமலி திசாநாயக்க - திரப்பனே, அநுராதபுரம்
K. P. ஜயந்தி ஜயமாலா - பெரலிஹெல, திஸ்ஸமஹாராம
J. B. உதயங்கனி - ஹனுகும்புர, பலாங்கொட
K. G. சஜீவா பிரியங்கனி - நீர்கொழும்பு வீதி, குருணாகல
தனூஜா பிரசாதினி ஹேரத் - மடுள்ள, உட புச்செல்லாவ
S. A. R. நந்தாவதி - பிபிலிகமுவ, போகஹகும்புர
மினுர தேஷான் பிரேமரத்ன - நதுன்கமுவ, கம்பஹா
கிறிஸ்டோபர் லியனகே - பீட்டசன் ஒழுங்கை, கொழும்பு
U. G. K. ஷிருனி செவ்வந்தி - உயங்கொட, மாத்தரை
பிரமிளா கீதா குமாரி - வீரகுல, யக்கல
H. A. இமன்திகா ரணதுங்க - உக்கல்பொட மினுவங்கொட
ரன்திலு ஜயனி லிந்தபிடிய - நவகடதொற, புஸ்ஸெல்லாவ
சமந்தி இஹலகே - பிடிபன தெற்கு, ஹோமாகம
D. C. ஹரங்கஹவ - உசாவிய வீதி, தெற்கு கோபாய்
ரிசா மேனகா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
V. வெற்றிவீரன் - புளியாங்குளம், வவுனியா



4 பரிசு

## கையடக்கத்தொலைபேசிகளை வென்ற அதிஷ்டசாலிகள்

J. இந்திகா அமரசிங்க - தம்பல்கொட, பொஸ்சள்ள
K. A. N. D. பெரேரா - கனிஹிமுள்ள, தேவளங்கள
புஸ்பளத்தா கோரளகே - சம்மன்புர, கொட்டாவ
L. P. ஆஷ்ஷா தம்மயந்தி - நாமரதெளிய, தன்கொட்டுவ
W. நிசார் - கொழும்பு வீதி, பட்டியந்தொட்டை
S. H. ரவிஷ்க்க மதுசங்க - சிங்ஹாசன வீதி, தெவினுவர
P. மஞ்சுள்ள பெரேரா - அம்பதளே, அங்கொடை
G. S. N. பெரேரா - கொட்டாவ, பன்னிப்பிட்டிய
M. T. இர்பான் - கட்டுகஸ்தொட்ட, கண்டி
T. சந்திரலேகா - திருநல்வேலி, யாழ்ப்பாணம்
R. நுவன் விக்ரமசிங்க - தொரட்டியாவ, குருனாகளை
W. G. M. M. தகனி தமாஷா - சலிந்தா, மிரிஸ்ஸ
D. H. G. அநுரமாலி ஆரியதாஸ்ஸ - பஹள போபிட்டிய, பன்மடுள்ள
R. K. ரகுளான் - சாவக்கச்சேரி , யாழ்ப்பாணம்
D. M. திளகா டிஸாநாயக்க - கண்டி வீதி, பஸ்யாள
தாரிகா மதுரங்கி பிரனாந்து - கனேஅரம்ப, பேருவளை
M. T. M. மின்ஹாஜ் - பட்டகொள்ளதெனிய, கண்டி
L. H. நிஸங்கா சன்ஜீவனி - மூனகம, ஹொரன
நுள்வி S. சரீகா - ஆரியம்பதி-1, ஆரியம்பதி
சுபாகரன் சிவாஜினி - பட்டிறுப்பு, களவாஞ்சிகுடி

### போட்டி விதிமுறைகள்

❶ குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது. ❷ பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
❸ பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், ச்ர்வா இன்டிகிரேடட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

● வெற்றி பெற்ற அனைவரும் பின்வரும் தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு உங்களை பற்றிய மேலதிக விபரங்களை அறியத்தரவும் - 0779975796

WP / ... 108




பேபி ஷெரமி "அன்பும் பரிசும்" போட்டித் தொடரில்
பங்கு பற்றிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினை
தெரிவித்துக்கொள்கின்றோம்

Baby Cheramy
தூய அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org